# நிமிர்வோம்

தடைகளைத் தகர்த்து...

திராவிடர் விடுதலைக் கழக மாத இதழ்

ஜூலை 2018 / ரூ.20

www.dvkperiyar.com

nimirvomdvk@gmail.com

ஆசிரியர் குழு

**கொளத்தூர் மணி**

**விடுதலை இராசேந்திரன்**

அலுவலக நிர்வாகம்

**சூலூர் பன்னீர்செல்வம்**

**இரா.செந்தில்**

**ந. அய்யனார்**

இதழ் வடிவமைப்பு

**வெல்கின் கணினி**

அலுவலக முகவரி

**95, டாக்டர் நடேசன் சாலை**

**அம்பேத்கர் பாலம்**

**மயிலாப்பூர், சென்னை 600 004**

**தொலைபேசி எண்:**

044-24980745

அனைத்துத் தொடர்புகளுக்கும்

**இரா. உமாபதி**

72992 30363


# ஒரு நாத்திகரின் 75 ஆண்டு பொது வாழ்வுப் பயணம்

75 ஆண்டுகால பொது வாழ்க்கை; 50 ஆண்டு காலம் ஒரு அரசியல் இயக்கத்துக்குத் தலைமை என்பது வரலாற்றில் எப்போதாவது நிகழும் ஒரு அபூர்வ நிகழ்வு. இந்து பார்ப்பனியம் கட்டமைத்த ஜாதிய ஒடுக்குமுறை சமூக அமைப்பில் கடைக்கோடிப் பிரிவில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு சமூகத்தின் இளைஞர் – சமூகத் தடைகளைக் கடந்து அரசியல் அதிகாரத்தை எட்டிப் பிடித்ததே மகத்தான சாதனைதான். அந்த சாதனைக்குப் பெயர் கலைஞர்! இதையே தனது சமூகப் புரட்சித் தொண்டுக்குக் கிடைத்த மகத்தான வெற்றி என்று பூரித்தவர் பெரியார். அந்த சாதனையை சமூகத்துக்குப் பிரகடனப்படுத்தவே கலைஞருக்கு சிலை வைக்க வேண்டும் என்ற பெரியார், அதற்கு தனது சொந்த நிதியை வழங்க முன் வந்தார்.

இது சூத்திரர்களால் – சூத்திரர்களுக்காக நடக்கும் ஆட்சி என்று சட்டமன்றத்திலே ஒரு முதல்வராக கலைஞர் பிரகடனம் செய்தபோது, அது 'சூத்திர இழிவு' ஒழிப்புக்கான பெரியாரின் களப்போருக்கு சூட்டப்பட்ட மகுடம் என்றே சொல்ல வேண்டும். அதே சூத்திர இழிவு ஒழிப்புக்காக 'கோயில் கர்ப்பகிரகத்தில்' நிலைநிறுத்தப்பட்டிருந்த சூத்திர இழிவை ஒழிக்க பெரியார் போர்க் கொடி தூக்கியபோது, அந்த இழிவை அகற்றிட அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராக்கி பார்ப்பனரின் பிறவி ஆதிக்கத்தைப் புரட்டிப் போடும் சமூகப் புரட்சி தீர்மானத்தை சட்டமன்றத்தில் கொண்டு வந்து அனைத்துக் கட்சி உறுப்பினர்களின் ஆதரவோடு அதை நிறைவேற்றி, சூத்திர இழிவு ஒழிப்பு சரித்திரத்தில் மற்றொரு சாதனைப் படைத்தவர் கலைஞர். "கர்ப்பகிரகம் பாதுகாக்கப்பட வேண்டியதுதான்; ஆனால் அது வர்ணாஸ்ரமப் பாதுகாப்பாக இருக்கக் கூடாது" என்று சட்டமன்றத்தில் அறிவித்தார். இந்திய தேசியப் பார்ப்பன அதிகாரத்தின் முன் இந்த 'சூத்திர இழிவு' ஒழிப்பு. இன்னும் வெற்றி பெற முடியவில்லை. பார்ப்பனிய அதிகாரம் இப்போதும் எவ்வளவு வலிமை பெற்று நிற்கிறது என்பதற்கு இது சான்று.

இத்தகைய 'இந்திய தேசியம்' எனும் பார்ப்பன–பனியா கட்டமைக்குள்ளே செயல்பட வேண்டிய ஒரு மாநில அரசு என்ற எல்லைக்குள்ளேதான் ஒரு மாநில முதல்வராக 'பார்ப்பனிய' சமூகக் கட்டமைப்புகளை சீர்குலைக்கும் திட்டங்களை கலைஞர் முனைப்போடு முன்னெடுத்தார். அடித்தள மக்களுக்கான நல்வாழ்வுத் திட்டங்களான கை ரிக்ஷா ஒழிப்பு, குடிசை மாற்று வாரியம், வீட்டு வசதி வாரியம், பெண்களுக்கு சொத்துரிமை, உள்ளாட்சித் துறைகளில் பெண்களுக்கு 33 சதவீத ஒதுக்கீடு, கணவனை இழந்த பெண்களுக்கு நிதி உதவி, பிச்சைக்காரர் மறுவாழ்வு, திருநங்கை நல வாரியம் என்று இந்த பட்டியல் நீளும். நிலஉச்ச வரம்பை 15 ஏக்கராகக் குறைத்தல், தனியார் பேருந்துகள் அரசுடைமை, தஞ்சை பெரும் பார்ப்பன பண்ணையார்கள் விவசாயக் கூலிகள் மீது நிகழ்த்திய ஒடுக்குமுறைகளிலிருந்து அவர்களை விடுவித்த விவசாயத் தொழிலாளர் பாதுகாப்புச் சட்டம், விவசாயத்துக்கு இலவச மின்சாரம், பெரியார் சமத்துவபுரம், பெரியாருக்கு அரசு மரியாதை, தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என்ற அரசு அறிவிப்பு என்று நீண்ட பட்டியலிட முடியும்.

சமூக நீதித் துறையில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர், இஸ்லாமியர், அருந்ததியினருக்கு தனி ஒதுக்கீடுகள், கிராமப்புற மாணவர்களுக்கு தனி ஒதுக்கீடு, ஜாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டோருக்கு தனி ஒதுக்கீடு, முதல் தலைமுறையாக பட்டதாரியாக படிக்க வரும் மாணவர்களுக்கு (அவர்கள் முன்னேறிய சமுதாயத்தைச் சார்ந்தவராக இருந்தாலும்) கூடுதல் மதிப்பெண் என்ற திட்டங்களை அறிமுகப்படுத்தியதும் அவர் தான். பார்ப்பனிய அதிகாரக் கட்டமைப்புக்கு எதிராக அவர் ஆட்சி அதிகாரத்தைக் கருவிகளாக்கிய இந்த 'சமூக நீதித் திட்டங்கள்' வெற்றிகளையும் தோல்விகளையும் சந்தித்திருக்கின்றன. 'ஏன் வெற்றி பெற்றுக் காட்டவில்லை; கலைஞர் தோற்றுவிட்டார்' என்று குற்றம் சாட்டுவது, இந்திய பார்ப்பன அதிகார மய்யத்தின் கொடூரங்களைப் புரிந்து கொள்ளாதவர்களாக இருக்க வேண்டும். அல்லது புரிந்து கொண்டு நடிப்பவர்களாக இருக்க வேண்டும்.

ஒரு தலைவரின் அய்ம்பது ஆண்டுகால அரசியல் பயணத்தில் நிச்சயமாக சறுக்கல் சரிவுகள் இல்லை என்று எவருமே நியாயப்படுத்த முடியாது. உண்மைதான் சறுக்கல்களும் உண்டு; அதே நேரத்தில் 'உலகமயமாக்கல்' என்ற கொள்கை இந்திய பார்ப்பன அதிகார அமைப்பால் புகுத்தப்பட்ட பிறகு அரசியலிலும், சமூகத்திலும் இது உருவாக்கிய சீரழிவுகள் ஏராளம். சுரண்டல், ஊழல், மக்கள் நலனுக்கான அரசுகள் பன்னாட்டு நிறுவனங்களுக்கு தங்கள் அதிகாரங்களை 'தாரை வார்த்தல்' சீரழிவுகளை கவனத்தில் கொண்டு, அதன் பின்னணியில் சாதனைகளையும் சறுக்கல்களையும் எடை போடுவதே சரியான மதிப்பீடாக முடியும்.

அது மட்டுமல்ல; கடவுளை மதத்தை மறுத்த ஒரு நாத்திகர், 95ஆவது வயது வரை வாழ்ந்து, கடவுள் மத மறுப்புக் கொள்கைகளுக்கு பெருமை சேர்த்திருக்கிறார்.

மரணத்தைத் தடுத்து நிறுத்தும் அறிவியலை இன்னும் மனித சமூகம் எட்டவில்லை. எதிர்கால அறிவியல் அதை சாதித்துக் காட்டும்; ஆனாலும் 95 வயது வாழ்ந்து காட்டிய மனிதரின் பிரிவு – காலம் கடந்தாவது நிகழ்ந்துதான் தீரும். அதற்காக கலங்குவதோ, கண்ணீர் விடுவதோ உணர்வுகளின் வெளிப்பாடாக இருந்தாலும் அதைக் கடந்து செல்ல வேண்டும் என்பதே இயற்கையின் நியதி; பகுத்தறிவுப் பார்வை. மகத்தான மனிதர்களின் உடல்கள் இல்லாமல் போனாலும் அவர்களின் சிந்தனைகளும் செயல்களும் அவர்களின் இருத்தலை உறுதி செய்து கொண்டே இருக்கும்.

சமூக விடுதலை என்பது – இந்த நாட்டில் பார்ப்பனியத்துக்கும் பார்ப்பன அதிகாரத்துக்கும் நேர் எதிரான 'சுயமரியாதை மானுடம்' நோக்கிய புரட்சிகர மாற்றத்துக்குள்தான் சூல் கொண்டு நிற்கிறது. சமூக நீதி, ஜாதி ஒழிப்பு, பகுத்தறிவு, பெண் விடுதலை, சமத்துவம் அனைத்துமே அதில் அடங்கியிருக்கிறது. இந்தப் பாதையில் தனது அதிகாரங்களைக் கொண்டு செலுத்தும் முயற்சிகளில் கலைஞர் முதல்வராக செயல்பட்டிருக்கிறார். ஆட்சிகளைப் பணிய வைக்கும் முயற்சிகளில் எதிர்கட்சித் தலைவராகப் போராடியிருக்கிறார்.

இந்த 'எதிர்நீச்சலில்' தடம் புரளாது எதிர்காலத்தில் கலைஞர் கட்டிக் காத்த இயக்கம் பயணிப்பதோடு மட்டுமல்ல; அதை மேலும் கூர்மையாக்கி விரைவுபடுத்த வேண்டும். அதைத் தான் வரலாறு கோரி நிற்கிறது. அதில்தான் கலைஞரின் பெருமையும் உயிர்ப்பும் தங்கி நிற்கிறது.

**பழந்தமிழ் இலக்கியங்கள் என்பதற்காகக் கொண்டாடப்பட வேண்டிய அவசியமில்லை. நல்ல கருத்துகளை ஏற்பதும் பழமையான மூடநம்பிக்கைகளைப் புறந்தள்ளுவதுமே அறிவார்ந்த சமூகத்தின் அடையாளமாக முடியும்.**



# தமிழ் இலக்கியங்களில் மூட நம்பிக்கைகள்

**- சு. அறிவுக்கரசு -**

*தம் மொழி இழந்து, நம் மொழி பேசும் நிலைக்கு ஆளாகியும்கூட, பார்ப்பனர் தம் பழக்க வழக்கங்களை விடாது கைக் கொள்கின்றனர். தொல்காப்பியம் கூறிய சின்னங்களுக்குப் பதிலாக சிகரெட்டும், விஸ்கி தம்ளரும் தம் கையில் ஏந்தி இன்று இருந்தாலும் மார்பில் முப்புரி நூலை விடாது அணிந்து தம் உயர்வைக் காட்டியே வருகின்றனர் என்பதை மறக்க முடியுமா?*

*தென் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இந்தியா, ஆப்ரிக்கா, அண்டார்டிகா போன்ற இன்றைய நிலப் பகுதிகள் ஒரு காலத்தில் ஒன்றாக இணைந்து இருந்ததாகவும் அது* **கோண்ட்வானா** *என அழைக்கப்படலாம் எனவும் அதன் வடபகுதியில்* **‘லெமூரியா’** *இருந்தது என்றும் அதுவே தமிழ் இலக்கியம் கூறும்* **‘நாவலந்தண்பொழில்’** *என்றும் கூறுவர். 340 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட கடல்கோள் ஒன்றினால் இந்நிலப்பரப்பில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டு லெமூரியா அழிந்ததாகவும் கூறுவர்.அங்கிருந்து வடக்கே குடியேறிய திராவிட மரபின மக்களில் சீரிய இலக்கிய வளம் பெற்றவர்கள் தமிழரே என்பதும் ஆய்வாளர் கூற்று. இத்தகைய இலக்கியங்கள் தாம் மக்கள் சமுதாயத்தின் நிலை பற்றிப் பேசுவதையும் உணர முடிகிறது. அந்த வகையில் தனி மனிதன் சார்ந்த பழக்கம், சமுதாயம் சார்ந்த வழக்கம், அவற்றின் அடிப்படையில் சமுதாயத்தில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளான மரபுகள் போன்றவற்றை இலக்கியங்கள் மூலமாகவே அறிந்து கொள்ள முடிகிறது.*

## நிமித்தம்

*அப்படிப்பட்ட மரபுகளில் ஒன்றாக நிமித்தம் பார்ப்பது என்பது அமைந்துள்ளது. இன்றைய தமிழில் சொன்னால், சகுனம்*

பார்ப்பது, தாங்கள் செய்யத் தொடங்கும் செயல்களின் நன்மை, தீமைகளை முன்கூட்டியே தெரிந்து கொள்ள விரும்பும் மனத்தினவை நிமித்தம் குறிப்பு காட்டுமாம். பிரிந்து சென்ற கணவன் எப்போது திரும்பி வருவான் என மனம் துடிக்கும். மனைவியின் கண் இமை துடித்தல், பல்லியின் வாய் ஒலி வரும் திசை போன்றவை சகுனங்களாகக் கொள்ளப்பட்டன என்பதை அகநானூறு, குறுந்தொகைப் பாடல்கள் குறிக்கின்றன. நல்லவர்கள் வாய்ச் சொல்லும் நல்ல நிமித்தமாகக் கொள்ளப்பட்டன என்பதையும் குறுந்தொகை 223ஆம் பாடல் வரிகள் எடுத்துக் காட்டுகின்றன.

*பேரூர் கொண்ட வார்கலி விழவிற்*
*கெல்வாஞ் செல்வா மென்றியன்றிவண்*
*நல்லோர் நல்லபல வாற்றில்ல..*

என்ற பாடல் இதனைக் காட்டுகிறது. இப்படிப்பட்ட **'நல்வாக்கு'** கூறுவோர்களாகக் குடுகுடுப்பைக்காரர்களையும் பெருமாள் பாட்டுக்காரர்களையும் தமிழர்கள் இன்றளவும் நம்பிக் கொண்டிருக்கின்றனர். எதிர்காலம் பற்றிக் கூறும் ஜோசியர்களையும் நம்பிக் கொண்டுள்ளனர். அதிலும் அரசியல்வாதிகள் ஜோசியர்களே கதி என்று கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கின்றனர். இத்தகையவர்களை மேலை நாட்டினர் ஆறுதல் கூறுவோர் எனப் பொருள்படும் SOOTHE SAYERS என்றுதான் குறிப்பிடுகின்றனர். தமிழர்களோ நிமித்திகன், கணியன் என்று அழைக்கின்றனர்.

சிலப்பதிகாரக் கதையில் ஒரு நிமித்திகன் தொடர்புடைய நிகழ்ச்சி கூறப்பட்டுள்ளது. சேர மன்னனின் அரசவையில் நிமித்திகன், வாக்குப் பொய்த்துப்போன கதை எழுதப்பட்டுள்ளது. மன்னனுக்கு இரண்டு மகன்கள். அவர்களில் இளையவன்தான் நாடாள்வான் என நிமித்திகன் சொன்னான். அவையில் இரண்டு மகன்களும் இருந்தனர். நிமித்திகனின் சொல்லைக் கேட்ட வுடன், இளையமகன் எழுந்து, "இது கூடாது, நடக்காது. வழக்கம் ஒட்டி மூத்தவன்தான் நாடாள வேண்டும், நாடாளுவான்" என உறுதிப்படக் கூறினான். நிமித்திகன் சும்மா விடுவானா? சும்மா விட்டுவிட்டால் அவனுடைய எதிர்காலப் பிழைப்பு என்னாவது? "நான் போட்ட கணக்கு என்றுமே பிழைத்ததில்லை. நீங்கள் இருவரும் பிறந்த காலத்து இருந்த கோள்களின் நிலைகளைத் துல்லியமாகக் கணித்துக் கணக்குப் போட்டு நான் கூறுகிறேன். நான் கூறியதுதான் நடக்கும்" என்று நிமித்திகன் அடித்துக் கூறினான். அரசன் விளங்காமல் விழித்துக் கொண்டிருந்தான். அரசர்கள் பழக்கமே அதுதானே! அந்த நிலையில் இளைய மகன் எழுந்திருந்து சொன்னான், "மன்னரே! நிமித்திகன் சொன்னது நடக்காது, நடக்கக் கூடாது. நான் நாடாள வரமாட்டேன். நான் துறவு பூண்டு விடுவேன். இன்றே இப்போதே துறவியாகிவிட்டேன்" என்று அறிவித்துவிட்டு அரசவையை விட்டு வெளியேறி விட்டான். இளைய மகன் சொன்னது தான் நடந்தது. மூத்தவன் பட்ட மேற்றான். அவன் சேரன் செங்குட்டுவன். இளையவன் துறவுபூண்டு பெரும் புலவனானான். அவன் இளங்கோ அடிகள். சிலப்பதிகார ஆசிரியர், நிமித்திகன் நல்வாக்கு பொய்த்துப் போனது. எனினும் அந்த நம்பிக்கை நீடிக்கிறது என்பதுதான் கொடுமை! மூடநம்பிக்கை என்பது அறியப்பட்ட பிறகும் அதனை நம்புவது - மூடத்தனம்தானே!

### பிறந்த நாள்

தமிழர்கள் பிறந்த நாள் விழாக் கொண்டாடுவது வழக்கமே மன்னர்களின் பிறந்த நாள் விழாக்கள் கொண்டாடப்பட் டுள்ளன. அதுபோலவே புனலாட்டு விழா, பூந்தொடை விழா, உள்ளி விழா, ஓண விழா, கார்த்திகை விழா போன்ற பல்வேறு விழாக் களும் கொண்டாடப்பட்டன.

*சிறந்த நாளினிற் செற்றம் நீக்கிப்*
*பிறந்தகான் வயின் பெருங்கமலமும்...*

என்று தொல்காப்பியம் கூறுகிறது. அரசனுக்குச் சொந்தமான மாமரம் ஒன்றிலிருந்து தானாகவே பழுத்துக் கீழே விழுந்து கிடந்திருந்த மாம்பழத்தை எடுத்துத் தின்றதற்காகப் பெண் ஒருத்தியை இரண்டாகக் கிழித்துக் கொன்ற நன்னன் எனும் மன்னனின் பிறந்த நாளை மக்கள் கொண்டாடினார்கள் என்று மதுரைக் காஞ்சி பெருமைப்படப் பாடுகிறது. குரவைப் பாட்டுகள், பலவகைக் கூத்துகள், புனைந்துரைகள் போன்றவற்றை நிகழ்த்தி **சேரி**

**மக்கள்** நன்னன் பிறந்த நாளைக் கொண்டாடினார்கள் என்று அப்பாடல் கூறுகிறது.

> *மன்று தொறும் நின்ற குரவை சேரிதொறும்*
> *உரையும் பாட்டும் ஆட்டும் விரைஇ*
> *வேறுவேறு கம்பலை வெறிகொள்பு மயங்கிப்*
> *பேரிசை நன்னன் பெறும்பெயர் நன்னாள்*
> *சேரி விழவின் ஆர்ப்பெழுந் தாங்கு...*

என மதுரைக் காஞ்சி பாடுகிறது.

பார்ப்பனர் வசிக்கும் பகுதி கிராமம் - வேளாளர் வசிக்கும் பகுதி ஊர் - ஒடுக்கப்பட்டோர் வசிக்கும் பகுதி சேரி - என்பது அக்கால வகைப்பாடு நால்வருண ஜாதிப் பாதிப்பு இலக்கியங்களில் பிரதிபலிக்கிறது.

### புனலாடல்

மழை பொழிந்து ஆற்றில் நீர்ப் பெருக்கு ஏற்படும் காலத்தில் மகிழ்ச்சிப் பெருக்கால் ஆற்றில் நீராடி மகிழ்வது புனலாட்டு விழா எனப்பட்டது. ஆற்றில் புனலாடியதைப் பதிற்றுப் பத்தும் (பாடல் 48), கடலில் புனலாடியதைப் பட்டினப்பாலையும் (பாடல் 97) பாடுகின்றன. பொன்னாலான சங்கு, நண்டு, இறவு (இறால்), வாளை ஆகியவற்றைப் புதுப்புனலில் இட்டுப் போக்கி வேண்டிக் கொண்ட செயலைப் பரிபாடல் (பாடல் 10) எடுத்துக் கூறுகிறது. இவ்வேண்டுதலால் சங்கும் நண்டும், இறாடல், வாளை மீன்களும் ஆற்றில் நிறையக் கிடைக்கும் என்று தமிழரின் நம்பிக்கையாம். "தீது நீங்கக் கடலாடியும்...." எனப் பட்டினப்பாலைப் பாடல் 97 கூறுகிறது.

> *வாரணாசியோர் மறையோம்பாளன்*
> *ஆரணவு வாத்திய பஞ்சிகனென்போன்*
> *பார்ப்பனி சாலிகாப்புக் கடைகழிந்து*
> *கொண்டோன் பிழைத்த தண்டமஞ்சித்*
> *தென்றிசைக் குமரியாடிய வருவோள்...*

என மணிமேகலையும், 'குமரியம் பெருந் துறையாடி மீள்வேள்' எனச் சிலப்பதிகாரமும் கடலில் நீராடுவதைப் பாடுகின்றன. இது எதற்காக? **தீது** நீங்கக் கடலாடுவதாம்! தீதைச் செய்யாமல் இருக்கலாமே! ஏன் செய்ய வேண்டும்? அதைப் போக்க ஏன் கடலில் குளிக்க வேண்டும்? **குளித்தால் அழுக்குப் போகலாம், தீமை போகுமா?** தீமை 'பொருளா?' தீமை 'செயல்' அல்லவா? சங்க இலக்கியங்களில் சுட்டப்பட்ட இந்தப் பழக்கம் தான் இன்றளவும் காசி இராமேசுவரம் போய்க் குளித்து வரும் வழக்கமாகத் தமிழர்களின் மரபாக நீடித்து வருகிறது!

### ஓண விழா

மாவலி மன்னன் சேர நாட்டைப் பெரும்பேருடனும் புகழுடனும் ஆண்டவன், அவனை அழித்தற் பொருட்டு விஷ்ணு எனும் வைணவக் கடவுள் வாமன் எனும் குள்ளப் பார்ப்பான் உருவில் வந்து மூன்றடி மண் கேட்டான் எனவும், நிலத்தை ஓரடியாகவும் வானத்தை இரண்டாம் அடியாகவும் அளந்து விட்டு, மூன்றாம் அடியை மாவலியின் தலையில் வைத்து அழுத்தி நிலத்துக்குள் அழுத்தி அழித்து விட்டதாகப் பழங்கதை. மாவலியின் இறுதி விருப்பத்திற்கிணங்க அவன் ஆண்டுக்கொரு முறை தன் நாட்டைப் பார்க்க வருவதாகவும் அதனை அந்நாளில் மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதாகவும் கூறப்படும் விழா ஓண விழா. மலையாள மக்களால் 7 நாள் விழாவாகக் கொண்டாடப்படும் விழா. தமிழர்களால் கொண்டாடப்படவில்லை. பண்டைக் காலத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டதாக மதுரைக் காஞ்சி 'கழுநீர் கொண்ட எழுநாள் அந்தி' (பாடல் 427) எனப் பாடுகிறது.

அழிக்கப்பட்ட மாவலி மன்னனின் பெருமை கூறும் விழாவாக மலையாள மக்களால் இன்றளவும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும் ஓணவிழா தமிழர்களால் கொண்டாடப்படுவதில்லை. அதைவிடக் கொடுமையாக அழித்தவனின் பெருமை பாடும் விழாவாக, பார்ப்பனர்கள் பூணூல் மாற்றும் சடங்கை ஓணத்திற்கு அடுத்த அவிட்ட நாளில் கொண்டாடுகிறார்கள். ஆவணி அவிட்டம் என்று பூணூல் புதுப்பிக்கும் விழாவாக மாற்றப்பட்டுவிட்டது. பண்பாடு அழிக்கப் பட்டதற்கு இதுவும் ஒரு சான்று.

### கார்த்திகை விழா

> *மழைகால் நீங்கியமாக விசும்பிற்*
> *குறுமுயல் மறுநிறங்கிளரமதி நிறைந்து*

*அறுமீன் சேரு மகலிருள் நடுநாள்*
*மறுகுவிளக் குறுத்து மாலை தூக்கிப்*
*பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய*
*விழவுடனயர வருகதில்லம்ம...*

என அகநானூறு எடுத்துக்கூறும் விழா கார்த்திகை விழா எனப்படுகிறது. மழையை வழியனுப்பத் தமிழர்கள் எடுத்த பண்பாட்டு விழா என்கிறார்கள். மழையை வழியனுப்ப வானத்தை நோக்கி நெருப்பைக் காட்டுகிறது இந்த விழா என்கிறார்கள். இதைத்தான் கார்த்திகை தீபம் என்கிறார்கள். திருவண்ணா மலை கோயிலில் பத்து நாள் விழா, பக்தர்கள் வீட்டினில் மூன்று நாள் விழா. மண்ணுக்கும் விண்ணுக்கும் நீண்ட ஒளி வடிவாய்ச் சிவபெருமான் நின்று பிரம்மா, திருமால் எனும் இரு கடவுள்களின் செறுக்கை அழித்ததாகவும் திருவண்ணாமலை தீபத்திற்கு விளக்கம் கூறுகிறது பழங்கதை. மழையை நிறுத்தும் செயல் என்பது அண்மைக்காலப் பேராசிரியர் களின் புதிய கண்டுபிடிப்போ? அயோத்திதாசப் பண்டிதர் என அழைக்கப்படும் காத்தவராயன் எனும் ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னோடித் தலைவர் இதனை ‘கார்த்துல தீபம்’ எனப் பெயர் மாற்றித் தமிழர் கொண்டாட வேண்டும் என்றேகூடப் பிரச்சாரம் செய்தார். இதற்கு என்ன விளக்கமோ?

## ஆழியிழைத்தல்

கணவனைப் பிரிந்து தனிமையில் வாடும் பெண்டிர், தலைவனின் வருகையை அறிவதற்காகக் குறிபார்க்கும் முறை ஆழியிழைத்தல் எனப்படும். கடலிழைத்தல் என இலக்கியங்களில் குறிக்கப்பட்ட சடங்காகும். ஒரு வட்டம் வரைந்து, அதனுள் சிறு சிறு வட்டங்களை வரைந்து பின் அவற்றின் கூட்டுத் தொகையை அறிந்து ஒற்றைப் படை எண்ணாக இருந்தால் இன்ன பலன், இரட்டைப் படையாக இருந்தால் இன்ன பலன் என அறிவது இது. மற்றொரு முறையையும் கூறுகிறார்கள். கண்ணை மூடிக் கொண்டு மணலில் வட்டம் வரைய வேண்டுமாம். வட்டம் முழுமையாக அமைந்து கோடுகள் இணைந்திருந்தால் எண்ணியது நடக்கும். இல்லையேல் எண்ணியது நடக்காதாம். இப்படிப்பட்ட விளக்கங்களைத் திருவிருத்தம், திருக்கோவையார் நூல்கள் கூறுகின்றன. இவற்றைக் குறுந்தொகை (பாடல் 358), அகநானூறு (351), கலித்தொகை (பாடல் 142) போன்ற நூல்கள் கூறுகின்றன. ஒன்றையா, இரட்டையா எனச் சிறார்கள் விளையாடும் விளையாட்டுத்தனமான ‘நம்பிக்கை’ அல்லவா? அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்பதில் நம்பிக்கைக் கொண்டவர்கள், நடப்பதை எதிர்கொள்ள வேண்டியதுதானே! நடக்க இருப்பதை முன்கூட்டியே தெரிந்து கொள்ளத் துடிக்கும் மனம் குழந்தைத்தனம் அல்லவா? அது சிறுபிள்ளைத்தனத்திற்குத் தமிழர் சமுதாயம் தொடர்ந்து ஆளாகலாமா?

## விரிச்சி கேட்டல்

ஒரு செயலைத் தொடங்குமுன் பிறர் தற்செயலாய்க் கூறும் சொல்லைச் சகுனமாகக் கொள்ளும் பழக்கம் தமிழர்களிடையே இருந்தது, இருக்கிறது. இதை அவர்கள் விரிச்சி என்றனர். இதனை அசரீரி எனவும் கூறுவர். இந்த அசரீரி என்பது உருவமற்று வானவெளியில் எதிர்பாராமல் தோன்றும் குரல் ஆதலால் விரிச்சிக்கு அசரீரியைக் கூறக்கூடாது என்றும் சிலர் கூறுவர். இலக்கியத்தில் இருது ‘வாய்ப்புள்’ எனக் கூறப்படுகிறது (முல்லைப் பாட்டு 18).

*கொடுங்கோன்கோவலர் பின்னின்றுய்த்தர*
*இன்னே வருகுவர் தாயரென்போன்*
*நன்னர் நன்மொழி கேட்டனமதனால்*
*நல்லநல்லோர் வாய்ப்புள் தெவ்வர்*
*முனைகவர்ந்து கொண்ட திதையர் வினைமுடித்து*
*வருதல்தலைவர் வாய்வது நீ நின்*
*பருவர லெவ்வங் களைமாயோயெனக்*
*காட்டவும்...*
*(முல்லைப் பாட்டு 15-22)*

என்றவாறு விரிச்சி கேட்கும் முறையைத் தமிழ் இலக்கியம் கூறும். விரிச்சி கேட்கும்போது, தெய்வத்தைத் தொழுது கேட்பது வழக்கம். எனவே, தெய்வத்தோடு தொடர்புபடுத்தி இப் பழக்கத்தை ஊன்றி நட்டு வைத்துள்ளனர்.

ஆனால்,

*என்னை மார்பிற் புண்ணும் வெய்ய*
*நடுநாள் வந்து தும்பியும் துவைக்கம்*
*நெடுநகர்வரைப்பின் விளக்கும் நில்லா*
*துஞ்சாக்கண்ணே துயிலும் வேட்கும்*

*அஞ்சுவருகுரா அற்ற குரலுந் தூற்றும்*
*நெல்நீரெறிந்து விரிச்சசி ஓர்க்குஞ்*
*செம்முது பெண்டின் சொல்லும் நிரம்பா...*

எனும் புறநானூற்றுப் பாடல் (280) விரிச்சி வாக்குப் பொய்த்துப் போனதைச் சுட்டிக் காட்டுகிறது. என்றாலும், இதன்பால் 'ஊட்டப்பட்ட' நம்பிக்கை மறையவில்லை. இதுதான் பண்பாடோ? அய்யகோ!

*அச்சமும் உவகையும் எச்சம் இன்றி*
*நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்*

பார்க்கும் பழக்கம் 3000 ஆண்டுகளுக்கு முன்பே ஊட்டப்பட்டு விட்டதைத் தொல்காப்பியம் (பொருள் 88) கூறுகிறது. அதனை வழிமொழிந்து புறநானூறு (204), அகநானூறு (141), நற்றிணை (161) போன்ற இலக்கியங்கள் உறுதிப்படுத்து கின்றன.

### ஓந்தி-தாயத்து

சூழலுக்கேற்ற நிறம் மாறும் ஆற்றல் பெற்ற பங்சோந்திகூட நிமித்தம் (சகுனம்) உணர்த்தும் நிலையில் இருந்ததாகக் குறுந்தொகை (பாடல் 140) கூறுகிறதே! இந்த ஓந்தியின் வாலை ஞாயிற்றுக்கிழமையில் அறுத்துக் காயப்போட்டு தாயத்து செய்து அடைத்து குழந்தைகளின் கழுத்தில் காப்பு அணியாக அணிவிக்கும் பழக்கத்தையும் தமிழர்கள் கொண்டிருந்ததை ஆய்வாளர்கள் குறிப்பிட்டுக் கூறுகின்றனர்.

### பல்லி சொல்

வெப்ப நாடுகளில் மிகுதியாகக் காணப்படும் ஊர்வன உயிர்களில் ஒன்று பல்லி. தொல் பழங்காலப் பெரு உயிரான டைனோசர் இனத்தின் அழிவுக்குப் பின்னர் உருமாற்றம் அடைந்த உயிரினம் பல்லி ஆகும். பல்லிகளில் சற்றொப்ப 70 வகைகளும் 300 இனங்களும் இருப்பதாகக் கலைக் களஞ்சியம் கூறுகிறது. இந்த நிலையில் அவற்றின் வாயொலியை நிமித்தமாகக் கருதினர் தமிழர். பல்லியின் ஒலியை நிமித்தமாக வடநாட்டார் கருதவில்லை என்று நிமித்தம் பற்றிக் கூறிய வடமொழி வராக மிகிரர் நூலை ஆதாரம் காட்டி ஆய்வாளர்கள் கூறுகின்றனர். தமிழன் மட்டுமே பல்லி சொல் கேட்டுப் பதறியது, பதறுவது பரிதாபமே!

பல்லியினம் நிலத்தில் வசிக்கும் வல்லமை பெற்ற முதல் உயிரியாக இருந்தமையால் அது படைப்புக் கர்த்தா எனக் கருதப்பட்டு வணங்கப்பட்டது எனக் 'கலைமகள்' ரகுநாதாச்சாரியார் கூறுகிறார் (கலைமகள் தொகுதி 6). வாயில் ஒலி எழுப்பிய முதல் உயிரி பல்லி என்பதால் பல்லி சொல்லுக்குப் பலன் ஏற்படுத்தினார்கள் என்றும் அவரே கூறுகிறார்.

சங்க காலத்தில் பல்லியின் ஒலி நிமித்தமாகக் கருதப்பட்டதைக் குறுந்தொகை (பாடல் 16), அகநானூறு (பாடல் 156), நற்றிணை (பாடல் 245, 333), அகம் 387 போன்ற இலக்கியங்களில் காணலாம். ஆனால், பல்லி இருக்கும் திக்கு, ஒலி கேட்ட கிழமை, ஒலிகளின் எண்ணிக்கை போன்றவற்றைக் கணக்கிட்டுப் பலன் கூறும் 'கவுளி சாத்திரம்' எந்தச் சுயநலக் கும்பலின் சதி? என்ற கேள்வி எழுகின்றது.

குறுந்தொகைப் பாடல் 16 பல்லி எழுப்பும் ஓசையை 'உகிர் நுகி புரட்டும் ஓசைபோல்' எனக் கூறுகிறது. கல்லில் தீட்டிய அம்பின் நுனியை, விரல் நுனியால் தடவிப் பார்க்கும்போது எழும் ஓசையோடு உதாரணம் காட்டுகிறது. அடுத்த வரியிலேயே, 'செங்காற் பல்லி தன் துணை பயிறும்' எனப் பாடி, சிவந்த கால்களை உடைய பல்லி தன் துணையை அழைக்கும் ஓசை எனப் 'பல்லி சொல்லை' விளக்குகிறது. ஆண் பல்லியோ, பெண் பல்லியோ தன் துணையை எதற்கு நாடும்? எதற்கு அழைக்கும் என்பது நாம் அறிந்தது தானே? அப்படி இருக்கையில் 'அந்த ஒலி' நமக்கு நல்ல ஒலி அல்லது தீய ஒலி எனக் கொள்வது அறிவார்ந்த தமிழ்ச் சமுதாயத்திற்குப் பொருத்தம் உடையதுதானா? அந்த ஒலி காதில் பட்டவுடன் பரிகாரமாகத் தரையை விரலால் தட்டும் தமிழர்கள் இருக்கிறார்களே! அந்த ஒலியைச் சிவனுடன் தொடர்புபடுத்துவதும் அதற்கு ஊறுவிளைவித்தால் நோய்வாய்ப்படுவர் என மிரட்டியிருப்பதும் பிராயச்சித்தமாக வெள்ளிப் பல்லி, தங்கப் பல்லி செய்து கோயிலில் வைப்பதுமான சடங்குகளில் ஆழ்ந்திருக்கிறார்களே, தமிழர்கள் திருக்காளத்தி கோயிலுக்கு வெள்ளியால் பல்லி செய்து அளித்தாரே, காஞ்சிபுரம் சங்கரமடத் தலைவர்! எப்படியெல்லாம் மூடத்தனத்தை வளர்க் கிறார்கள் என்பதைச் சிந்திப்பதே இல்லையே!

“ஊருக்குச் சொல்லுமாம் பல்லி! தானே விழுமாம் கழுநீர்ப் பானையில் துள்ளி” என்கிற சொலவடை உண்டே! பிறர்க்கு நிமித்தம் கூறும் பல்லி, கழுநீர்ப் பானையில் விழுந்து செத்துப் போகிறதே! மயிலின் இறகு வைக்கப்படும் இடத்தில் வரமறுக்கிறதே, பல்லி! ஏன்? யோசித்தோமா! யோசிக்க வேண்டாவா?

**கண் துடித்தல்**

ஆண்களின் கண் துடித்தல் சகுனமாகக் கருதப்படவில்லை. பெண்களின் கண் துடிப்பதை மட்டும் சகுனமாகக் கொள்ளும் வழக்கம் தமிழரிடையே இருந்துள்ளது. அதிலும் இடக்கண் துடித்தால் நல்ல சகுனம், வலது கண் துடித்தால் கெட்ட சகுனம் என்று ஒரே உடலின் உறுப்புகளில் பாகுபாடு செய்துள்ளனர். சிலப்பதிகாரம் ஒன்றில் மட்டுமே இந்த நம்பிக்கை குறிப்பிடப்படுகிறது. ‘எண்ணுமுறை யிடத்தினும் வலத்தினுந் துடித்தன’ எனப் பாடுகிறது. இந்திர விழா ஊரெடுத்த காதையில், ‘மாதவியின் வலக்கண் துடித்ததாம்; அதனால் கோவலன்-மாதவி ஊடல் நடந்து பெரிதாகிப் பிரிவில் முடிந்ததாம்’ எனக் கூறப்பட்டுள்ளது.

**தும்மல்**

தும்மலைச் சகுனமாகக் கொள்ளும் போக்கு தமிழரிடையே உள்ளது. தும்மல் வந்தால் பிறர் அவரை நினைப்பதுவாகக் கருதும் போக்கு உள்ளது. அறநூல் எனப் போற்றப்படும் திருக்குறளில் தும்மினால் பிறர் நினைப்பதாகக் கருதும் நிலை காட்டப்படுகிறது. யார் உம்மை நினைத்ததால் நீர் தும்மினீர் எனக் கேட்கும் பெண்ணைத் திருக்குறள் காட்டுகிறது. இதற்காக, வந்த தும்மலை அடக்கியபோது என்னிடம் ஏன் மறைக்கிறீர் எனக் கேட்டுச் சண்டை போட்ட பெண்ணையும் திருக்குறள் காட்டுகிறது. ஆக, தும்மல் பற்றிய நம்பிக்கை தமிழர்களிடையே அப்போதே நிலவியுள்ளளது.

நல் விழாக்கள் நடைபெறும் நேரத்தில் தும்முவது கெட்ட சகுனமாகக் கருதப்படுகிறது. திருமணங்களில் தும்முவது கெட்ட சகுனமாம். இதனால், கடவுள்களின் திருமணமே தடைப்பட்டிருப்பதைப் புராணக் கதைகள் கூறுகின்றன. இன்னும்கூட திருமணங்களில் தாலி கட்டும் நேரத்தில் யாரும் தும்மக் கூடாது என்பதில் குறியாக இருப்பார்கள். மீறி யாராவது தும்பி விட்டாலும் அச்சத்தம் பிறர்க்குக் காதில் விழாதவாறு அந்த நேரத்தில் வலுவாக எழுப்பப்படும் கொட்டுமேளச் சத்தம் அமுக்கிவிடும். அப்படி ஒரு பயன்பாடுகூட மேளம் அடிப்பதற்குக் காரணமாம்! என்ன விந்தை இது?

(தொடரும்)

‘விழிகள் பதிப்பகம்’ வெளியிட்ட
‘திராவிடர் கழகம் கட்சி அல்ல; ஒரு புரட்சி இயக்கமே’
என்ற நூலிலிருந்து

## மதங்களைக் கைவிட்ட நாடுகளே பொருளாதார வளர்ச்சி அடைய முடியும்

*“மதங்களைக் கொள்கையாக ஏற்றுக் கொண்ட மத ஆட்சிகள், அந்தக் கொள்கையை கைவிடுமானால், பொருளாதாரத்தில் வளர்ச்சி பெற வாய்ப்புகள் உண்டு” என்று இங்கிலாந்தில் உள்ள ‘பிரிஸ்டல் பல்கலைக்கழகம்’ நடத்திய ஆய்வு தெரிவிக்கிறது. ஆய்வின் முடிவுகளை சர்வதேச புகழ் பெற்ற ‘சயின்ஸ் அட்வான்சஸ்’* (Science Advances) *இதழ் வெளியிட்டுள்ளது.*

*இங்கிலாந்தில் உள்ள பிரிஸ்டல் பல்கலைக்கழக ஆய்வு - புதிய வெளிச்சத்தைத் தந்திருக்கிறது. “ஒரு நாடு எந்த அளவுக்கு மத நம்பிக்கையில் மூழ்கி இருக்கிறதோ, அந்த அளவுக்கு ஏழ்மையில் சிக்குண்டு கிடக்கிறது” என்று புதிய ஆய்வு கூறுகிறது. அல்பேனியாவிலிருந்து ஜிம்பாவே வரை உள்ள உலகின் பல்வேறு நாடுகளின் தனி மனித வருவாய், சமூகப் பிரச்சினை, நாணய மதிப்பு, வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றை சேகரித்து விரிவாக நடத்தப்பட்ட ஆய்வு இது. மதச்சார்பின்மை என்ற கொள்கை வளர்ச்சிக்கு ஒரு முன் நிபந்தனை. மதச்சார்பற்ற கொள்கையைப் பின்பற்றுவதாலேயே பொருளாதார வளர்ச்சி தானாக வந்து விடும் என்பது இதன் அர்த்தமல்ல” என்று ஆய்வுக் குழுவை வழி நடத்திய டேமியன் ரக்* (Damien Ruck) *கூறியுள்ளார். “அதே நேரத்தில் மதச்சார்பின்மை என்ற கொள்கை வழியாக தனி மனித உரிமைகளையும் மாண்புகளையும் கூடுதலாக மதித்துப் பின்பற்றும்போது பொருளாதார முன்னேற்றத்தை அது சாத்தியமாக்குகிறது. இது எங்கள் ஆய்வில் கண்டறிந்த முடிவு” என்றார் ரக்.*



# ‘தலித்’ வீரர்களைப் புறக்கணிக்கும் கிரிக்கெட் பார்ப்பனியம்

**“கிரிக்கெட்டில் வியர்வை சிந்த வேண்டியதில்லை; பிறரைத் தொட வேண்டியதில்லை; சுறுசுறுப்பும் தேவையில்லை. இவை பார்ப்பனர்களின் சோம்பேறித்தனமான வாழ்க்கை முறைக்கு பொருத்தமாக இருப்பதாலேயே, ஒட்டுமொத்த கிரிக்கெட் விளையாட்டு துறையுமே பார்ப்பனர்களின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது.**

*இந்தியாவின் 85 ஆண்டு டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில், இந்திய அணியில் விளையாடிய 289 ஆண் கிரிக்கெட் வீரர்களில், 4 பேர் மட்டுமே தாழ்த்தப்பட்டவர்கள். தென்னாப்பிரிக்க கிரிக்கெட் அணியில், கறுப்பின மக்களின் குறைவான பிரதிநிதித்துவம் கருத்தில் கொள்ளப்பட்டதைப்போல, இந்தியாவில் தாழ்த்தப்பட்ட கிரிக்கெட் வீரர்களின் குறைவான பிரதிநிதித்துவம், கண்டுகொள்ளப் படவில்லை. தென்னாப்பிரிக்க விளையாட்டுத் துறையின் தூண்டுதலால், தென்னாப்பிரிக்க கிரிக்கெட் சங்கம், கறுப்பர்களுக்கான இட ஒதுக்கீட்டைக் கொண்டு வந்தது. இட ஒதுக்கீட்டை முழுமையாக அமல்படுத்துவதற்கு முன்பு வரை, தென்னாப்பிரிக்க கிரிக்கெட் சங்கம், எந்த சர்வதேச போட்டியையும் நடத்த அனுமதிக்கப் படவில்லை.*

*இந்தியாவைப் பொறுத்தவரை, இந்திய குடியரசு கட்சி தலைவர் ராமதாஸ் அத்வாலே (மத்திய அமைச்சர்), கிரிக்கெட்டில் இடஒதுக்கீட்டை கொண்டுவர தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறார். ஆனாலும், இந்த சிக்கலைப் பற்றி இதுவரை எந்த உயர்மட்ட*

கலந்துரையாடலும் நடைபெறவில்லை. கிரிக்கெட்டில், தாழ்த்தப்பட்டவர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் இல்லாமல் இருப்பதற்கான காரணங்களை இந்த கட்டுரையில் ஆராய்வோம்.

இந்தியாவில் 17 சதவீதம் பேர் தாழ்த்தப்பட்டவர்கள் இருந்தும், வினோத் காம்பிளி, ஏக்னாத் சோள்கர், கர்சன் கவ்ரி, புவனேஷ்வர் குமார் ஆகிய நான்கு தாழ்த்தப்பட்டவர்கள் மட்டுமே, இந்திய கிரிக்கெட் அணிக்காக விளையாடியுள்ளனர். இந்திய ஜாதி அமைப்பின் கடைநிலையில் இருக்கும் தாழ்த்தப்பட்டவர்கள், தங்களுடைய ஜாதி அடையாளங்களை மறைத்து வாழும் நிலை இருப்பதால், இந்த நால்வரைத் தவிர வேறு தாழ்த்தப்பட்டவர்கள் யாரேனும், இந்திய அணிக்காக விளையாடியுள்ளனரா? என்பதை கண்டுபிடிப்பதில் சிக்கல் உள்ளது. இது ஒருபுறம் இருக்க, மறுபுறம் பார்ப்பனர்களோ, தங்கள் மக்கள்தொகையை விட மிக அதிக அளவில் கிரிக்கெட் அணியில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். பாரபட்சமான வீரர்கள் தேர்வுமுறை, பார்ப்பன வாழ்வுமுறைக்கு உகந்த வகையில் கிரிக்கெட் விளையாட்டின் (ஒருவருக்கொருவர் உடல்ரீதியாக மோதிக் கொள்ளத் தேவையற்ற) மெதுவான போக்கு ஆகியவையே இந்த ஆதிக்கத்துக்கான காரணமாக கூறப்படுகின்றன.

## அறிஞர்களின் ஆய்வுகள்

தாழ்த்தப்பட்டவர்கள் குறைவான எண்ணிக்கையில் அணியில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான சில காரணங்களை எழுத்தாளர் ராமச்சந்திர குஹா, தன்னுடைய "A corner of a foreign field: The Indian history of a british sport (2014)" என்ற ஆய்வு நூலில் முன்வைத்துள்ளார். 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே, பல்வன்கர் பாலூ என்ற தாழ்த்தப்பட்ட கிரிக்கெட் வீரரும், அவருடைய மூன்று சகோதரர்களும், ஹிந்து ஜிம்கானா அணிக்காக விளையாடியுள்ளனர். 1932 ஆம் ஆண்டு உலகின் முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நடப்பதற்கு முன்பே, இவர்கள் ஓய்வு பெற்றுவிட்டனர். ஆனால், பிற்கால தாழ்த்தப் பட்டவர்கள், இவர்களை ஏன் முன்மாதிரியாக எடுத்துக்கொள்ளவில்லை? என்றும் ராமச்சந்திர குஹா கேள்வியெழுப்பி யுள்ளார். விளையாட்டு வீரனாவதை விட, வழக்கறிஞராவதையும், மருத்துவராவதையும், அரசு அதிகாரியா வதையும், பேராசிரியராவதையுமே தாழ்த்தப் பட்டவர்கள் முக்கியமாக கருதியிருக்கலாம் என்றும் கருதுகிறார்.

குஹாவின் இந்த கருத்துக்கு நேரெதிரான கருத்தை, போரியா மஜும்தார் முன்வைக்கிறார். அவர் சர்வதேச விளையாட்டு வரலாற்று இதழில் எழுதிய, "Cricket in India: Representative playing fields to restrictive preserve (2006)" என்ற ஆய்வு கட்டுரையில், பல்வன்கர் பாலூவுக்கு கிடைத்த வாய்ப்பு, மற்ற தாழ்த்தப்பட்டவர் களுக்கு கிடைக்கவில்லை என்கிறார். இங்கிலாந்து அரசின் நேரடி கட்டுப்பாட்டில் கிரிக்கெட் இருந்தவரை, தாழ்த்தப்பட்டவர் களுக்கு நல்ல பிரதிநிதித்துவம் இருந்ததாகவும், பிற்காலத்தில், தாழ்த்தப்பட்டவர்களுக்கு வாய்ப்புகள் இல்லாமல் போனதற்கு, பிற்கால இந்தியாவின் பெரு 'கார்ப்பரேட்' நிறுவனங் களின் ஆதரவே காரணமெனவும் சுட்டிக் காட்டுகிறார். பெருநிறுவனங்களின் கட்டுப் பாட்டுக்குள், கிரிக்கெட் விளையாட்டு சென்றதால், அது படித்த மேட்டுக்குடி நகர மக்களின் விளையாட்டாக மாறிப் போனதாக வும், இதுவே அணியில் தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதித்துவ வீழ்ச்சிக்கு காரணம் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். சமீபத்தில் இயக்குனர் சுசீந்திரனின் இயக்கத்தில் வெளியான "ஜீவா" (2014) என்ற தமிழ் திரைப்படத்தில், வீரர்களை தேர்வு செய்யும்போது, பூணூலை அணிந்துள்ளனரா? என்பதை அறிய, முதுகைத் தடவிப்பார்க்கும் முறையை வெளிப்படையாக காட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

"கிரிக்கெட்டில் வியர்வை சிந்த வேண்டிய தில்லை; பிறரைத் தொட வேண்டியதில்லை; சுறுசுறுப்பும் தேவையில்லை. இவை பார்ப் பனர்களின் சோம்பேறித்தனமான வாழ்க்கை முறைக்கு பொருத்தமாக இருப்பதாலேயே, ஒட்டுமொத்த கிரிக்கெட் விளையாட்டு துறையுமே பார்ப்பனர்களின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. குறிப்பாக, 1960-1990 வரை, 11 பேரைக் கொண்ட இந்திய அணியில், ஏறத்தாழ 6 பேர் பார்ப்பனர்களாக இருந்துள்ளனர். சில நேரங்களில் 9 பேர் வரை பார்ப்பனர்கள் அணியில் இடம்பெற்ற வரலாறும் உண்டு. சோம்பேறித்தனமான கிரிக்கெட் அணியின்

நிலை இவ்வாறு இருக்கையில், இந்தியாவின் தேசிய விளையாட்டான சுறுசுறுப்பான ஹாக்கி அணியிலோ, பார்பனரல்லாதோரே பெரும் பான்மையாக இருந்து, விளையாடி வருகின்றனர்." "கிரிக்கெட் அதிக நேரத்தை விரயமாக்கும் விளையாட்டாக இருப்பதால், அது மேட்டுக்குடியினரின் விளையாட்டாக மாறிவிட்டது" என்ற எழுத்தாளர் ஆன்ட்றூ ஸ்டீவென்சனின் கருத்தும், போரியா மஜூம் தாரின் கருத்துக்கு வலு சேர்ப்பதாக உள்ளது.

தெருவோரங்களில், சிறுவர்கள் விளை யாடும் கிரிக்கெட் விளையாட்டுகளில், மட்டைக்குச் சொந்தக்காரனாக இருக்கும் சிறுவன், தானே முதலில் மட்டை வீச வேண்டுமென்றும், இதற்கு சம்மதித்தால் மட்டுமே, தன்னுடைய மட்டையை பிறருக்கு விளையாடத் தருவதாகவும் நிபந்தனை விதிப்பதுண்டு. இதே போல்தான், முற்கால இங்கிலாந்து கிரிக்கெட் அணியிலும், பணம் படைத்தவர்கள் மட்டை வீசுபவர்களாகவும், பணம் இல்லாமல், கிரிக்கெட் சங்கத்தின் பணத்தில் விளையாடுபவர்கள் பெரும்பாலும் பந்து வீசுபவர்களாகவும் இருந்தனர். இதே நடைமுறை, பல்வேறு வடிவங்களில் இன்றும் பல அணிகளில் தொடர்கிறது. தென்னாப்பிரிக்க அணியில், வசதியான வெள்ளையர்கள் பெரும்பாலும் மட்டை வீசுபவர்களாகவும், ஏழையான கறுப்பர்கள் பெரும்பாலும் பந்து வீசுபவர்களாகவும் இருக்கின்றனர். கிரிக்கெட் விளையாட்டு உருவாக்கப்பட்டு ஒரு நூற்றாண்டு கடந்துவிட்ட நிலையில், 2014 இல் தான் முதன்முறையாக ஒரு கறுப்பர் (டெம்பா பவுமா), தென்னாப்பிரிக்க அணியில் மட்டை வீச்சாளராக களம் இறங்கினார். தென்னாப்பிரிக்க கறுப்பர் நிலையில் தான் இந்திய தாழ்த்தப்பட்டவர்களும் இருக்கின்றனர்.

பூனா கிரிக்கெட் சங்கத்தில், 100 மணி நேரம் பந்து வீசியும், தனக்கு ஒரு முறை கூட மட்டை வீச வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்ற தகவலை, தாழ்த்தப்பட்ட கிரிக்கெட் வீரர் பல்வன்கர் பாலூ, தன் மகனிடம் பதிவு செய்து விட்டு சென்றிருக்கிறார். தண்ணீர் அருந்த, பாலூவுக்கு தனி குவளையும், அணியின் பார்ப்பன முன்னேறிய மற்றும் பிற்படுத்தப்பட்ட வீரர்களுக்கு தனி குவளையும் வழங்கப்பட் டுள்ளது. ஜாகீர் கான், மொகமது அசாருதீன், இர்ஃபான் பதான் போன்ற இஸ்லாமிய கிரிக்கெட் வீரர்கள், மற்ற இஸ்லாமியர்களுக்கு, முன்மாதிரியாக இருப்பதைப் போல, தாழ்த்தப்பட்ட கிரிக்கெட் வீரர் ஒருவர் கூட, மற்ற தாழ்த்தப்பட்டவர்களுக்கு முன்மாதிரியாக இல்லாத சூழல் நிலவுகின்றது.

## இஸ்லாமியர் பிரதிநிதித்துவ நிலை

1970களில் 48 சதவீத டெஸ்ட் கிரிக்கெட் வீரர்கள், மும்பை, சென்னை, டெல்லி, பெங்களூர், ஹைதராபாத், கொல்கத்தா ஆகிய 6 நகரங்களைச் சேர்ந்தவர்களாய் இருந்தனர். இந்த நிலை மாறி, இன்னும் பல ஊர்களில் இருந்து வீரர்கள் தேர்வாகும் நிலை ஏற்பட்ட பின் தான், இஸ்லாமியர்களின் பிரதிநிதித்துவம் அதிகரித்தது. 1950-1990 வரை, தன்னுடைய முதல் கிரிக்கெட் போட்டியை விளையாடிவர்களில், வெறும் 4% பேர் மட்டும் தான் இஸ்லாமியர்கள். பெருநகரங்களின் ஆதிக்கம் குறைந்த பின், 21ஆம் நூற்றாண்டில், இந்த விழுக்காடு 12.5% ஆக உயர்ந்தது.

## பெண்கள் கிரிக்கெட்டின் நிலை

ஆண்களின் கிரிக்கெட், ரஞ்சி கோப்பை போட்டிகள், பெருநிறுவனங்கள் மோதும் போட்டிகள், இலாபநோக்கோடு விளையாடும் ஐ.பி.எல் போட்டிகள் என்று பெரு நிறுவன மயமாகிவிட்ட நிலையில், பெண்களின் கிரிக்கெட்டோ, பெரும்பாலும் அரசு நிறுவனங் களின் கட்டுப்பாட்டில் தான் உள்ளது. இந்திய பெண்கள் அணியின் 15 பேர் கொண்ட குழுவில், 10 பேரைத் தேர்ந்தெடுத்து அனுப்புவது, ஓரளவு சமூகநீதியை பின்பற்றும் இந்திய இரயில்வே துறையாகும். இதனால் தான், ஆண்கள் அணியைப் போல் இல்லாமல், பெண்கள் அணி கணிசமான அளவு தாழ்த்தப் பட்டவர்களைக் கொண்டுள்ளது. இது ராமச்சந்திர குஹாவின் கருத்தை தவறாக்கி, போரியா மஜூம்தாரின் கருத்தை சரியாக்கி இருக்கிறது.

## இடஒதுக்கீடே தீர்வு

தென்னாப்பிரிக்காவில் கடைநிலை கிரிக்கெட் போட்டிகளிலேயே முறையான இடஒதுக்கீடு அமல்படுத்தப்பட்டுள்ளது. இதனால், இரண்டாம் நிலை போட்டிகளுக்கு, இடஒதுக்கீட்டின்படி ஆட்கள் தேவைப்படும்

போது, கடைநிலை வீரர்களிடம் இருந்து, சுலபமாக வீரர்களைத் தேர்ந்தெடுக்க முடிகிறது. இதே போல், முதல்நிலை போட்டிகளுக்கு, இரண்டாம் நிலையில் இருந்தும், மூன்றாம் நிலையில் இருந்தும் வீரர்களை தேர்ந்தெடுப்பது சுலபம் ஆகிறது. ஆள் பற்றாக்குறையும் ஏற்படுவ தில்லை. இடஒதுக்கீட்டால் திறமை போய்விடும் என்று பல மூத்த, ஓய்வு பெற்ற கிரிக்கெட் வீரர்களும், விமர்சகர்களும் நினைத்தனர். ஆனால், தென்னாப்பிரிக்க டெஸ்ட் கிரிக்கெட் அணியோ, தரவரிசைப் பட்டியலில், 7 ஆம் இடத்தில் இருந்து, 2 ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளது. எனவே, இந்த இட ஒதுக்கீட்டு முறையை இந்தியாவிலும் நடைமுறைப்படுத்த வேண்டியது அவசிய மாகிறது. இதை இந்திய கிரிக்கெட் சங்கமே நடைமுறைப்படுத்தலாம். சங்கம் இதை நடைமுறைப்படுத்த மறுக்கும்பட்சத்தில், நீதிமன்றமே முன்நின்று, தாழ்த்தப்பட்டவர் களுக்கான இடஒதுக்கீட்டுக்கு செயல்வடிவம் கொடுக்க வேண்டும்

**சட்டச் சிக்கல்கள்**

உச்சநீதிமன்றம், சட்டவிதி எண்32 இன்படி, ஒரு பொதுத்துறை நிறுவனத்துக்கு சில உத்தரவுகளை இட முடியும். உயர்நீதிமன்றமும், விதி எண் 226 இன் கீழ் உத்தரவுகளை இட முடியும்.விதிகள் 14 16 இல் குறிப்பிடப்பட்டுள்ள சமத்துவத்துக்கான உரிமைகளின் அடிப்படை யில் இந்த உத்தரவுகள் இருக்கலாம். உச்சநீதி மன்றம் பயன்படுத்தும் விதி எண் 32, பொதுத் துறை நிறுவனங்களுக்கானது; பொது அமைப்பு களுக்கானது. ஆனால், உயர்நீதி மன்றங்கள் பயன்படுத்தும் விதி எண். 226, பொதுத்துறை நிறுவனங்களுக்கு மட்டுமின்றி, தனிநபர் களுக்கும், இன்னபிற அதிகார மையங்களுக்கும் பொருந்தும் விதியாகும்.

எந்த விதியைப் பயன்படுத்துவது என்று தெரிய வேண்டுமென்றால், இந்திய கிரிக்கெட் சங்கம் (BCCI) ஒரு பொதுத்துறை அமைப்பா? தனியார் அமைப்பா? என்பது தெரிய வேண்டும். ஜீ தொலைக்காட்சிக்கும், மத்திய அரசுக்கும் இடையே 2005 இல் நடந்த வழக்கில், சட்ட விதி எண் 12 இன்படி, இந்திய கிரிக்கெட் சங்கம், மாநில, மத்திய அரசுகளின் கட்டுப்பாட்டில் இயங்கும் ஒரு பொது சங்கம் இல்லை என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. எனவே, உச்சநீதிமன்றம், விதி எண். 32 ஐ பயன்படுத்தி, இந்திய கிரிக்கெட் சங்கத்திற்கு உத்தரவிட முடியாது. ஆனால், அணியின் செயல்பாடுகள், வீரர்ர்கள் தேர்வு ஆகிய பொதுக் கடமைகளை, இந்திய கிரிக்கெட் சங்கம் செய்வதால், உயர்நீதிமன்றங்களால், இந்திய கிரிக்கெட் சங்கத்துக்கு உத்தரவிட முடியும் என்றும் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. 2015 இல் இந்திய கிரிக்கெட் சங்கத்துக்கும், பீஹார் கிரிக்கெட் சங்கத்துக்கும் இடையே நடந்த வழக்கிலும், இது உறுதியாகின்றது. எனவே, நீதிமன்ற வழிமுறைகளின்படி, அடிப்படை உரிமையான இடஒதுக்கீட்டை நீதிமன்றங் களால் கொண்டுவர முடியும்.

அதே வேளையில், சர்வதேச கிரிக்கெட் சங்கத்தின் (ஐ. சி. சி.) விதி எண். 2.9 இன் படி, ஒரு நாட்டின் கிரிக்கெட் சங்க நடவடிக்கைகளில் அரசு தலையிட்டால், அந்த நாட்டின் கிரிக்கெட் சங்க அங்கீகாரத்தை ரத்து செய்ய முடியும். ஆனால், தென்னாப்பிரிக்க அணியில் இட ஒதுக்கீட்டைக் கொண்டு வந்த போது, ஐ.சி.சி. செய்தி தொடர்பாளர் ஃபர்லாங்க், இதில் தலையிட முடியாது என்றும், தென்னாப்பிரிக்க கிரிக்கெட் சங்கம், அரசின் தலையீட்டை குற்றச்சாட்டாக வைத்தால் மட்டுமே தலையிட முடியும் என்றும் கூறிவிட்டார். இந்தியாவில் நடைபெற்ற லோதா குழு வழக்கில் (2015), இந்திய கிரிக்கெட் சங்கத்துக்கு எதிரான உச்சநீதிமன்ற; தீர்ப்பை, அரசின் தலையீடாக எடுத்துக் கொள்ளுமாறு, பி.சி.சி.ஐ. தலைவர் அனுராக் தாகூர், ஐ.சி.சி. தலைவர் ஷஷாங்க் மனோகரிடம் முறையிட்டார். ஆனால், இந்த முறையீட்டால், உச்சநீதிமன்றம், அவருடைய பதவியைப் பறித்தது (2017). அதே நேரத்தில், ஐ. சி. சியும், உச்சநீதிமன்றத் தீர்ப்பை, அரசின் தலையீடாக ஏற்காமல், இந்த விவகாரத்தில் தலையிட மறுத்து விட்டது. எனவே, நீதிமன்றங்கள் துணிந்து நின்று, இடஒதுக்கீட்டு முறையை, கிரிக்கெட் விளையாட்டில் கொண்டு வர வேண்டும்

(Economic and Political Weekly ஆய்விதழில் வெளிவந்த கட்டுரையின் சுருக்கமான மொழிபெயர்ப்பு)

தமிழில்:
ம. கி. எட்வின் பிரபாகரன்

# ஜாதி சங்க மாநாடுகளில் ஜாதியை எதிர்த்த பெரியார் (1)



“ ஆதி திராவிடர்களுக்கு யாராவது நன்மை செய்ய வேண்டுமென நினைத்தால்,
பொதுக் கிணறு, கோவில், பள்ளிக்கூடம் ஆகியவற்றில் நம்மோடு கலந்து வாழ்வதற்கு அனுமதிப்பதுதான்! ”

*பெரியாரியலுக்கு வலிமை சேர்க்கும் அண்மைக்கால வரவுகளில் மிகவும் குறிப்பிடத்தக்க கவனத்தைப் பெற்றிருப்பது, பெரியாரிய ஆய்வாளர் வீ.எம்.எஸ். சுபகுணராஜன் தொகுத்து வெளியிட்டுள்ள ‘நமக்கு ஏன் இந்த இழிநிலை’ நூலாகும். ஜாதி மாநாடுகளிலும் ஜாதி ஒழிப்பு மாநாடுகளிலும் பெரியார் நிகழ்த்திய உரைகளைத் தொகுத்து சுமார் 400 பக்கங்களோடு இந்த நூல் வெளி வந்திருக்கிறது. இந்த நூலுக்கு தொகுப்பாசிரியர் 60 பக்கங்களுக்கு அய்ந்து அத்தியாயங்களைக் கொண்ட ஆழமான முன்னுரை எழுதியிருக்கிறார். இதில் ஜாதி சங்க மாநாடுகளில் பெரியார் எனும் தலைப்பில் எழுதியுள்ள பகுதியை இங்கு வெளியிடுகிறோம். ஜாதி சங்கங்களில் ஜாதியைக் கடுமையாக விமர்சித்துப் பேசக்கூடிய நேர்மையும் துணிவும் கொண்ட தலைவராக பெரியார் இருந்திருக்கிறார் என்பதை இதைப் படிக்கும்போது உணர முடியும். இப்போதும் ஜாதி ஒழிப்புக்கான கருத்தாயுதங்களாக இவை திகழ்கின்றன.*

பெரியார் சாதி சங்க மாநாடுகளில் நிகழ்த்திய உரைகள் ஏறத்தாழ நாற்பது ஆண்டுகாலம் நீடித்தது. அந்த மாநாடுகளில் அவரது உரைகளின் பிரதான கூறானது இன்றும் பெரும் ஆச்சர்யத்திற்குரியது. சாதி அபிமானம், விருத்தி என்ற இரட்டை நோக்கங்களுக்காக நடத்தப்பட்ட அம்மகாநாடுகளில் இவ்வளவு கறாரான இடித்துரைக்கும் வாதங்களை, விமர்சனங்களை, சீர்திருத்தக் கருத்துகளை அவரால் பேச முடிந்திருக்கிறது என்பதுதான் ஆச்சர்யம். இந்த இடித்துரைப்புகளை அவர் தாட்சண்யமின்றி செய்திருக்கிறார். அடித்தட்டு ஆதிதிராவிட மக்கள் துவங்கி இடைச்சாதியினர் மற்றும் பார்ப்பனரல்லாத மேல்சாதியினர் வரை அனைத்துத் தரப்போடும் உரையாடி இருக்கிறார். இந்தத் தொகுப்பில் அத்தனை உரைகளும் இடம் பெற்றுவிடவில்லை. பல உரைகள் பற்றி ‘குடிஅரசு’ இதழில் வெளியான குறிப்புகள் மட்டுமே கிடைத்துள்ளன. ஆகவே சாதி மகாநாடுகளிலும் சாதி ஒழிப்பு

மகாநாடுகளிலும் பெரியார் என்ற இத்தொகுப்பு நிறைவு பெற்ற ஒன்றன்று. வருங்காலத்தில் விரிவுபெறக் கூடியது.

பெரியார் சாதி மாநாட்டு உரைகள் நிகழ்த்தப்பட்ட சங்கங்களின் பட்டியலே தமிழ் நாட்டு சாதி அடுக்கில், அந்த காலவெளியில், தங்களை சாதி எனும் இழிவிலிருந்து மீட்டுக் கொள்ள இடையறாது போராடியவர்களின் பட்டியலாகவே இருப்பதைக் காண முடிகிறது. பல்வேறு சாதிச் சங்கங்களில் அவர் உரையாடியிருந்தபோதும், தொகுக்கப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையிலும் அவற்றில் சாதி ரீதியாக பெரும்பான்மையாக இருப்பது கொண்டும், கீழ்க்கண்ட பிரிவுகளில் அவற்றை அவதானிப்பது பயனுள்ளதாய் இருக்கும்.

1. ஆதி திராவிடர் மாநாடுகள் (பறையர், பள்ளர் உள்ளிட்ட சாதிகளின் மாநாடுகள்)
2. நாடார் சங்க மாநாடுகள்
3. செங்குந்தர் மாநாடுகள்
4. வன்னியர் சங்க மாநாடுகள்
5. பிற பார்ப்பனரல்லாத சாதிகளின் மாநாடுகள்

## ஆதி திராவிடர் சாதி சங்க மகாநாடுகள்

பெரியார் பங்கேற்ற சாதி சங்க மகாநாடுகளில் சரிபாதி ஆதி திராவிடர் மகாநாடுகளே. 1926இல் தொடங்கி 1948 வரையில் நிகழ்கிறது இந்த மகாநாடுகள். அதன் பின்னர் அவை திராவிடர் கழகம் மற்றும் பொது அமைப்புகளின் சாதி ஒழிப்பு மாநாடு என்ற வகையில் 1973 வரை தொடர்கிறது. இந்த மகாநாடுகளில் பெரியார் உரைகள் தெளிவாகப் பின்வரும் சில பார்வைகளை முன் வைக்கிறது.

தாழ்த்தப்பட்ட அடித்தட்டு மக்கள் விடுதலை என்பதை அவர்களே வலியுறுத்திப் பெற வேண்டுமென்கிறார். பார்ப்பனரோ, பார்ப்பனரல்லாதோரோ அதற்கு ஒருபோதும் அதற்கு உதவ மாட்டார்கள் என்பதைத் தெளிவாக்குகிறார்.

“நீங்கள் துணிவு கொண்டு புரட்சிக்குத் தயாராகுங்கள். நீங்கள் ஏன் கீழ் ஜாதி? என்று உங்களையே கேள்வி கேளுங்கள். கடவுள் காரணம் என்று தோன்றினால் உடனே அந்தக் கடவுளைத் தூள் தூளாக உடைத்தெறியுங்கள். மதக் கட்டளை என்று தோன்றினால் அம்மதத்தை சின்னா பின்னமாக்குங்கள் அல்லது அரசாட்சி முறை என்று கண்டால் அதை அழித்திடுங்கள். அல்லது மனிதர்களுடைய சூழ்ச்சி சுயநலப் பித்து என்று தோன்றினால் தைரியமாய் அவர்களிடம் இனிமேல் இந்தப் புரட்டு நடக்காது என்று சொல்லுங்கள்.” (ஈரோடு ஆதி திராவிட வாலிபர்கள் வரவேற்பு : ‘குடிஅரசு’ 04.12.1932)

பார்ப்பனரல்லாதோர், ஆதிதிராவிடர் எனும் இருமை வழியாக, அவர்களை ‘மற்றமை’யாக்கியே உரையாடுகிறார். ‘நாங்கள்’, ‘நீங்கள்’ என்ற பிரிவை மறைத்து இணைவின் வழி அவர்களது பிரச்னைகளின் தீர்க்கத்தைக் (கடுமையை) குறைக்கும் நோக்கம் அவரிட மில்லை. சொல்லப் போனால், ‘பஞ்சமர்’ பட்டம், ‘சூத்திரன்’ பட்டத்தைவிட உயர்வே என வாதிடுகிறார். என்னிடம் கேட்டால் ‘சூத்திரன்’ என்று சொல்வதைவிட பள்ளர், பறையர், சக்கிலியர் என்று என் சாதியைச் சொல்லவே விரும்புகிறேன் என்கிறார். சாஸ்திரத்தில் நான்கு வர்ணங்களில் இல்லாத பஞ்சமருக்காவது அசலான, மரியாதைக்குரிய தாய், தகப்பன் வழியான பிறப்பு இருக்கிறது. ‘சூத்திரருக்கோ’ வேசி மகன் என்ற இழி அடையாளமே மிஞ்சும் என்கிறார். எனவே மநுதர்ம சாஸ்திர இந்து மதத்தையும், அதன் வர்ண அமைப்பையும் விட்டு விலகுவதே சாதி இழிவிலிருந்து வெளியேறுவதற்கான வழி என்கிறார். சாதி ஒழிப்பு பற்றி வாய்கிழியப் பேசும் மேல்சாதி மற்றும் இடைச்சாதியினர் தங்கள் வீட்டில் சாதி ஆசாரம் காக்கத் தவறுவதில்லை. எனவே அவர்கள் இந்த சாதி ஒழிப்பில் உதவுவார்கள் என எண்ண வேண்டாம். உங்கள் சாதி இழிவை நீக்க நீங்களே களமிறங்குங்கள் என்கிறார்.

“உங்களுடைய நற்காலத்துக்கே இந்த நாட்டில் பார்ப்பனர் பார்ப்பனரல் லாதோர் என்கிற உணர்ச்சி ஏற்படவும்,

**சமூகங்கள் சமத்துவமின்றி இருப்புக் கொள்ளும் சூழலில் சுய சமூக அபிவிருத்திக்கான உழைப்பின்றி எந்தச் சமூகமும் தனது இழிநிலையிலிருந்து மீள முடியாது**

*அதில் சர்க்கார் பார்ப்பனர்களுக்கு முன்போல் அனுகூலமில்லாமல் அவர்கள் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் ஆகிய இரு சமூகத்தையும் ஆதரிக்க ஆரம்பித்ததும், அதன் பலனாகப் பார்ப்பனர்கள் தங்கள் பழைய முறைப்படி அராசங்கத்தின்மீது விஷமப் பிரச்சாரம் செய்யத் தொடங்கினதும் இதற்குத் தாக்குப் பிடிப்பதற்காக அரசாங்கத்தாரும் பார்ப்பனரல்லாதாரும் உங்கள் உதவியை நாடவும், இதில் பார்ப்பனர்களும் போட்டி போடவும், இத்தியாதி காரணங்கால் உங்களுடைய நிலை உங்களது முயற்சி இல்லாமலே உயர்ந்து வருகிறது. ஆகவே இன்றைய பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் சண்டையும், சர்க்கார் பார்ப்பனர் சண்டையும் உங்களுக்கு நல்ல பலனைக் கொடுத்து வருகிறது. இந்தச் சண்டை இல்லா விட்டால் உங்க நிலை மிகவும் மோசமாகவே இருந்திருக்கும்.''*

*"ஏனெனில் இன்று உங்களை ஒவ்வொருவரும் அரசியல் காரியங்களுக்கு உபயோகித்துக் கொள்ளத்தான் உங்களை நாடுகிறார்களே ஒழிய உண்மையான உங்கள் குறைகளைத் தீர்க்க அல்ல. முக்கியமாகப் பார்ப்பனர்கள் உங்களை மோசம் செய்யவே உங்களை ஏய்க்கவே உங்களை நாடுவார்கள். அவர்களை நம்பாதீர்கள். அரசாங்கத்துக்கும் எனக்கும் எவ்வளவு மாறுபாடான அபிப்பிராயம் இருந்தாலும், அதனிடம் எவ்வளவு எதிர்ப்பு இருந்தாலும் நீங்கள் அரசாங்கத்துடன் பிணக்குச் செய்யாமல் அதை எதிர்க்காமல் இருந்து உங்கள் சமூக நன்மையைப் பெற வேண்டும் என்று கூறுவேன்.'' (திருச்செங்கோடு தாலுகா சமுத்திரத்தில் நடைபெற்ற ஆதி திராவிடர் மாநாட்டில், 'குடிஅரசு' 15.03.1936)*

'ஆதி திராவிடர்', 'தேவேந்திர குலத்தார்', அருந்ததியர், நீலகண்டனார் என்று பெயர் சூட்டிக் கொள்வதால் 'சப்தம்' மாத்திரம் உயர்வாகத் தோன்றினாலும், அச்சொற்களின் உட்பொருளில் தாழ்மையே குடி கொண் டுள்ளது. ஆதி திராவிடர் என்று சொன்ன மாத்திரத்தில் இழிவு நீங்கியா விடுகிறது. இன்னும் அதை வலியுறுத்திச் சொல்வதாகவே ஆகிறது. உங்களை 'தேவேந்திரகுல வேளாளர்' எனக் குறிப்பிட விரும்புகிறீர்கள். தேவேந்திர குலம் என்பது இன்னும் இழிவானதாகத் தெரிகிறது. தேவேந்திரனைப் பற்றிய புராணங்கள் அவனை அவ்வளவு இழிவாகக் கூறுகிறது. பிறந்த சாதியை இழிவாக மதித்து இன்னொரு சாதியை உயர்வாக மதித்து அதனிடம் அடைக்கலம் புகுவதைவிட இழிவு வேறொன்றுமில்லை. இதற்கு மாறாக, "நீங்கள் உங்களை யார் தாழ்ந்தவர்கள் என்று சொல்லு கிறார்களோ, யார் கொடுமைப்படுத்து கிறார்களோ, யார் அதற்கு ஆதாரமாய் இருக்கிறார்களோ அவர்கள் பெயரை வைத்து 'அவர்கள் அல்லாதோர்' என்று வைத்துக் கொண்டால், அந்தக் கொடுமையும் ஞாபகத்தில் இருப்பதோடு அதிலிருந்து விலகுவதற்கான அறிவும் சக்தியும் அதிலிருந்து ஏற்படும். சிலர் 'ஒடுக்கப்பட்டோர்' என்று வைத்துக் கொள்ள லாமென்கிறார்கள், அதைவிட 'ஒடுக்கினவர் அல்லாதோர்', 'கொடுமைக்காரர்கள் அல்லாதோர்', 'அயோக்கியர் அல்லாதோர்' என வைப்பது இன்னும் பொருத்தமாய் இருக்கும் என்கிறார்.

ஆதி திராவிடர்களுக்கு என்று தனியாகக் கிணறு, கோவில், பள்ளிக்கூடம் முதலியவை ஏற்படுத்துவதைக் கடுமையாக ஆட்சேபிக்கிறார். அதை முற்றிலுமாக வெறுக்கிறேன் என்கிறார். இதுபோல அவர்களுக்குத் தனி சௌகர்யம் செய்து கொடுக்கிறேன் என்ற பெயரில், அவர்களைத் தனிமைப்படுத்தி, நம்மோடு கலக்கவிடாமல் செய்து நிரந்தரமாய் அவர்கள் இழிந்தவர்கள் என நிலைநிறுத்தி அவர்களை மீளவிடாமல் செய்யும் செயல் அது என்கிறார்.

மறுபுறம் பார்ப்பனர்க்கென்று இதேபோல் இருப்பிடம், கிணறு போன்ற தனி வசதிகள் செய்து அவர்களை 'உயர்ந்தவர்கள்' ஆக்கி வைப்பதும் தவறு என்கிறார். ஆதி திராவிடர்களுக்கு யாராவது நன்மை செய்ய வேண்டுமென நினைத்தால், பொதுக் கிணறு, கோவில், பள்ளிக்கூடம் ஆகியவற்றில் நம்மோடு கலந்து வாழ்வதற்கு அனுமதிப்பதுதான் எனச் சொல்கிறார்.

முதலில் சாதி வித்தியாசம் என்கிற கொடுமைத் தன்மை என்பது, இந்த நாட்டை விட்டு ஒழிய வேண்டும். இரண்டாவதாக, ஒரு மனிதனுக்குக் கீழே, மேலோ சாதி என்பது ஒன்றுமில்லை என்ற முடிவுக்கு வந்தாக வேண்டும். அதற்குமேல் சாதி வித்தியாசத்திற்கு ஆதாரமாயுள்ளதை அடியோடு அழிக்க முயல வேண்டும். சாதியை உருவாக்கி அதனைத் தாங்கி நிற்கும் ஆதாரமாய் இருப்பது பார்ப்பன இந்து மதமே. பார்ப்பனர்களை இந்து மதத்தின் 'உச்சாணியாய்' ஆக்கி, வர்ண அடுக்கில் மேலே நிறுத்தி வைத்திருப்பது வேதங்களும், ஸ்மிருதிகளும், சாஸ்திரங்களுமே. சாதியும், மதமும் ஒன்றொடொன்று பின்னிக் கொண்டுள்ளதால் அவற்றை ஒரு சேர அழித்தொழிக்க வேண்டும். மதமும், வேதமும், கடவுளும் அழிந்தால்தான் சாதி ஒழியும். எனவே சாதி, மதம், வேதம், கடவுள் என அனைத்தையும் ஒன்றாகக் கொளுத்திவிட வேண்டும்.

## ஆதி திராவிடர் கிறித்தவர்கள் மகாநாடு


ஆதி திராவிட கிறித்தவர்கள் மாநாடுகளில் பேசிய பெரியாரின் உரைகள், அவரது தெளிவான பார்வையைக் காட்டுகின்றன. தனது மதம் குறித்த விமர்சனத்தை இந்து மதத்தோடு நிறுத்திக் கொள்ளாமல் கிறித்துவத்தின் போதாமைகளைப் பேசி மதவிமர்சனத் தளத்தை விரிக்கிறார். இங்கு மிக முக்கியமானதும் கவனத்திற்குரியதுமான ஒரு கூறு இயல்பாகச் சாதி இருப்பினை பார்ப்பனியத்தோடு பிணைத்துப் பேசுவதைத் தவிர்க்கிறார். இந்து மதம் மற்றும் அதன் சாதி இழிவிலிருந்து தப்பி கிறித்துவத்திற்கு மாறியவர்கள், அங்கும் சாதி இழிவு தொடர்வதைச் சந்திக்க நேர்ந்தால், அது கிறித்துவத்தின் தோல்வியேயன்றி வேறில்லை என்கிறார். இங்கும் தொடரும் சாதி இழிவை இந்து மதம் சார்ந்து விளக்குவதையும், பழி சொல்லுவதையும் தவிர்க்கிறார். இன்னும் சொல்வதானால் 'மதமாற்றம்' சாதியை ஒழித்து விடக்கூடுமா என்ற அவரது அடிப்படையான அய்யப்பாட்டை இந்தப் புள்ளிகளில் இருந்தே அவர் பெற்றிருக்கக்கூடும்.

> "கீழான ஜாதியாய் கருதப்பட்டு நீங்கள் அடைந்து வந்த இழிவைப் போக்கிக் கொள்வதற்காக வேறு மதத்தில் வந்து சேர்ந்தும் அங்கும் அந்த இழிவு இருந்து, உங்களைப் பழைய கருப்பனாகவே நடத்தி வந்தால் எப்படியாவது அந்த இழிவை போக்கிக் கொள்ள வேண்டுமென்ற உணர்ச்சியின் மீது இந்த மகாநாட்டைக் கூட்டி நீங்கள் எல்லோரும் இங்கு வந்து சேர்ந்திருக் கிறீர்கள். இம்மகாநாட்டில் பலர் ஆவேசமாய்ப் பேசிவிடுவதாலும், பலர் அதி தீவிரமான தீர்மானங்கள் செய்து விடுவதினாலும் உங்களுக்கு ஏதாவது பலன் கிடைத்து விடுமா?... இந்த மாதிரி தீர்மானங்களும், ஆவேசப் பேச்சுக்களும் வெகுகாலம் நடந்து கொண்டேதான் வருகிறது. ஆனால் இவையெல்லாம் மேல்ஜாதிக்காரர்கள் என்பவர்களால் அலட்சியமாகக் கருதி அசட்டை செய்யப்பட்டுதான் வருகிறது. உங்களுக்கு மதப்பித்தின் பயனாகச் சுய மரியாதை உணர்ச்சி இல்லையென்பதை பாதிரி மார்கள் நன்றாய் உணர்ந்திருக்கிறார்கள்...
>
> நீங்களும் மதத்திற்காகவும், கடவுளுக்காகவும் எவ்வளவு கஷ்டங் களையும், இழிவுகளையும் பொறுத்துக் கொண்டு வெறும் வாயிலே மாத்திரம் ஏதாவது பேசிக் கொண்டிருப்பீர்களே யொழிய கட்டுப்பாடுகளை மீறவோ உங்கள் இழிவுக்கு காரணமானவற்றை உதறித் தள்ளவோ அதை அழிக்க முயற்சிக்கவோ ஒரு நாளும் சம்மதிக்க மாட்டீர்கள்...
>
> மதக்கட்டளையை மதிப்பவன், பாதிரிகளின் சொல்லுக்கு கீழ்ப்படிந்து தான் ஆக வேண்டும். கடவுள் நம்பிக்கை கொண்டவன் அவனவன் தற்கால

நிலைமைக்குக் காரணம் 'கடவுள் சித்தம்' என்பதை ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும். மதக் கட்டளையையும், கடவுள் நம்பிக்கையையும் கொண்ட அடிமை ஒரு தாழ்ந்த ஜாதிக்காரன் ஒரு நாளும் விடுதலை அடையவோ, முன்னேற்ற மடையவோ முடியவே முடியாது."

கிறித்துவத்தின் 'பரலோக இராஜ்யம்' எனும் கோட்பாட்டைச் சுட்டி, கடுமையாகச் சாடுகிறார். இகவாழ்வில் 'பொறுமையையும்', 'காத்திருப்பையும்' போதித்து, இந்த வாழ்வின் இழிவை நீக்குவதற்கான மார்க்கத்தை மறைத்து, மரணத்திற்குப் பின்னான வாழ்வு குறித்த மாயவலையை அடையாளப்படுத்துகிறார். "நீ செத்த பிறகு கடவுள் நல்ல சன்மானம் கொடுப்பார்" எனக் கிண்டலடிக்கிறார். கிறித்துவர்கள் போன்ற 'விசுவாசிகள்' கூட்டத்திலும், அதிலும் பாதிரிகளை விமர்சித்து, தான் நினைத்ததைத் தாட்சண்யமின்றி சொல்லி விடுவது பெரியாருக்கு மட்டுமே சாத்தியமான ஒன்று. இதில் அதைச் சொல்வதற்கான 'அறநிலைப்பாட்டை' தனது 'இருப்பு' ஆக்கிக் கொண்ட தந்தை பெரியார் போன்ற பேராளுமைக்கு மட்டுமே இது சாத்தியமாகும். அந்தக் கிறித்துவர்களுக்கு இரஷ்யப் புரட்சியைக் காட்டி நீங்களும் அவர்களைப் போல (இரஷ்யக் கிறித்துவர்களைப்போல), தேவாலயங்களையும், பாதிரிகளையும் ஒழித்துவிட்டு, பொருளாதார சமதர்மம் பெறுங்கள் என்கிறார். இழிவு நீக்குவதற்கு ஒரே விதமான தீர்வை அவரால், 'அந்தந்த மதத்தின் கோட்பாட்டு அடிப்படை முரணைத் தகர்ப்பது' என்பதாக முன் வைக்க முடிகிறது. அவரவர் மதக் கோட்பாடுகளைச் சுட்டி, அதை மீறி, 'கடவுளிடம்' இருந்து தப்பி விடுதலை பெற ஆலோசனை சொல்கிறார்.

கிரேநகர் ஆதி திராவிடர் ஆண்டு விழாவில் 'சமரச சன்மார்க்கம்' குறித்த பேச்சு மிக முக்கியமானது. கிறித்துவ சமரச சன்மார்க்கத்தின் மீதான அவரது விமர்சனம் சாதி ஒழிப்பையும், பொருளாதார சமதர்மத்தை யும் இணைத்து எளிமையான சொற்களால் கோட்பாட்டாக்கம் செய்கிறது. இன்றளவும் கவனத்திற்குரிய பேச்சு எனவே கருத வாய்ப்புள்ளது.


வெளியீடு : கயல் கவின்
தொடர்புக்கு : 9962233382


**"மதக்கட்டளையை மதிப்பவன், பாதிரிகளின் சொல்லுக்கு கீழ்ப்படிந்து தான் ஆக வேண்டும். கடவுள் நம்பிக்கை கொண்டவன் அவனவன் தற்கால நிலைமைக்குக் காரணம் 'கடவுள் சித்தம்' என்பதை ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும். மதக் கட்டளையையும், கடவுள் நம்பிக்கையையும் கொண்ட அடிமை ஒரு தாழ்ந்த ஜாதிக்காரன் ஒரு நாளும் விடுதலை அடையவோ, முன்னேற்றமடையவோ முடியவே முடியாது."**

"முதலாவது கடவுள், மதம், விதி, ராஜா, ஜாதி, பணம், தொழில் முதலியவைகள் இயற்கைக்கு மாத்திரமான சமரச சன்மார்க்கத்திற்கும் விரோதமாய் அமைக்கப்பட்டிருக்கிறது. அவை ஒன்றுக் கொன்று முரண்பட்ட தத்துவத்தில் அமைக்கப்பட்டிருப்பவைகளாகும். அதோடு சமரசமும் சன்மார்க்கமும் கூடாது என்னும் தத்துவத்தின் மீதே அமைக்கப்பட்டவைகளாகும்.

ஆகையால் நான் சமர சன்மார்க்கத்தைப் பற்றி பேச வேண்டுமானால் அவைகள் சம்பந்தமான கட்டுப்பாடுகளையெல்லாம் அடியோடு அழிப்பதுதான் சமரச சன்மார்க்கம் என்று சொல்ல வேண்டியதாயிருக்கின்றது. இது உங்களில் பலருக்கும் உங்கள் பாதிரிமார்கள், எஜமானர்கள், அக்கம் பக்க ஜாதியார், சாமிகள், மதக்காரர்கள் ஆகியவர்களுக்கு வருத்தமாயும் விரோதமானவைகளாயுமிருக்கும் என்று கருதுகிறேன். நான் உண்மையான சமரச சன்மார்க்கம் அடைந்த தேசத்தார், அடைந்த சமூகத்தார், அடைந்த தனி மனிதர்கள் என்று யார் யாரைக் கருதுகின்றேனோ அவர்கள் எல்லாம் மேற்கண்ட இடையூறானவைகளைத் தகர்ந்தெறிந்துதான் சமரச சன்மார்க்கம் அடைந்தார்கள் - அடைகிறார்கள் - அடைய முயற்சிக்கின்றார்கள். இவைக ளில் சிறிது தாட்சண்யப்பட்டவர்கள்கூட தோல்வியே அடைந்து விட்டார்கள்.

உதாரணமாக கடவுளையும், மதத்தையும், பணக்காரனையும் வைத்து சமரச சன்மார்க்கம் செய்ய முடியா தென்று கருதித்தான் ருஷியர்கள், பாதிரிமார்கள் தொல்லைகளையும் சர்ச்சுகளையும் பணக்காரத் தன்மை களையும் அழித்துதான் சமரசம் பெற்றார்கள்." ('குடிஅரசு' 08.02.1931)

.............................................

## நாடார் சாதி சங்கங்களுடனான உரையாடல்

இந்தத் தொகுப்பிற்கான தேடலில் நமக்கு கிடைத்திருக்கும் சாதி சங்க மாநாட்டு உரைகளில் காலத்தால் முன்னானவை பல நாடார் சங்க மாநாடுகளில் அவர் நிகழ்த்திய உரைகள்தான். 16.05.1926ஆம் ஆண்டு "ஏழாயிரம் பண்ணை பாலிய நாடார் சங்கத்தின் இரண்டாவதாண்டு கொண்டாட்டம்" நிகழ்வில் பெரியார் ஆற்றிய உரை, 23.05.1926 'குடிஅரசு' இதழில் வெளியாகியுள்ளது. அய்யா ஆனைமுத்து அவர்கள் தொகுப்பில் காணக் கிடைக்கும் பெரியாரது பொதுக் கூட்ட நிகழ்வுகள் குறித்த 1923ஆம் ஆண்டு முதலான பதிவுகள் "நாடார்குல மித்ரன்" இதழில் வெளி வந்தவையே. அவற்றில் காலத்தால் முந்தியது 1923ஆம் ஆண்டு தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக பெரியார் இருந்தபோது, அருப்புக்கோட்டையில் நாடார் சங்கப் பிரதிநிதிகள் அவரைச் சந்தித்து செய்த கோரிக்கை தொடர்பானது. அதைக் கோரிக்கை என்பதைவிட பிராது என்றே சொல்ல வேண்டும். அந்தச் சந்திப்பின் போது நாடார் சங்கப் பிரதிநிதிகள் சில மாதங்களுக்கு முன்னர் மதுரையில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் தங்களது கோவில் நுழைவு குறித்த தீர்மானத்தை ஸ்ரீநிவாச அய்யங்கார் கொண்டு வராமல் தவிர்த்துவிட்டது தொடர்பானது. இங்கு இந்தத் தகவல் மிக முக்கியமானது. நாடார் சங்கங்களின் சாதி இழிவிற்கு எதிரான தொடர் போராட்டங்கள் பெரியாரின் காங்கிரஸ் இருப்பு காலத்திலேயே அவரது கவனத்திற்கு வந்த ஒன்று என்பதும், அதற்கு அவர் அப்போதே முகங்கொடுப்பவராய் இருந்தார் என்பதையும் வலியுறுத்தவே மட்டுமில்லை. அவரது காங்கிரஸ் பார்ப்பனியத்திற்கெதிரான முரண் பாடுகளை கட்டமைத்த காரணிகளிலொன்றாய் நாடார்களின் வெகுகாலப் போராட்டத்தையும் கருத வாய்ப்புள்ளது.பெரியாரும் தனக்கும் விருதுபட்டிக்குமான வியாபாரத் தொடர்பு நெருக்கம் குறித்தும் பல பதிவுகள் செய்துள்ளார்.

ஏழாயிரம் பண்ணை பாலிய நாடார் சங்க உரை பல வகைகளில் முக்கியமானது. சாதி சங்கங்களுடன் அவர் நிகழ்த்திய உரைகளின் மூலவடிவமாக கருதத்தக்கது அந்த உரை. அந்த உரையில் பெரியார் பாலிய நாடார் சங்கத்தின் நோக்கங்களாக அவர்கள் குறிப்பிடும் விடயங் களின் அடிப்படையில் அவரது வாதத்தை / எதிர்வாதத்தை கட்டமைக்கிறார். அந்தச்

சங்கத்தின் நோக்கங்கள் ஒவ்வொன்றிற்கும் இவரளவிலான விளக்கங்களையும், ஆமோ திப்பையும், ஆலோனைகளையும் வழங்குகிறார்.

## முதலாவது தீர்மானம் நாடார் சமூக அபிவிருத்தி பற்றி பெரியார்

'நல்லாண்மை என்பது ஒருவருக்குத் தான் பிறந்த இல்லாண்மையாக்கிக் கொளல்' என்று நாயனார் சொல்லி யிருப்பதின் தத்துவம் இதுதான். ஒவ்வொரு சமூகமும் தன் சமூக முன்னேற்றத்தை சீர்திருத்திக் கொண்டு பிறகு எல்லாச் சமூகத்தின் நன்மையையும் பொது நன்மையையும் கவனித்தால்தான் அது முறையாகவும் பயனளிக்கக் கூடியதாகவும் இருக்கும். அஃதில்லாமல் தங்கள் சமூகம் சுயமரியாதை அற்றதாகவும், தீண்டாத சமூகமாகவும் இருப்பதை லக்ஷியம் செய்யாமலும், அதைப் பற்றி உணர்ச்சியில்லாமலும், நான் தேசபக்தன், பொது ஜனசேவை செய்பவன் என்று சொல்லிக் கொண்டு பொது உரிமை, பொது சுதந்திரம் என்று பேசுவதெல்லாம் பொருளற்றதும் அறியாமையும் தனது சுயநலத்திற்கும் சுயகீர்த்திக்கும் பாடுபடுவதுமே ஒழிய வேறல்ல...

இந்த நாடார் சமூகமும் தங்களுக்கென ஒரு சமூகத்தை வைத்துக் கொண்டு சமீபகாலமாய் அதற்கென்று உழைக்காமலிருந்து, வெறும் தேசபக்தியையும் சுதந்திரத்தையும் பேசிக் கொண்டு பொருளற்ற 'தேச பக்தர்களாய்', 'காங்கிரஸ்காரர்களாய்' இருந்திருந்தால் உங்கள் நிலை என்ன மாயிருந்திருக்கும். வழிநடை பாத்தியம்கூட அடைந்திருக்க மாட்டீர்கள். தீண்டாதவர் கூட்டத் திலேயே இன்னும் இருந்திருப்பீர்கள்.

உங்கள் பெரியவர்கள் முயற்சியில் கொஞ்சம் சுயமரியாதை கிடைக்கப் பெற்றதானால், இப்பொழுது உங்களில் பலர் 'தேச பக்தர்களாய்' வந்து விட்டார்கள். "தனி சமூக முன்னேற்றத் திற்கு ஸ்தாபனமில்லாத, உழைப்பாளிகள் இல்லாத பல சமூகங்களின் கதி இப்போது என்னமாயிருக்கிறது? 'சக்கிலி', 'பறையர்', 'பள்ளர்' என்கிற பல பரம்பரையாய் பொதுஜன உழைப்பாளிகளாய் இருந்து வரும் சமூகங்களின் கதி எப்படி இருக்கிறது? இந்திய சமூகத்திற்கு அரசாங்கத்தாராலும் காலக் கிரமத்தாலும் பல 'சீர்திருத்தங்கள்' வந்தும் இந்தக் கூட்டத்தாருக்கு என்ன நன்மை கிடைத் திருக்கிறது. சர்க்கார் தயவிருந்தால்தானே தெருவில் நடக்கலாம்."


சமூகங்கள் சமத்துவமின்றி இருப்புக் கொள்ளும் சூழலில் சுயசமூக அபிவிருத்திக்கான உழைப்பின்றி எந்தச் சமூகமும் தனது இழிநிலையிலிருந்து மீள முடியாது என்பதை இதைவிடச் சிறப்பாக எப்படிச் சொல்வது. அதிலும் பரம்பரையாய் பொதுஜன உழைப் பாளிகளாய் இருக்கும் சமூகங்களை குறிப்பிட்டு முன் வைக்கப்படும் வாதம் பொருள் நிறைந்தது.

இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது தீர்மானங்களான 'நாடார் ஜனசங்கத்தின் நோக்கங்களை அமலுக்குக் கொண்டு வரல்', 'நாடார்களுக்கும் இதர வகுப்பாருக்கும் ஐக்கிய உணர்ச்சியை உண்டு பண்ணுவது', 'வாசக சாலை ஆரம்பித்தல்' ஆகியவற்றை ஆமோதித்து வரவேற்று விட்டு முக்கியமான ஐந்தாவது தீர்மானமான "மத பரிபாலனங்களை ஒழுங்காக நடைபெறச் செய்தல்" என்பது குறித்து விரிவாகப் பேசுகிறார். முதலில் கடவுள் என்பது என்ன என்பதையும், தர்மம் என்பது என்ன என்பயையும் இந்துக்களில் ஆயிரத்தில் ஒருவர்கூட அறிய மாட்டார்கள். மதச் சின்னங்களை அணிந்து கொள்வதையும், ஒருவரை ஒருவர் தாழ்ந்த ஜாதி உயர்ந்த ஜாதி என்று சொல்வதைத்தான் இந்து மதம் என்கிறார்கள் என்கிறார். கோவில், மடம், சத்திரம் கட்டுவதையும், சாப்பாடு போடுவதையும் தர்மம் என்று நினைக்கிறார்கள் என்கிறார். 'கடவுள் செயல்' என்பது மனிதனின் செயைல நடக்க விடாமல் தடுப்பது. கடவுள் கட்டளை என்பது மதங்கள் ஒவ்வொரு விதமாக சொல்லும்போது, எதை அசலான கட்டளை

என்பது? அதேபோல எது பாவம் என்பதை எப்படி யார் தீர்மானிப்பது. இதையெல்லாம் ஆராயப் புகுந்தவனை 'நாஸ்தீகன்' என்பது சரியா? இவற்றை தீர்மானிக்கும் பெரியவர்கள், அவர்கள் எதன் அடிப்படையில் இதைச் சொல்கிறார்களோ அதை ஆராய்ந்து பார்க்க அனுமதிப்பார்களா? சொன்னதை நம்புவதுதான் கடவுள் நம்பிக்கை என்றால் சரியா? "இம்மாதிரி மூடமந்திரமானதும் இயற்கைக்கும் அனுபவத்திற்கும் நாணயத்திற்கும் விரோதமானதுமான கொள்கைகள் நமது நாட்டில் இந்துமதத்தின் பெயரால் இருந்துகொண்டு ஒரு பெருஞ் சமூகத்தையே தேய்ந்து போகும்படி செய்வதோடு இதன் பரிபாலனம் என்னும் பெயரால் தேசத்தின் நேரமும் அறிவும் பொருளும் அளவற்று அநாவசியமாய்ச் செலவாகியும் வருகிறது" எனச் சொல்லி தர்ம பரிபாலனம் என்பதை கடுமையாக விமர்சனம் செய்கிறார்.

பெரியாரின் இந்த உரை நிகழ்த்தப்பட்ட காலவெளியில் நாடார் சமூகம் 'இந்து' எனும் தொகுதியில் தங்களுக்கான இருப்பை கோரி கடுமையாகப் போராடி வந்த காலம். அவர்களிடம் கடவுள் விமர்சனத்தையும், நம்பிக்கை அரசியலையும் பேசி அவர்களுடன் உரையாடுவது எண்ணிப் பார்க்கவே முடியாத ஒன்று. பார்ப்பன மேலாண்மை பற்றிய விவரணைகளைக்கூட அவரது விமர்சனத்தில் காண முடியவில்லை. ஏனெனில் அந்தத் தொகுதி எளிதாக பார்ப்பனரல்லாத சமூகங்களால் ஏற்றுக் கொள்ளப்படும் சாத்தியம் கொண்டது. ஆனால் இந்து எனும் மதம் மீதும், அவற்றின் கடவுள் தன்மை மீதும் வைக்கப்படும் விமர்சனம், தனது சாதி சங்க மாநாட்டு பங்கேற்பிற்கான நோக்கமும் தெளிவும் கொண்ட சிந்தனையாளரால் / கலகக்காரரால் மட்டுமே செயல்படுத்த இயலும். அவர் பெரியார் ஒருவர் மட்டுமே. இதைவிட 30.04.1929இல் பொறையாரில் நடந்த மூன்றாவது நாடார் வாலிபர் சங்க மாநாட்டில் அவரது உரை அந்தக் காலவெளியில் அதுவும் ஒரு சாதி சங்க மாநாட்டில் செய்துவிட முடியுமென்பதே நம்பக் கூடாததாய் இருக்கிறது. அதுவும் பெண்களுக்கு சம உரிமை வழங்க வேண்டுமெனத் தீர்மானம் கொண்டு வந்திருந்த சாதி சங்கத்தாரிடம், பெண்களுக்கான சம உரிமை என்பது குறித்து இப்படிச் சொல்கிறார் பெரியார். "இது சுயமரியாதை இயக்கத்தின் ஜீவாதாரமான கொள்கையாகும். செங்கற்பட்டு மகாநாட்டுப் பெண்கள் சம்பந்தமான தீர்மானம் இதுதான். புருஷன் தாசி வீட்டுக்குப் போவது குற்றமில்லையானால் ஸ்திரிகள் ஆசை நாயகன் வீட்டுக்குப் போவது குற்றமில்லை. புருஷன் பல பெண்களை மணந்தால் ஸ்திரிகள் பல புருஷர்களை மணப்பது குற்றமில்லை என்பதுதான் சமவுரிமை என்பதில் அடங்கியது. எனவே நாடார் மகாநாட்டுத் தீர்மானங்கள் சுயமரியாதை மகாநாட்டுத் தீர்மானங்கட்குச் சற்றும் இளைத்தவையல்லவென்றே சொல்லு வேன்" என்கிறார். இன்றும் சுயமரியாதை திராவிட இயக்கத்தார் அல்லாத பொது அரங்கில் ஒருவர் இதைத் தன் கருத்தாகச் சொல்லிவிட முடியுமா? பெரியார் இப்படிச் சொல்லி இருக்கிறார் என்றுதான் இன்றும் சொல்ல முடியும். பெரியார் சாதி சங்க மாநாடுகளைக் கையாண்ட விதம் அரிதாகும். இதை அனைத்துத் தரப்பு சாதியினரிடமும் அவர் பேசினார்.

(தொடரும்)



புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.org

ஆண்டுக் கட்டணம் ரூ.200

தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.

✆ 9841489896 – periyarmuzhakkam@gmail.com



# வேட்டி இந்து பண்பாடா?

● செ.கார்கி

*சிலர் இன்று வேட்டி என்பது இந்து பண்பாடு அது தமிழரின் பண்பாடு கிடையாது என சொல்லும் போக்கு உள்ளது. அது தவறான வாதமாகும்.*

வரலாற்று வளர்ச்சி என்பது சுழல் ஏணி வரிசையில் முன்னோக்கி போவது. இருக்கும் ஒரு வளர்ச்சி கட்டத்தில் இருந்து இன்னும் கூடுதலான ஒரு வளர்ச்சிக் கட்டத்திற்கு செல்வதுதான் வளர்ச்சி. அப்படித்தான் சமூகம் மாறிவந்துள்ளது. எந்தச் சமூகமும் இருக்கும் நிலையில் இருந்து திடீரென சுழலேணியில் கீழ்மட்டத்தில் வந்து விழுந்துவிடாது. இந்த அடிப்படியில் இருந்துதான் நாம் வரலாற்றையும் மாறிவரும் மனிதர்களின் பண்பாடுகளையும் மதிப்பிட வேண்டும். உலகின் எல்லா சமூகங்களும் அநாகரிக நிலையில் இருந்துதான் நாகரிக நிலையை எட்டி இருக்கின்றன. எந்தச் சமூகம் அர்த்தமற்ற பழமையை கொண்டாடு கின்றதோ அந்தச் சமூகம் அறிவியல், பண்பாடு, என அனைத்திலும் தேங்கிவிடும். ஆனால் அப்படி தேங்கிப்போன சமூகங்களை இன்று உலகில் காண்பது அரிது. முதலாளித்துவத்தின் அபாரமான வளர்ச்சியானது தனது கரங்களை இந்தப் புவிப்பரப்பு எங்கும் பரப்பி சமூகத்தின் மோன நிலையை உடைத்தெறிந்து இருக்கின்றது.

அப்படித்தான் தமிழ்ச்சமூகமும் பல்வேறு மாற்றங்களை அடைந்து வந்துள்ளது. தமிழனின் ஆதி மொழி, ஆடை, உணவு, நாகரிகம் என அனைத்துமே பெரும் மாற்றத்தை இன்று அடைந்திருக்கின்றது. தமிழன் பண்பாட்டு தளத்தில் உலகம் முழுவதும் ஏற்பட்ட மாற்றங்களுக்கு முகம் கொடுத்தே வந்துள்ளான். சனாதன சிந்தனைகளான சாதி, மதம் போன்றவை என்னதான் அவனைக் கட்டுப் படுத்தினாலும் பிழைக்க வேண்டும் என்றால் உலகம் மாறுவதற்கு ஏற்ப மாறித்தான் ஆகவேண்டும் என்ற வாழ்வியல் நெருக்கடி அவனை மாற்றிக்கொண்டே தான் வந்திருக் கின்றது. கடல் கடந்து போகக்கூடாது என்று தர்ம சாஸ்திரம் செய்தவர்களே பணத்திற் காகவும் பதவிக்காகவும் தர்மசாஸ்திரத்திரத்தை மீறி கடல்கடந்து போனார்கள். அதனால் சனாதனம் கூட மாற்றத்தை சந்தித்தே வந்துள்ளதை நம்மால் புரிந்துகொள்ள முடியும்.

இன்று தமிழர்கள் பேண்ட், ஜீன்ஸ், பெர்முடா, கைலி, லெகின்ஸ், டிசர்ட், டாப்ஸ் என பல வகையான ஆடைகளை பயன்படுத்து கின்றார்கள். ஆனால் பழந்தமிழ் மக்கள் தம்முடைய சந்ததிகள் இதுபோன்ற நாகரிக ஆடைகளை அணிவார்கள் என்று நினைத்துக் கூட பார்த்திருக்க மாட்டார்கள். பண்டையத் தமிழகத்தில் குறிஞ்சி, முல்லை நிலங்களில் வாழ்ந்த மக்கள் பூவையும், தழையையும் கோத்து அதை ஆடையாக அணிவதையே வழக்கமாகக் கொண்டிருந்தனர். "கொண்டைக் கூழைக் தண்தழைக் கடைசியர்"(புறம்-61),"அளிய தாமே சிறுவெள்ளாம்பல்!, இளையம் ஆகத் தழையாயினவே" (புறம்-248),"அணித்தழை

நுடங்க ஓடி"(புறம்340), "ஆம்பூந் தொடலை அணித்தழை அல்குல்" (புறம்-341) போன்ற வரிகள் மூலம் இதை தெரிந்துகொள்ள முடிகின்றது.

மேலும் கம்பளி, பஞ்சு, பட்டு, ஒருவகை மலையெலியின் மயிர் போன்றவற்றாலும் நெய்யப்பட்ட ஆடைகள் பயன்பாட்டில் இருந்துள்ளன. "உண்பது நாழி; உடுப்பவை இரண்டே;(புறம்-189) என்ற பாடல் அரசனுக்கும், வேடனுக்கும் உண்ணப்படும் பொருள் ஒரு நாழித் தானியமே. உடுக்கப்படுபவை அரை ஆடை, மேலாடை என இரண்டே என இடித்துரைக்கின்றது. வேட்டி அணியும் வழக்கம் அன்றே இருந்தது என்பதையும், அது அரசனுக்கும், விலங்குகளை வேட்டையாடி பிழைக்கும் வேடனுக்கும் சமமாகவே இருந்திருக்கின்றது என்பதும் இதன் மூலம் தெரிகின்றது. பொதுவாக தமிழ்ச் சமூகம் என்றில்லாமல் அனைத்து இடங்களிலும் இதுதான் இயல்பான போக்காக இருந்திருக்க வேண்டும். ஆனால் சிலர் இன்று வேட்டி என்பது இந்து பண்பாடு அது தமிழரின் பண்பாடு கிடையாது என சொல்லும் போக்கு உள்ளது. அது தவறான வாதமாகும். தமிழ் பேசும் மக்கள் இந்தியா முழுவதும் வாழ்ந்தார்கள் என்பதையும், சிந்து சமவெளி நாகரிகமே திராவிட நாகரிகம் என்று அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டிருப்பதாலும், ஒரு நிலத்தில் தோன்றிய பண்பாடு அத்தோடு புவியியல் ரீதியாக இணைந்த மற்ற பகுதிகளுக்கும் பரவுவது தவிர்க்க முடியாதது என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆடு மாடுகளை மேய்த்துக்கொண்டு வந்த காட்டுமிராண்டி கூட்டத்திடம் மானத்தை மறைக்க ஆடை கட்டும் வழக்கம் இருந்ததா என்பதே பெரிய கேள்விக்குறி தான். அதனால் வேட்டியை இந்து பண்பாடு என்று சொல்லி அதைப் பார்ப்பனியத்துக்கு தாரை வார்ப்பது அபத்தமானதாகும்.

அதே போல பெண்கள் இடையில் புடவையை அணியும் வழக்கம் இருந்தது. ஆனால் அவர்கள் தங்களுடைய மார்பகத்தை ஆடையால் மறைக்கும் வழக்கம் அக்காலத்தில் இருந்ததாக தகவல் இல்லை. சந்தனத்தால் தொய்யில் எழுதியும், மலர்களை அணிந்துமே பெண்கள் தங்கள் மார்பை மறைத்துள்ளனர். "ஐய பிதிர்ந்த சுணங்கு அணி மென்முலை மேல் தொய்யில் எழுதுகோ மற்று என்றான்" (முல்லைக் கலி 11; 15-17) என்ற வரிகள் மூலம் இதைத் தெரிந்து கொள்ள முடிகின்றது. பெண் மக்கள் இடையில் மேகலை அணிந்து அதன்மேல் பூந்துகில் சுற்றிக்கொள்வார்கள். பாடினிகள் தன் உடம்பின் பெரும் பகுதியை வெளியில் காட்டிக்கொண்டனர். பூப்போட்ட வெண்ணிறப் புடவைகளையும் பெண்கள் அணிந்துள்ளனர். மதுரைக்காஞ்சியில் பூவேலை செய்யப்பட்ட புடவைகள் மதுரை அங்காடிகளில் விற்பனை செய்யப்பட்டதாக குறிப்புகள் உள்ளன. இன்று பெண்கள் அணியும் இரவிக்கை என்பது தெலுங்கு மக்களின் உறவால் தமிழர்களுக்கு கிடைத்ததாகும். இரவிக்கை என்ற சொல் கூட தெலுங்கு மொழியில் இருந்து வந்ததாகும்.

திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் இருந்த கன்னியாகுமரி, திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் நாடார், நாயர், ஈழவர், புலையர் உட்பட 18 சாதிகளைச் சேர்ந்த மக்களுக்கு மேலாடை அணியும் உரிமை மறுக்கப்பட்டிருந்தது. இதற்கு எதிராக வைகுண்ட சுவாமிகள் காலத்தில் கிறிஸ்தவ போதகர்களின் வழிகாட்டுதலின் படி கிறிஸ்தவ நாடார்களினால் தோள்சீலைப் போராட்டம் துவக்கப்பட்டது. வைகுண்ட சுவாமிகளின் மறைவிற்குப் பின் கிறிஸ்தவ நாடார்கள் மற்றும் இந்து நாடார்கள் இருவரும் இணைந்து போராடினர். 37 ஆண்டுகள் இந்தப் போராட்டம் நடைபெற்றது. 1859ல் நாடார் பெண்களுக்கு தோள்சீலை அணிகின்ற உரிமையை திருவிதாங்கூர் அரசு வழங்கியது. தொடர்ந்து நடந்த போராட்டத்தின் காரணமாக 1865ல் இதர அடித்தட்டு சாதி பெண்களுக்கும் அந்த உரிமை கிடைத்தது.

ஆனால் இன்று பெண்கள் ரவிக்கைக்கும், புடவைக்கும் பெரும்பாலும் விடை கொடுத்து விட்டார்கள். வீட்டில் இருக்கும் போது நைட்டியும், நைட் சூட்டும் வெளியில் போகும் போது பெரும்பாலும் சுடிதாரும், டாப்ஸ் லெகின்சும், ஜீன்சும் அணிந்து செல்கின்றார்கள். படிக்காத, பழமையிலிருந்து விடுபட

**குழந்தைகளுக்கு கிராப்பு வெட்டிவிட்டு, பேண்ட், சர்ட், போட்டு பழக்குங்கள். இதனால் பெற்றோர்களின் செலவும் குறையும்**

முடியாதவர்கள் மட்டுமே ரவிக்கை புடவையை பயன்படுத்துகின்றார்கள். இன்று ஆண்கள் பயன்படுத்தும் ஆடையான அரைக்கால் அல்லது முழுக்கால் ஆடைகள் தமிழ்நாட்டில் 18 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை அறியப் படாதவையாகும். ஆங்கிலேயரும், நவாபுப் படையினர் எனப்படும் வடநாட்டு முசுலிம் களும் வந்த பின்னரே உடம்பின் மேற்பகுதிக்கு தைத்து சட்டை அணியும் வழக்கம் வந்தது. கிறிஸ்துவின் சமகாலத்தில் இங்கு வந்த ரோமானியர்களின் (யவனர்கள்) மேற்சட்டை யினை மெய்ப்பை என்று தமிழர்கள் குறிப்பிட் டுள்ளனர். மேலும் பதினெட்டாம் நூற்றாண் டின் இறுதிவரை துணி தைக்கும் தொழிலாளியைப் பற்றிய எந்தக் குறிப்பும் தமிழ் இலக்கியத்தில் காணப்படவில்லை. ஆனால் தமிழர்கள் ஆடை நெய்ததற்கான குறிப்புகள் பல, சங்க இலக்கியத்தில் கிடைக்கின்றது.சிந்து சமவெளி மற்றும் ஆதிச்சநல்லூர் அகழாய்வில் கிடைத்தவற்றைக் கொண்டும் இதை உறுதி படுத்துகின்றனர்.

இவ்வாறு காலத்திற்கு ஏற்றார்போல தமிழர்கள் தம்முடைய உடைகளை மாற்றிக் கொண்டே வந்திருக்கின்றனர் என்பது புலப்படும். ஆனால் எல்லா காலங்களிலும் உடைகளில் ஏற்றத்தாழ்வுகள் இருந்து கொண்டுதான் வந்திருக்கின்றன என்பதை நாம் மறுக்க முடியாது. சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கும் போது அது உணவு, உடை, இருப்பிடம் என எல்லா இடங்களிலும் வெளிப்படுகின்றது. ஆனால் இந்த வேறுபாட்டைக் களையவேண்டும் என்றும் யாரும் குரல்கொடுத்ததாக தெரியவில்லை. நமக்குத்தெரிந்து ஆடை வேறுபாடுகளைக் களைந்து அனைவருக்கும் பொது ஆடைகள் கொடுக்கப்பட வேண்டும் என்று முதல் முதலில் குரல் கொடுத்த ஒரே தலைவர் பெரியார் மட்டுமே.1930லேயே பெரியார் இதைப் பேசியது சமூக சமத்துவத்தைப் பற்றிய பெரியாரின் புரிதலை காட்டுகின்றது. பெரியார் சொல் கின்றார் - “இப்போது நமக்கு அதாவது இந்தியர்கள் என்பவர்களுக்குள் பலவித உடுப்பும் சாயலும் இருப்பதை பார்க்கின்றோம். பெண்களிலும் அப்படியே.சாதாரணமாக ஆண்களுக்கு இரண்டு பெரிய பெரிய வேஷ்டி அவசியமாகின்றது. இதைத் தவிர ஒன்று அல்லது இரண்டு சட்டையும் அவசியமாகிறது. இது தவிர ஒரு தூவலும் அவசியமாகின்றது. இது தவிர பலருக்கு தலை உருமால் அல்லது குல்லாயும் தேவையாகின்றது. அது போலவே பெண் களுக்கும் 16 முழப்புடவையும், ரவிக்கையும், பாடி என்னும் உள்சட்டையும், உள் ஆடை என்று ஒரு பாவாடையும் வேண்டியிருக்கிறது. இவ்வளவு துணிகளும் உயர்ந்த தினுசில் வாங்க வேண்டு மானால் அதிகப் பணச் செலவுமாகின்றது. சாதாரணமாக ஒரு ஜதை உயர்ந்த தினுசானால் 100, 200, 300, 400ரூ. கூட ஆகிவிடுகின்றது. இவ்வளவு செலவு செய்தும் வேற்றுமையையே காட்டுகின்றது. சாதாரணமாக யாராயிருந்தா லும் இடுப்புக்கு 4 முழத்தில் ஒரு வேஷ்டியை கைலி போல அதாவது இரு தலவும் மூட்டியதாகவும், ஒரு முக்கால் கை குடுத்துணி அதாவது Halfharm என்று சொல்லக்கூடிய ஒரு சட்டையும், சட்டைப்பையில் அடங்கக்கூடிய ஒரு சிறு துவாலும் இருக்கும்படியாக இந்திய உடைகளை ஏன் மாற்றக் கூடாது என்பதே நமது யோசனை” என்று இந்தியா முழுமைக்கும் சேர்த்து ஆடை சமத்துவத்தை கொண்டுவர நினைத்தார் பெரியார். பெண்களின் ஆடைகளைப் பற்றி சொல்லவந்த பெரியார் “ அவர்களது உடை, நகை, தலைமயிர், பெரிய சீலை ஆகியவைகளே பெண்களை பலவீனர் களாகவும், அவற்றின் பொருட்டு அடிமைகளாக ஆக்கி அவர்களை மெல்லியர், பலமற்றவர்கள் என்று சொல்லும்படியும் ஆக்கிவிட்டது. தலைமயிரை ஒரு அழகாகப் பாவிக்கும் உணர்ச்சி சரீரத்தில் ஊறிக் கிடப்பதால் இதைப் பற்றி நினைக்கும்போதும் சொல்லக் கேட்கும் போதும் மக்களைத் திடுக்கிடச் செய்வதாகத் தோன்றலாம். ஆனால் உண்மையை ஊன்றிப் பார்த்தால் அதன் உபத்திரவமும் கெடுதலும் தெரியவரும். இது போலவே நகை விஷயத்திலும் பல மாறுதல்கள் காணப்பட்டாலும் அவைகள்

இந்த மாதிரி அதாவது உடை மாற்றமாகி விட்டால் தானாகவே மாறிவிடும்". (குடிஅரசு - 09.11.1930) என்றார். அதாவது அவர்களின் உடையில் மாற்றம் கொண்டு வந்துவிட்டால் ஒட்டுமொத்தமாக அவர்களின் நகை அணியும் பழக்கத்திலும், முடியை நீளமாக வளர்த்துக் கொள்ளும் பழக்கத்திலும் மாற்றத்தை கொண்டு வந்து விடலாம் என்று சொல்கின்றார் பெரியார்.

அன்று பெரியார் சொன்னது இன்று நடைமுறையாக இருக்கின்றது. பேண்ட், சர்ட் அணிந்து கொள்ளும் பெண்கள் இன்று பெரும்பாலும் தலையை கிராப் வெட்டிக் கொள்கின்றார்கள். அதேபோல நகைகளையும் பெருமளவு தவிர்த்து விடுகின்றார்கள். ஆனால் புடவை அணியும் பெண்களே அதிகப்படியான நகைகளையும், பலவித அழகு சாதன பூச்சுகளையும் பூசிக் கொள்கின்றார்கள். நாம் நம்முடைய குழந்தைகளுக்கு பண்பாடு, வெங்காயம் என்று புடவை கட்டவும், தாவணி அணியவும் கற்றுக்கொடுத்தோம் என்றால் அது மற்றவர்களைப் பார்த்து எனக்கும் நகை வேண்டும், மேச்சுக்கு மேச்சாக செருப்பு வேண்டும், வளையல் வேண்டும் என்று அடம் பிடிக்க ஆரம்பிக்கும். அதனால் குழந்தைகளுக்கு கிராப்பு வெட்டிவிட்டு, பேண்ட், சர்ட், போட்டு பழக்குங்கள். இதனால் பெற்றோர்களின் செலவும் குறையும், சேமிப்பை அதிகப்படுத்தி குழந்தைகளுக்கு நல்ல முற்போக்கான புத்தகங்களை வாங்கிக்கொடுத்து அவர்களின் அறிவியல் சிந்தனையையும் வளர்க்க முடியும்.

**உதவிய நூல்கள்**


1) தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்- டாக்டர் கே.கே.பிள்ளை
2) பண்பாட்டு அசைவுகள்-தொ.பரமசிவன்
3) தமிழகத்தில் சமூக சீர்திருத்தம் இரு நூற்றாண்டு வரலாறு- அருணன்
4) நான் சொன்னால் உனக்கு ஏன் கோபம் வருகின்றது தொகுதி இரண்டு- பசு.கவுதமன்
5) புறநானூறு
6) கலித்தொகை
7) பத்துப்பாட்டு


# பெரியாரின் 'பயணம்'

90-வது வயதில் ழ 180 கூட்டம்.

91-வது வயதில் ழ 150 கூட்டம்.

93-வது வயதில் ழ 249 கூட்டம்.

94-வது வயதில் ழ 229 கூட்டம்.

வாழ்க்கையின் கடைசி 98 நாட்களில் (95-வது வயதில்) 42 கூட்டம்.

இத்தனையும், கடும் நோயின் வலி களுடன்.

ஹெர்னியா பிரச்னையினால் சரிந்துவிழும் குடலை பெல்ட் வைத்துக் கட்டிக்கொண்டு கூட்டம் பேசச் சென்றார்.....

சிறுநீர் கழிக்க வயிற்றுக்குப் பக்கவாட்டில் ஓட்டைப்போட்டு குழாய் செருகப்பட்டிருக்கும்.....

இதையெல்லாம் எந்த ஆட்சியை பிடிக்கச் செய்தார்?

எத்தனை தலைமுறைக்கு சொத்து சேர்க்கச் செய்தார் ?

அவருக்கும் கடவுளுக்கும் வாய்க்கால் தகராறா?

மதங்களுக்கும் அவருக்கும் முன் விரோதமா?

நான் சொல்வதை கேட்டால் தான் உனக்கு சொர்க்கம்;


என்னை வணங்காவிட்டால் நரகம்

என்று கூறும் கடவுள்கள், சாமியார்களுக்கிடையில்...........

நான் தலைவன் நான் தவறே செய்தாலும் என்னை நீ ஆதரித்தே ஆக வேண்டுமென்று கட்டளையிடும் தலைவர்கள் மத்தியில்,

யார் சொன்னாலும், நானே சொன்னாலும் உன் அறிவைக்கொண்டு, அனுபவத்தைக் கொண்டு, படிப்பினையைக் கொண்டு ஆராய்ந்து உன் அறிவு ஏற்றுக் கொண்டால் ஏற்றுக்கொள் இல்லை யென்றால் விட்டுவிடு என்று சொன்ன ஒரே தலைவர் பெரியார் மட்டுமே........

முகநூலிலிருந்து




## மோடி ஆட்சியில் 'தலித்' அடக்குமுறைகள்

# ஐ.நா.வில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம்

**ர. பிரகாசு**

*அனைத்திந்திய 'தலித் மகிளா அதிகார் மான்ச்' என்ற இந்த தலித் பெண்கள் அமைப்பு இந்தியாவில் நடந்த ஜாதி ரீதியான வன்முறைகளைத் தொகுத்து ஜூன் 21ஆம் தேதி ஜெனீவாவில் நடந்த ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை குழுவின் (UNHCR) கூட்டத்தில் சமர்ப்பித்துள்ளது.*

புரட்சியாளர் அம்பேத்கரின் சிலைக்கு பிரதமர் மோடி மாலை அணிவிப்பது, தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக நிலைகளைப் பற்றிய எந்தக் கவலையும் இல்லாத இந்துத்துவ சித்தாந்தங்களை ஏற்றுக்கொண்ட ராம்நாத் கோவிந்தை குடியரசுத் தலைவராக்குவது, தாழ்த்தப்பட்டவர்களை 'தலித்' என்று அழைக்கக்கூடாது என்று ஆர்.எஸ்.எஸ் தனது தொண்டர்களுக்கு உத்தரவிட்டது போன்ற செயல்கள் அண்மைக் காலங்களில் நடந்தன. இவையெல்லாம் ஆர்.எஸ்.எஸ்.சும், பாஜகவும் தான் ஒட்டுமொத்த தாழ்த்தப்பட்ட மக்களின் பாதுகாப்பு அரண்கள் போன்ற தோற்றத்தை உருவாக்கவே செய்தார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். இதற்கு வலு சேர்க்கும் விதமாகத்தான் பாஜக ஆட்சியில் தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான தாக்குதல்கள் குறைந்துவிட்டது என்றும் மோடி தொடர்ந்து சில இடங்களில் பதிவு செய்தார். பிரதமரின் இந்தக் கூற்றும், இவர்களின் செய்கைகளும் உண்மைதானா என்பதைக் காண்போம்.

பேஷ்வா பார்ப்பனர்களின் படையை 1818ஆம் ஆண்டில் கிழக்கிந்திய கம்பனியுடன் இணைந்து மகர்களின் படை போரில் வீழ்த்தியது. இந்த யுத்தத்தின் நினைவாக இப்போதைய மகாராஷ்டிர மாநிலத்தின் புனேவில் உள்ள பீமா கோரேகான் பகுதியில் நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டுள்ளது. போர் வெற்றியின் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 1ஆம் தேதியில் வட மாநிலங்களில் உள்ள லட்சக்கணக்கான மக்கள் இந்த நினைவுச் சின்னத்துக்கு பேரணியாக வந்து வரலாற்றை நினைவுகூறுவதை வழக்கமாகக் கொண் டுள்ளனர். இவ்வளவு காலம் அமைதியாக நடந்துவந்த இந்த நிகழ்வு 200ஆவது நினைவு ஆண்டான இந்த ஆண்டில் மட்டும் கலவரத்தில் முடிந்து உயிரிழப்புகள் வரை சென்றது. பார்ப் பனர்களின் வீழ்ச்சியைத் தாழ்த்தப்பட்டவர்கள் கொண்டாடுவதா என்ற வயிற்றெரிச்சலில் இந்துத்துவ கும்பல்கள் இந்தக் கலவரத்தை திட்டமிட்டு நிகழ்த்தியுள்ளன.

உத்தரப் பிரதேசத்தின் உனா பகுதியில் 18 வயதுக்குக் குறைவான இளம்பெண் பாஜக சட்ட மன்ற உறுப்பினரால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டார். இதுகுறித்து காவல் நிலையத்தில் புகாரளித்த அந்த இளம்பெண்ணின் தந்தை காவல் துறை விசாரணையில் மர்மமான முறையில் உயிரிழந்தார். அரியலூரைச் சேர்ந்த 16 வயது மாணவி நந்தினி 2016ஆம் ஆண்டு டிசம்பரில் இந்து முன்னணி நிர்வாகிகளால் பாலியல் கூட்டு வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு மிகக் கொடூரமாக கொலை செய்யப்பட்டதும் நமக்கு நினைவிலிருக்கும். கத்துவாவில் 8 வயது இசுலாமிய சிறுமி கடத்திச் செல்லப்பட்டு கோயிலுக்குள் வைத்து வன்புணரப்பட்டு படுகொலை செய்யப்பட்டு தூக்கி வீசப்பட்ட சம்பவமும் இந்த ஆண்டில் நிகழ்ந்தது. இந்த சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்களுக்கு ஆதரவாக, அவர்களை விடுவிக்கக் கோரி பாஜகவினர் போராட்டத்திலும் ஈடுபட்டனர். இவை மட்டுமின்றி பசுவதைத் தடுப்பு என்ற பெயரில் குஜராத்தில் 4 தாழ்த்தப்பட்ட சமூகத்து இளைஞர்கள் இந்துத்துவக் கும்பலால் கட்டி வைத்து அடிக்கப்பட்ட சம்பவமும் கடந்த ஆண்டில் நிகழ்ந்தது.

இதுபோன்ற பசுவதைத் தடுப்பு என்ற பெயரில் சங் பரிவார் கும்பல்களால் பாஜக ஆட்சிக்கு வந்தபிறகு கடந்த 4 ஆண்டுகளில் பல்வேறு பகுதிகளில் தாக்குதல்களும், கொலை களும் அதிகளவில் நடந்துள்ளன. இவ்வாறாக தாழ்த்தப்பட்ட, சிறுபான்மையின மக்கள் மீது பாஜக மற்றும் இந்துத்துவக் கும்பல்கள் தாக்குதல்கள், பாலியல் வன்கொடுமைகள், கொலைகள் நிகழ்த்தியது மட்டுமின்றி ஆதிக்க ஜாதி வெறி இந்துக்களும் பல்வேறு இடங்களில் இதுபோன்ற செயல்களில் ஈடுபட்ட செய்திகள் தொலைக்காட்சிகளிலும், செய்தித்தாள்களிலும் அவ்வப்போது வெளிவந்து கொண்டே இருந்தன. அண்மையில் நடந்த கச்சநத்தம் படுகொலை வரை இதற்கும் பல உதாரணங்களை சொல்லலாம்.

இவ்வாறாக, செய்திகளில் வந்தவையே கடந்த 4 ஆண்டுகளில் மோடி ஆட்சியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எவ்வளவு பெரிய கொடுமை இழைக்கப்பட்டிருக்கிறது என்பதை நமக்குக் கட்டாயம் உணர்த்தும். மேலோட்டமாக செய்திகளில் வந்தவற்றை மட்டும் பார்க்காமல் கடந்த 4 ஆண்டுகளில் ஒட்டுமொத்தமாக எவ்வளவு கொடுமைகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்பட்டிருக் கின்றன என்பதைப் புள்ளி விவரங்களோடு பார்த்தால் இன்னும் பெரிய பேரதிர்ச்சி நமக்கு ஏற்படுகிறது. இந்தப் பணியைத்தான் அனைத்திந்திய தலித் மகிளா அதிகார் மான்ச் என்ற பெண்கள் அமைப்பு செய்துள்ளது. இந்த தலித் பெண்கள் அமைப்பு இந்தியாவில் நடந்த ஜாதி ரீதியான வன்முறைகளைத் தொகுத்து ஜூன் 21ஆம் தேதி ஜெனீவாவில் நடந்த ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை குழுவின் (UNHCR) கூட்டத்தில் சமர்ப்பித்துள்ளது.

"Voices Against Caste Impunity: Narratives of Dalit Women in India" என்ற தலைப்பில் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை பெரும்பாலும் அரசுத் தரவுகளின் ஆதாரங்களைக் கொண்டே தயார் செய்யப்பட்

டுள்ளது. இந்த அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு ஆங்கில ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன. ஸ்க்ரால், ஃபிரண்ட்லைன் போன்ற ஊடகங்கள் சிறப்புக் கட்டுரைகளையும் வெளியிட்டு விவாதங்களை உண்டாக்கியுள்ளன. ஆனால் தமிழக ஊடகங்கள் இதுவரையிலும் இதுகுறித்து வாய் திறக்காமல் மவுனித்து வருகின்றன. இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிற புள்ளி விவரங்களை நாம் இப்போது சுருக்கமாகக் காணலாம்.

மோடி அம்பேத்கரின் பெயரைப் பயன்படுத்துகிறார். ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக இருக்கிறார். 2014ஆம் ஆண்டு பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்த பிறகுதான் தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான வன்முறைகள் அதிகரித்திருக்கிறது என்று திட்டவட்டமாக தனது கருத்துக்களை முன் வைக்கிறது இந்த ஆய்வு. 2014ஆம் ஆண்டில்தான் தாழ்த்தப்பட்ட மக்களின் மீது மிக அதிக அளவிலான வன்முறைச் சம்பவங்கள் நடந்துள்ளன. தேசிய குற்ற ஆவணப் பணியகத்தின் (NCRB) கணக்குப்படி அந்த ஒரு ஆண்டில் மட்டும் தாழ்த்தப்பட்ட மக்கள் அவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள், கொலைகள், பாலியல் வன்முறைகள் தொடர்பாக அளித்த புகார்களில் 47,064 வழக்குகள் பதியப்பட்டுள்ளன. இது 2013ஆம் ஆண்டைக் காட்டிலும் 19 விழுக்காடு அதிகமாகும். 2014ஆம் ஆண்டில் நாடு முழுவதும் 744 தாழ்த்தப்பட்டவர்கள் கொல்லப்பட்டும் உள்ளனர். முந்தைய ஆண்டில் கொல்லப் பட்டவர்களின் எண்ணிக்கை 676ஆக இருந்தது.

ஆட்சி அதிகாரத்தில் பாஜக இருந்த திமிரில், தாழ்த்தப்பட்ட மக்களின் மீது இந்துத்துவப் பாசிசத்தை சங் பரிவாரங்கள் ஒரே ஆண்டில் மிகத் தீவிரமாக ஏவியிருப்பதையே இது காட்டுகிறது. ஏனென்றால் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் பாஜக நேரடியாகவும், கூட்டணியிலும் ஆட்சியில் இருந்த மாநிலங்களில்தான் இந்த வன்முறைச் சம்பவங்கள் அதிகமாக நிகழ்ந்துள்ளன. குறிப்பாக மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான்,

**பாதிக்கப்படுவதை விட கொடுமையானது, அதற்கான நீதி மறுக்கப்படுவது. மற்ற சமூகத்துப் பெண்களைக் காட்டிலும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின பெண்களுக்குத்தான் அவர்கள் மீதான வன்முறைகளுக்குப் பிறகு கிடைக்க வேண்டிய அடிப்படை உதவிகள் கூட முறையாகக் கிடைப்பதில்லை.**

கோவா, குஜராத் ஆகிய மாநிலங்களில்தான் 2013ஆம் ஆண்டைக் காட்டிலும் அதிகளவில் இத்தகைய குற்றங்கள் பதிவாகியுள்ளன. 2015ஆம் ஆண்டில் 38,680 வழக்குகளும், 2016ஆம் ஆண்டில் 40,801 வழக்குகளும் தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான வன்கொடுமைகள் தொடர்பாக பதிவாகியுள்ளன.

ஒட்டு மொத்தமாகக் கடந்த 10 ஆண்டுகளில் 66 விழுக்காடு அளவுக்கு வன்கொடுமைகள் அதிகரித்திருக்கின்றன. இந்தக் காலகட்டத்தில் தாழ்த்தப்பட்ட பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் தொடர்பான வழக்குகள் இரட்டிப்பாகியுள்ளன. 2006ஆம் ஆண்டில் தோராயமாக நாள் ஒன்றுக்கு 3 பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப் பட்டுள்ளனர். இது 2015ஆம் ஆண்டில் இரட்டிப்பாகி நாள் ஒன்றுக்கு 6ஆக அதிகரித்து விட்டது. இது வெறும் பதிவு செய்யப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கையே தவிர உண்மைக் கணக்கு மிக அதிகம் என்றும் இந்த ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. பல்வேறு காரணங்களுக்காக பலர் வழக்குப் பதியாமல் விட்டுள்ளனர். பல்வேறு இடங்களில் பாதிக்கப் பட்டவர்களுக்கு நியாயம் கிடைக்க காவல் துறை ஒத்துழைப்பு அளிக்கவில்லை. இதற்கு அப்பகுதியில் வாழும் ஆதிக்க ஜாதிகளின் அழுத்தம் முக்கியக் காரணமாக இருந்துள்ளது.

இந்த ஜாதிய அடுக்குமுறைகளைக் கொண்ட சமூகக் கட்டமைப்பின் விளைவால்

தாழ்த்தப்பட்ட மக்களின் மீது நிகழ்த்தப்பட்ட வன்கொடுமைகள் அவர்களது சுகாதாரம், கல்வி, வாழ்க்கை நிலை போன்றவற்றை எவ்வாறு பாதித்துள்ளது என்பதையும் இந்த ஆய்வில் தலித் பெண்கள் அமைப்பு முன்வைத்துள்ளது. 2011ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 16.6 விழுக்காட்டினர் தாழ்த்தப்பட்ட சமூகத்தினராவர். அதாவது நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 20.14 கோடி பேர் தாழ்த்தப்பட்டவர்கள் ஆவர். இந்த மக்கள் தொகை 2015ஆம் ஆண்டில் அதிகரித்துள்ளது. 2015ஆம் ஆண்டுக்கான தேசிய குடும்பநல சுகாதார ஆய்வறிக்கையின்படி நாட்டில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்களின் எண்ணிக்கை ஒட்டுமொத்த மக்கள் தொகையில் 20.6 விழுக்காடாக அதிகரித்துள்ளது. இதில் நகரங்களில் 16.8 விழுக்காட்டினரும், கிராமங்களில் 22.6 விழுக்காட்டினரும் வாழ்கின்றனர்.

இந்திய அளவில் பார்த்தால் கல்வியறிவிலும் தாழ்த்தப் பட்டவர்கள் மற்ற சமூகத்துடன் ஒப்பிடுகையில் பின்தங்கித்தான் உள்ளனர். தேசிய மாதிரி ஆய்வறிக்கையின்படி தாழ்த்தப்பட்ட சமூகத்து ஆண்களில் 64.21 விழுக்காடு ஆண்களும், 48.33 விழுக்காடு பெண்களும் மட்டுமே எழுத்தறிவு பெற்றுள்ளனர். அதிகமான ஒடுக்குமுறைக்கு இவர்கள் தொடர்ச்சியாக உள்ளாக்கப்படுவதே கல்வியறிவில் இவர்கள் மிகவும் பின்தங்கியிருப்பதற்கு காரணமாகவுள்ளது.

இப்பிரிவைச் சேர்ந்த 52.6 விழுக்காடு மக்கள் சாதாரணக் கூலிகளாகத்தான் இருக்கிறார்கள். இவர்களில் வெறும் 0.8 விழுக்காட்டினரிடம் மட்டும்தான் 4 ஹெக்டேர் அல்லது அதற்கு அதிகமான நிலம் உள்ளது. இது மற்ற வேளாண் தொழில் புரியும் சமூகங்களைக் காட்டிலும் மிக மிகக் குறைவாகும். எஞ்சியவர்கள் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலம் கொண்ட சிறு விவசாயிகளாக உள்ளனர்.

இதனால் பொருளாதார நிலைகளில் இவர்கள் பின்தங்கியே உள்ளனர். இது அப்பகுதியில் வாழும் ஆதிக்க ஜாதியினருக்கு ஒரு வாய்ப்பாக உள்ளது. இந்தியாவின் மற்ற பகுதிகளைக் காட்டிலும் ராஜஸ்தான், பீகார், அரியானா, உத்தரப் பிரதேசம் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதார நிலைகள் மிகவும் நலிந்தே உள்ளது. இதனால் இவர்கள் அப்பகுதியில் வாழும் ஆதிக்க ஜாதியினரின் வீடுகளில் அல்லது தோட்டங்களில் வேலை பார்க்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்படுகின்றனர். ஆதிக்க ஜாதி இந்துக்களிடம் வேலை பார்ப்பதால் திருமண செலவுகள், மருத்துவ செலவுகள் போன்ற பணத் தேவைகளுக்கு அவர்களை நம்பியே இருக்க வேண்டிய நிலையில் உள்ளனர். இது இவர்களின் மீது வன்கொடுமைகள் அதிகளவில் நிகழ்த்தப்படுவதற்கு ஒரு முக்கியக் காரணியாய் இருக்கிறது.

இதில் தாழ்த்தப்பட்ட பெண்கள் நிலைதான் இன்னும் மோசம். இந்தியாவைப் பொறுத்தவரையில் எல்லாத் தரப்பு பெண்களும் பல்வேறு வடிவங்களில் வன்முறைக்குள்ளாகப்படுகின்றனர் என்பதை மறுக்க இயலாது. அரசின் பல்வேறு புள்ளி விவரங்களும் இதை எடுத்துரைக்கின்றன. அதிலும் தாழ்த்தப்பட்ட பெண்கள் நிலை மிகவும் மோசமாக இருப்பதாக இந்த ஆய்வில் விளக்கியுள்ளனர் தலித் மகிளா அமைப்பினர்.

தேசிய குடும்பநல சுகாதார ஆய்வு 4இன் படி 15 வயது முதல் 49 வயதுக்குட்பட்ட கிராமப்புற தாழ்த்தப்பட்ட பெண்கள் 33.2 விழுக்காட்டினர் உடல் மற்றும் பாலியல் ரீதியான வன்முறைக்கு உள்ளாகியுள்ளனர். இதில் பிற்படுத்தப்பட்ட பிரிவு பெண்கள் 29.2 விழுக்காடும், பழங்குடியின பெண்கள் 26.3 விழுக்காடும், பொதுப் பிரிவு பெண்கள் 19.7 விழுக்காடும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்படுவதை விட கொடுமையானது, அதற்கான நீதி மறுக்கப்படுவது. மற்ற சமூகத்துப் பெண்களைக் காட்டிலும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின பெண்களுக்குத்தான் அவர்கள் மீதான வன்முறைகளுக்குப் பிறகு கிடைக்க வேண்டிய அடிப்படை

உதவிகள் கூட முறையாகக் கிடைப்பதில்லை. மேலும் இந்தியாவில் ஜாதி, மதம், மொழி, வயது, இயலாமை போன்ற காரணிகளின் அடிப்படையில் இன்னல்களுக்கு உள்ளாகும் பெண்கள் குறித்த முறையான, முழுமையான ஆவணங்கள் கூட தொகுக்கப்படவில்லை என்றும் இந்த ஆய்வு குற்றம் சாட்டியுள்ளது.

இந்த ஆய்வறிக்கை குறித்து அனைத்திந்திய தலித் மகிளா அதிகார் மான்ச் அமைப்பின் பொதுச் செயலாளர் ஆஷா கவ்டல் ஃபிரண்ட்லைன் ஊடகத்துக்கு அளித்துள்ள பேட்டியில், "இந்த ஆய்வறிக்கையை நாங்கள் அய்.நா. மனித உரிமை அமைப்பில் சமர்ப்பித் திருப்பது உலக நாடுகளிடம் அனுதாபம் தேட அல்ல. எங்கள் உரிமைகளைத் தடை செய்து ஒருபக்கம் சாயும் இந்த நிலைக்கு எதிராகத்தான் நாங்கள் போராடுகிறோம் என்பதை உலக நாடுகள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்" என்று கூறியுள்ளார்.

இவையெல்லாவற்றுடன் மற்றொரு முக்கியமான வாதத்தையும் இந்த ஆய்வு அய்.நா மன்றத்தில் முன்வைத்துள்ளது. அதாவது கடந்த சில ஆண்டுகளில் புதியப் புதிய வடிவங்களில் தலித் மற்றும் பழங்குடியின பெண்கள் மீதான வன்முறைகள் அதிகரித்திருக்கிறது. அது ஜாதியின் பெயராலோ, வகுப்பின் பெயராலோ, பாலினப் பிரிவின் பெயராலோ நிகழ்ந்திருக்க லாம். இதற்கான ஆவணங்களையும் வன் கொடுமை கண்காணிப்பு அமைப்பின் தகவல்கள் மூலம் இந்த ஆய்வில் இணைத்திருக்கிறார்கள்.

ஆனால் மேலே கூறியது போல இவர்களுக்கு உரிய நீதி கிடைப்பதுதான் மிகப்பெரிய கடினமாக ஒன்றாக இருக்கிறது. ஏனென்றால் எந்த ஆதிக்க ஜாதிகளை சேர்ந்த வெறியர்கள் இவர்கள் மீது வன்கொடுமைகளை திணிக்கிறார்களோ, அந்த ஆதிக்க ஜாதிகளை சேர்ந்தவர்கள்தான், ஜாதியக் கட்டமைப்பை உள்வாங்கிக்கொண்டவர்கள்தான் காவல் துறை அதிகாரிகளாகவும், நீதிபதிகளாகவும் ஏறி அமர்ந்திருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட ஆதிக்க ஜாதியினர்கள் பொறுப்பில் அமர்ந்துகொண்டு பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களிடம் ஜாதி ஒற்றுமை பேசுகிறார்கள். சில சமயங்களில் வழக்குகளைத் திரும்பப் பெறக் கோரி சம்மந்தப்பட்டவரையும், அவரது குடும்பத்தாரையும் பயங்கரமான மிரட்டலுக்கும் உள்ளாக்குகின்றனர். எஸ்.சி./ எஸ்.டி சட்டத்தின்படி உரிய நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரத்தை அரசியலமைப்பு சட்டப் பிரிவுகள் வழங்கியுள்ளன. ஆனால் இதுவரையில் இந்த சட்ட உட்பிரிவுகள் பயன்படுத்தப்பட்டதே இல்லை என்று இந்த ஆய்வறிக்கை ஒரு முக்கியமான குற்றச் சாட்டையும் முன்வைக்கிறது.

இப்படிப்பட்ட ஒரு மோசமான நிலையில் தாழ்த்தப்பட்ட மக்களை வைத்துக் கொண்டுதான், மோடி அரசு தனது பார்ப்பன மயமாக்கப்பட்ட நீதித் துறையின் துணையுடன் வன்கொடுமை சட்டத்தை நீர்த்துப் போகச் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக் கிறது. தனக்கும் அதற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லாததைப் போல போலி நாடகத்தையும் நடத்தி வருகிறது. சமூகத்தின் விளிம்பு நிலை மக்களைக் காத்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தப் பொறுப்புடன் செயல்பட வேண்டிய அரசு, அதற்கு நேர்மாறாக ஆதிக்க சக்திகளுக்கு ஆதரவாகத்தான் செயல்பட்டு வருகிறது. இப்படியான அருவருக்கத்தக்க அரசியலில்தான் மோடி 4 ஆண்டுகளைக் கடந்திருக்கிறார்.

இது உலக நாடுகள் கண்டிக்கத்தக்க ஒன்று. ஆனாலும் கூட அமெரிக்கா போன்ற வல்லாதிக்க நாடுகளின் மன்றமான அய்.நாவில் இதற்குத் தீர்வு கிடைக்கப்போவதில்லை. இருப்பினும் உலக நாடுகளின் பார்வைக்கு இதை எடுத்துச் சென்ற தலித் மகிளா அதிகார் மான்ச் அமைப்பைச் சேர்ந்த பெண் தோழர்களின் முயற்சி கட்டாயம் பாராட்டத்தக்கது. பார்ப்பனிய இந்தியாவின் இந்துத்துவப் பாசிச போலி முகத்தை உலக நாடுகளும் அறியட்டும்.

தகவல்கள்: ஃபிரண்ட்லைன்

கட்டுரையாளர் : பெரியாரிஸ்ட் - பத்திரிகையாளர்

# அதிகார வரம்புகளை மீறும் ஆளுநர்கள்

● விடுதலை இராசேந்திரன் ●

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைவிட நடுவண் ஆட்சியால் நியமிக்கப்படும் ஆளுநர்கள் வலிமையாக மாறி நிற்கும் ஒரு அவலம் – அரசியலில் அரங்கேறிக் கொண்டிருக்கிறது.

ஆளுநர்களை அரசியலுக்குப் பயன்படுத்துவது பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு உருவான நிலை என்று சுருக்கிப் பார்த்துவிட முடியாது. காங்கிரஸ் ஆட்சி காலத்திலும் இந்த ‘அதிகார ஆக்கிரமிப்புகள்’ நடந்தன. ஆனால் பாரதிய ஜனதா கட்சியின் ஆட்சியில் இது தீவிரம் பெற்று ‘ஆளுநரின் அதிகார ஆக்கிரமிப்புகள்’ ஒரு நிலைத்த அரசியல் நடவடிக்கைகளாகிவிட்டன.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கும் ஆளுநருக்குமிடையே நடக்கும் அதிகாரப் போட்டி, தமிழ்நாட்டில் வேறு புதிய வடிவத்தில் எழுந்து நிற்கிறது. இறையாண்மையுள்ள ஒரு மாநில அரசு தனக்கு மக்கள் வழங்கியிருக்கும் சட்டப்பூர்வமான உரிமைகளை தானாகவே முன் வந்து ஆளுநரின் கால்களில் வெட்கப்படாமல் சமர்ப்பித்துக் கொண்டிருக்கிறது. ஆளுநரின் அதிகார அத்துமீறல்களை எதிர்த்து எதிர்க் கட்சிகள் தான் போராடுகின்றன. போராடினால் 7 ஆண்டு சிறை என்கிறது - ஆளுநர் மாளிகை அறிவிப்பு. தமிழ்நாடு அரசோ, ஆளுநர் அறிவிப்புக்கு பச்சைக் கொடி காட்டுகிறது. ‘நீட்’ தேர்விலிருந்து தமிழ்நாட்டுக்கு விதிவிலக்குத் தரவேண்டும் என்று தமிழக சட்டமன்றத்தில் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்ட மசோதாவை குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்குக்கூட அனுப்பி வைக்காமல், கிடப்பில் போட்டாலும் அதைத் தட்டிக் கேட்கத் தயாராக இல்லை தமிழக அரசு. சி.பி.எஸ்.இ. நீட் தேர்வுக்கான ‘தமிழ் வினாத்தாளில்’ 49 தவறுகள்.

இந்த ஆண்டு தமிழ் வழியில் தேர்வு எழுதிய தமிழ்நாட்டைச் சார்ந்த 24,720 பேரில் தேர்ச்சிப் பெற்றவர்கள் 460 பேர் மட்டுமே. மதுரை உயர்நீதிமன்றத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலங்களவை உறுப்பினர் தொடர்ந்த வழக்கால் தமிழ் வழியில் தேர்வு எழுதியவருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் வழங்க 196 மதிப்பெண்கள் கூடுதலாக வழங்கப்பட வேண்டும் என்ற தீர்ப்பு கிடைத்துள்ளது. நியாயமாக தமிழக அரசு தொடர்ந்திருக்க வேண்டிய வழக்கு இது. இப்போது ‘சி.பி.எஸ்.இ.’ மேல்முறையீட்டுக்கு உச்சநீதிமன்றம் போன நிலையிலும் தன்னையும் ஒரு மனுதாரராக தமிழ்நாடு அரசு இணைத்துக் கொள்ள முன்வராமல் சமூக நீதி மாநிலமான தமிழ் நாட்டையே நடுவண் ஆட்சிக்கு அடிமையாக்கி விட்டார்கள். எதிர்பார்த்தது போல் சி.பி.எஸ்.இ. உச்சநீதிமன்றத்தில் தடையும் வாங்கி மதுரை நீதிமன்றத் தீர்ப்பை நிறுத்திவிட்டது.



இந்தப் பின்னணியில் டெல்லி யூனியன் பிரதேசத்தில் நடக்கும் ஆம் ஆத்மி' ஆட்சி ஆளுநரின் அத்துமீறலுக்கு எதிராக உறுதியுடன் களமிறங்கியது. இப்போது ஆளுநர் அதிகாரத்துக்கு கடிவாளம் போடும் தீர்ப்பையும் உச்சநீதிமன்றம் வழியாகப் பெற்றிருக்கிறது. 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு, கடந்த ஜூலை 4, 2015இல் உச்சநீதிமன்றத்தில் வழங்கிய தீர்ப்பு கூட்டாட்சி தத்துவம் என்ற கண்ணோட்டத்தில் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. (தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா தன்னுடைய சார்பிலும், நீதிபதிகள் ஏ.கே. சிக்ரி மற்றும் ஏ.எம். கான்வில்கர் ஆகியோர் சார்பிலும் தீர்ப்பு எழுதியிருக்கிறார். நீதிபதிகள் டி.ஒய்.சந்திர சூட் மற்றும் அசோக் பூஷன் இணைந்து தனியாக தீர்ப்பு எழுதினார்கள். அனைவரது தீர்ப்பின் மய்யக் கருத்தும் ஒரே குரலை பேசியிருக்கின்றன)

உச்சநீதிமன்றம் ஒருமித்துத் தீர்ப்பாகக் கூறியிருப்பது என்ன? ஒன்று - டெல்லி யூனியன் பிரதேசத்தின் நிர்வாகத்துக்கான தலைவர் முதலமைச்சரே தவிர, ஆளுநர் அல்ல. இரண்டு - அனைத்துப் பிரச்சினைகளுக்கும் சட்டமியற்றும் அதிகாரம் டெல்லி சட்டசபைக்கு உண்டு. அமைச்சரவை வழங்கும் ஆலோசனைகளை ஏற்றுத்தான் ஆளுநர் செயல்பட வேண்டும். மூன்றாவது - குடியரசுத் தலைவரிடம் ஆளுநர், அனைத்து அமைச்சரவை முடிவுகளுக்கும் விளக்கம் கேட்கக் கூடாது. தவிர்க்க வியலாத சூழ்நிலையில் கருத்து மாறுபாடுகள் நியாயமானவையாக இருந்தால் மட்டுமே அப்படி விளக்கம் கேட்க முடியும். கடைசி வாய்ப்பாக மட்டுமே ஆளுநர் இந்த உரிமையைப் பயன்படுத்த வேண்டும்; குடியரசுத் தலைவர் கருத்தை அப்படியே செயல்படுத்த வேண்டிய கடமை ஆளுநருக்கு உண்டு. நான்காவதாக - அமைச்சரவை எடுக்கும் ஒவ்வொரு முடிவுக்கும் ஆளுநர் ஒப்புதல் பெற்றாக வேண்டும் என்ற அவசியமில்லை. முடிவுகளை ஆளுநரின் பார்வைக்குக் கொண்டு செல்லும் பொறுப்பு அமைச்சரவைக்கு உண்டு.

- இவை தீர்ப்பின் முக்கிய அம்சங்கள்.

டெல்லி யூனியன் பிரதேசத்துக்கு தனித் தகுதி உண்டு. சட்டமன்றம், அமைச்சரவை உள்ளிட்ட சிறப்புத் தகுதிகளை சட்ட ரீதியாகப் பெற்றுள்ளது. இந்தியாவின் யூனியன் பிரதேசங்கள் மூன்று வகையாக பிரிக்கப்பட்டுள்ளன. அந்தமான் நிக்கோபர், இலட்சத் தீவு, தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி, டாமன் மற்றும் டய்யூ, சண்டிகார் ஆகிய யூனியன் பிரதேசங்களுக்கு சட்டமன்றங்கள் கிடையாது. நாடாளுமன்றச் சட்டத்தின் கீழ் (பிரிவு 239ஏ) சட்டசபை அதிகாரங்கள் வழங்கப்பட்ட யூனியன் பிரதேசம் இரண்டாவது வகை. புதுச்சேரி மாநிலம் இந்தப் பிரிவின் கீழ் வருகிறது. நாடாளுமன்ற சட்டத்தை பயன்படுத்தாமல் அரசியல் சட்டத்தையே திருத்தி, அதன் வழியாக சட்டசபை மற்றும் அமைச்சரவை அதிகாரம் பெறுவது மூன்றாது வகை. டெல்லி யூனியன் பிரதேசம் இந்த சிறப்புப் பிரிவின் கீழ் வருகிறது. (1991இல் சட்டத்தில் 69ஆவது திருத்தத்தின் வழியாக டெல்லி யூனியன் பிரதேசம் உருவாக்கப்பட்டது) இதில் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தை டெல்லி யூனியன் பிரதேசத்தோடு ஒப்பிட முடியாது என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தீர்ப்பில் சுட்டிக்காட்டியிருக்கிறார். டெல்லி யூனியன் பிரதேச குடிமக்களின் ஜனநாயக, சமூக, அரசியல் அதிகாரங்களை உறுதி செய்வதற்காகவே டெல்லி யூனியனுக்கு சிறப்புத் தகுதி வழங்கப்பட்டிருக்கிறது.

இதே வழக்கில் 2016 ஆகஸ்ட் 4ஆம் தேதி தீர்ப்பு வழங்கிய டெல்லி உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு மாறாக டெல்லிக்கு சிறப்புத் தகுதி வழங்கப்பட்டிருந்தாலும் அது ஒரு யூனியன் பிரதேசமாகவே கருத வேண்டும் என்றும், அமைச்சரவை முடிவுக்கு ஆளுநர் கட்டுப்பட வேண்டிய அவசியமில்லை. ஆளுநருக்கு தன்னிச்சையாக முடிவு எடுத்து செயல்பட அதிகாரம் உண்டு என்றும் தீர்ப்பளித்தது. வேறு வழியின்றி உச்சநீதிமன்றம் போகும் நிலைக்கு ஆம் ஆத்மி தள்ளப்பட்டது.

சொல்லப்போனால் ஆம் ஆத்மிக்கும் நடுவண் அரசுக்குமிடையிலான மோதல் - மன்மோகன் சிங் பிரதமராக இருந்த அய்க்கிய முன்னணி ஆட்சிலேயே தொடங்கிவிட்டது. 2014ஆம் ஆண்டு மெஜாரிட்டி பலமின்றி வெளியிலிருந்து காங்கிரஸ் ஆதரவுடன்

**பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் பிரிந்து செல்லும் வாய்ப்புகள் உருவாகிவிடலாம் என்ற அச்சமும் அதைத் தடுப்பதற்கான வலிமையான சட்டப் பிரிவுகளை உருவாக்கிட வேண்டும் என்ற துடிப்புமே அரசியல் நிர்ணய சபையில் காங்கிரஸ் தலைவர்களின் உளவியலாக இருந்தது.**

முதல்வராகப் பதவியேற்ற கெஜ்ரிவால், ரிலையன்ஸ் குழும நிறுவனர் அம்பானி, மத்திய அமைச்சர்கள் வீரப்ப மொய்லி மற்றும் முரளி தியோரா மீது இலஞ்ச ஒழிப்புத் துறை வழியாக ஊழல் வழக்குப் பதிவு செய்தார். எரிவாயு சிலிண்டர் விலை நிர்ணயம் செய்வதில் மத்திய அரசின் உடன்பாட்டுடன் நடந்த ஊழலுக்கு எதிரான வழக்கு அது. இந்த வழக்கை இரத்து செய்ய வேண்டும் என்றும், டெல்லி மாநில ஊழல் ஒழிப்புத் துறைக்கு மத்திய அரசு ஊழியர்கள் மீது வழக்குத் தொடர உரிமை இல்லை என்றும் அன்றைய அய்க்கிய முன்னணி ஆட்சி நீதிமன்றத்தில் எதிர் மனு தாக்கல் செய்தது.

அம்பானியின் மீது கை வைத்தால் மோடி ஆட்சி மட்டுமல்ல, காங்கிரஸ் ஆட்சியும் சும்மா விடாது. மோடியின் தேசிய முன்னணி பதவிக்கு வந்தவுடன் இன்னும் ஒரு அடி மேலே சென்று மத்திய அரசு ஊழியர் மற்றும் அமைச்சர்களுக்கு எதிராக டெல்லி ஊழல் ஒழிப்புத் துறைக்கு இருந்த வழக்குப் போடும் உரிமையையே பறித்து தாக்கீது வெளியிட்டது. இதற்குப் பிறகு 2015ஆம் ஆண்டு டெல்லி சட்டமன்றத்துக்கு நடந்த தேர்தலில் முழு மெஜாரிட்டியுடன் ஆம் ஆத்மி ஆட்சிக்கு வந்தது. கெஜ்ரிவால் முதல்வரானார். மோடி ஆட்சி தாக்கீதை எதிர்த்து நீதிமன்றம் போனார். அப்போது டெல்லி உயர்நீதிமன்றம் டெல்லி மாநில அரசின் இலஞ்ச ஒழிப்புத் துறைக்கு இருந்த அதிகாரத்தைப் பறித்து மோடி ஆட்சி வெளியிட்ட அ றிவிப்பு 'சந்தேகத்துக்கு' வழி வகுக்கிறது என்று கூறியதோடு தேர்ந் தெடுக்கப்பட்ட டெல்லி மாநில ஆட்சியின் ஆலோசனைப்படி தான் ஆளுநர் செயல்பட வேண்டும். மக்கள் அளித்த தீர்ப்பு மதிக்கப்பட வேண்டும் என்று மே 25, 2015இல் தீர்ப்பளித்தது.

மோடி ஆட்சி விடவில்லை; அடுத்தக்கட்ட நடவடிக்கையாக மத்திய அரசு அதிகாரிகளுக்கு எதிராக வழக்கைக் கொண்டு வந்தால் அதைப் பதிவு செய்ய காவல் நிலையங்களுக்கு உரிமை கிடையாது என்று அறிவித்தது (டெல்லி மாநில அரசுக்கு காவல்துறை, பொது ஒழுங்கு, நிலம் குறித்த உரிமைகளில் அதிகாரம் கிடையாது. எனவே காவல்துறை மத்திய உள்துறையின் கட்டுப்பாட்டில் இருப்பதைப் பயன்படுத்தி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது) அதைத் தொடர்ந்து டெல்லி மாநில அரசுக்கு அதிகாரிகளை நியமிக்கும் அதிகாரத்தையும் ஆளுநருக்கு வழங்கியது மோடி ஆட்சி. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி இலஞ்ச ஒழிப்புத் துறை தலைமை அதிகாரியை ஆளுநரே நியமித்தார். அதிகாரிகளை மாற்றம் செய்யும் உரிமைகளும் நியமிக்கும் உரிமைகளும் மாநில ஆட்சியிடமிருந்து பறிக்கப்பட்ட நிலையில் மீண்டும் உயர்நீதிமன்றம் போனார் கெஜ்ரிவால். இந்த வழக்கில் 2016இல் டெல்லி உயர்நீதிமன்றம் ஆளுநருக்கே அதிகாரம், தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவைக்கு இல்லை என்று 2015இல் வழங்கிய தீர்ப்பை அப்படியே புரட்டிப் போட்டது. தீர்ப்பு ஆளுநருக்கு சாதகமாக வந்தது.

டெல்லி மாநில அரசின் நிர்வாகத்தை ஆளுநர் முடக்கினார். அதிகாரிகள், முதல்வர் உத்தரவை ஏற்று செயல்பட மறுத்தனர். தலைமைச் செயலாளராக இருந்த அன்ஷீ பிரகாஷ், மாநில முதல்வர் கெஜ்ரிவாலுக்கு எதிராகவே போர்க்கொடி தூக்கினார். ஆம் ஆத்மி சட்டமன்ற உறுப்பினர்களுடன் சேர்ந்து முதல்வர் தன்னை உடல் ரீதியாகத் தாக்குவதற்கு சதித் திட்டம் தீட்டியதாக புகார் கூறினார். ரேஷன் பொருள்களை வீடுகளுக்கே நேரில் கொண்டு போய் சேர்க்கும் திட்டம் உள்ளிட்ட அரசின் பல்வேறு நலத் திட்டங்களை முடக்குவதற்காகவே இத்தகைய பொய்ப் புகார்கள் உருவாக்கப்படுகின்றன என்று கூறிய ஆம் ஆத்மி கட்சியினர் பிறகு ஆளுநர்

மாளிகையிலேயே 24 மணி நேரமும் 'அமரும்' முற்றுகைப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தினர். இறுதியில் உச்சநீதிமன்றம் மாநிலத்தின் உரிமைக் கதவுகளைத் திறந்து விடும் தீர்ப்பை வழங்கியிருக்கிறது.

பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பிறகு அக்கட்சி ஆட்சி செய்யாத மாநிலங்களில் தங்கள் கட்சி விசுவாசிகளை ஆளுநர்களாக நியமித்து ஆளுநர் அதிகாரத்தை அரசியல் நலனுக்கேற்ப முறைகேடாகவே பயன்படுத்துவதை நாடு பார்த்துக் கொண்டிருக்கிறது. அண்மையில் கருநாடகாவில் மெஜாரிட்டி பலம் இல்லாத எடியூரப்பாவை ஆட்சி அமைக்க அழைத்து முதலமைச்சராக பதவி உறுதிமொழியும் ஏற்க வைத்து அவர் மெஜாரிட்டியை நிரூபிக்க முடியாமல் ஓட்டெடுப்புக்கு முன்பே பதவி விலகி ஓடினார்.

மோடி ஆட்சிக்கு வந்த உடனேயே 2015ஆம் ஆண்டு அருணாசலப் பிரதேசத்தில் அரசியல் சித்து விளையாட்டைத் தொடங்கினார்கள். அங்கே ஆளுநராக வந்த ஜெ.பி. ராஜ்கோல்வா சட்டமன்ற கூட்டத் தொடர் நடக்கும் தேதியை அவரே முன்கூட்டியே அறிவித்து சட்டசபையைக் கூட்டச் செய்து தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் ஆட்சியை மெஜாரிட்டி இல்லை என்று டிஸ்மிஸ் செய்தார். காங்கிரசிலிருந்து அதிருப்தியாளர்களை இழுத்து ஒரு பொம்மை ஆட்சியை ஆளுநர் உருவாக்கினார்.

உச்சநீதிமன்றம் தலையிட்டு ஆளுநர் முடிவை நீக்கம் செய்தது. "ஒரு ஆளுநர் தனது சொந்த விருப்பத்துக்காக சட்டமன்றத்தைக் கூட்டுவது, ஆளுநரின் வேலையல்ல. சட்டமன்ற செயல்பாடுகளில் குறுக்கிடுவதாகும்" என்று கூறியது உச்சநீதிமன்ற அமர்வு. தொடர்ந்து உத்தரகாண்ட் மாநிலத்திலும் இந்த ஜனநாயக விரோத மீறல்களை அம்மாநில ஆளுநர் அரங்கேற்றியபோது உச்சநீதிமன்றம் தலையிட்டு தவறைத் திருத்தியது. ஹரிஷ்ராவத் தலைமையில் நடந்த காங்கிரஸ் ஆட்சிக்கு எதிராக 69 காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் போர்க்கொடி உயர்த்தியதால் மாநில ஆளுநர் கே.கே. பவுல் - ஆட்சியை 'டிஸ்மிஸ்' செய்தார். சட்டமன்றத்துக்குள் ஆட்சியின் மெஜாரிட்டி எண்ணிக்கையை நிரூபிக்க வாய்ப்பு தராமல் ஆட்சியை கலைத்தது தவறு என்றது உச்சநீதிமன்றம். 2017ஆம் ஆண்டு கோவா, மணிப்பூர் மாநிலங்களிலும் ஆளுநர் பா.ஜ.க.வின் ஏஜெண்டுகளாக மாறி காங்கிரஸ் தனிப் பெரும்பான்மை கட்சியாக தேர்தலில் வெற்றி பெற்றிருந்தாலும் பா.ஜ.க. தலைமையிலான ஆட்சியை நிறுவிட தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தினர். 2017இல் பீகாரிலும் இதுதான் நடந்தது. ஆளுநராக இருந்த ஆர்.எஸ்.எஸ்.காரரான கேசரிநாத் திரிபாதி, தனிப்பெரும்பான்மை கொண்டிருந்த கட்சியை ஆட்சி அமைக்க அழைக்கவில்லை. அய்க்கிய ஜனதாதளத்தின் தலைவராக இருந்த நித்திஷ்குமார், லல்லு பிரசாத்தின் இராஷ்டிரிய ஜனதா தளத்துடன் கூட்டணி வைத்து ஆட்சி நடத்தினார். திடீரென்று லல்லு கட்சியின் உறவைத் துண்டித்துக் கொண்டு பா.ஜ.க.வுடன் சேர்ந்து ஆட்சி அமைக்க முன் வந்தபோது ஆளுநர் அரசியல் கட்சிக்காரர் போலவே செயல்பட்டார். ஆளுநர்கள் தங்களின் 'கைப்பாவையாக' செயல்படக்கூடியவர்களாக இருக்க வேண்டும் என்ற காரணத்துக்காக மோடி பிரதமரானவுடன் நான்கு ஆளுநர்கள் பதவி விலக நிர்ப்பந்திக்கப்பட்டனர். எம்.கே. நாராயணன் (மே. வங்கம்), அஷ்வனிகுமார் (நாகாலாந்து), பி.எல். ஜோஷி (உ.பி.). சேகர் தத்தா (சத்திஸ்கர்) ஆகியோர் அந்த ஆளுநர்கள். குஜராத் ஆளுநர் கம்லா பெனிவார் - அங்கிருந்து மிசோராம் மாநிலத்துக்கு தூக்கியடிக்கப்பட்டு, பிறகு பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

புதுச்சேரி மாநிலத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்கும் கிரேன்பேடி, டெல்லி மாநிலத்துக்கான தேர்தலில் பா.ஜ.க.வின் முதல்வர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு படுதோல்வியை சந்தித்தவர். இப்போது புதுச்சேரியின் 'நியமன முதல்வராக' செயல்பட்டு வருகிறார். ஆட்சியின் அன்றாடப் பணிகளில் குறுக்கிட்டு, அதிகாரிகளுக்கு நேரடியாக உத்தரவு போடுவதும் அதிகாரிகளை அழைத்து ஆய்வுக் கூட்டங்களை நடத்துவதும் அவரது வாடிக்கையாகிவிட்டது. இது ஆளுநரின் அதிகார வரம்புக்கு அப்பாற்பட்டது என்று மாநில முதல்வர் நாராயணசாமி பிரதமருக்கு கடிதம் எழுதியும் முதல்வர்

கடிதத்தைக் குப்பைக் கூடையில் வீசி விட்டார் மோடி. கடந்த மே 8, 2018 அன்று புதுவை முதலமைச்சர் அரசு ஆணை ஒன்றை பிறப் பித்தார். ஆளுநர்அல்லது ஆளுநர் அலுவலகம் வழியாக அதிகாரிகளுக்குப் பிறப்பிக்கப்படும் உத்தரவுகளை தொடர்புடைய அமைச்சர்கள் மற்றும் முதலமைச்சரோடு கலந்து பேசி அவர்களின் ஒப்புதலைப் பெற்ற பிறகே செயல்படுத்த வேண்டும் என்று அந்த ஆணை கூறுகிறது.

இப்போது டில்லி யூனியன் பிரதேச வழக்கில் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புக்குப் பிறகு புதுவை முதல்வர் நாராயணசாமி, கிரேன் பேடிக்கு எழுதிய கடிதம் கடுமையாக எச்சரிக்கிறது.

“உச்சநீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகாவது உங்களின் ஜனநாயக விரோத செயல்பாடுகளை நிறுத்திக் கொண்டு உங்கள் தவறுகளை சரி செய்து கொள்வீர்கள் என்று நம்புகிறேன். அன்றாட நடவடிக்கைகளில் தலையிடுவது, சட்டத்துக்குப் புறம்பாக தன்னிச்சையாக அதிகாரிகளை அழைத்து உத்தரவுகளைப் பிறப்பிப்பது போன்ற உங்களது செயல்பாடுகள் தொடருமேயானால் உச்சநீதிமன்ற அவமதிப்பு வழக்கைத் தொடர வேண்டிய நிலை உருவாகும்” என்று கடுமையாக எச்சரிக்கிறது அந்தக் கடிதம். “உச்சநீதிமன்றத்தில் அரசியல் சாசன அமர்வே தீர்ப்பளித்துள்ளதால் இந்தத் தீர்ப்பு டெல்லி மாநில ஆட்சிக்கு மட்டுமல்ல, அனைத்து மாநிலங்களிலும் ஆளுநரின் அதிகாரங்களை வரையறுத்துள்ள தீர்ப்பாகும்” என்று வாதிடுகிறார், புதுவை முதல்வர் நாராயணசாமி.

தமிழக அரசுக்கோ இத்தகைய அரசியல் நிகழ்வுகள் உச்சநீதிமன்றத் தீர்ப்புகள் குறித்து எல்லாம் அவர்கள் பார்வைக்குச் சென்றிருக்குமா என்பதுகூட தெரியவில்லை. இந்தியாவிலேயே ஊழல் நிறைந்த மாநிலம் தமிழ்நாடுதான் என்று அமித்ஷா பேசினால்கூட “அப்படி எல்லாம் அவர் பேசியிருக்க மாட்டார், அவர் இந்திப் பேச்சை தமிழில் மொழி பெயர்த்தவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளாமல் மொழி பெயர்த்திருப்பார்கள்” என்று விளக்கம் கூறும் பரிதாப நிலையில்தான் தமிழக அரசு அடிபணிந்து கிடக்கிறது.

**மோடி ஆட்சிக்கு வந்த உடனேயே 2015ஆம் ஆண்டு அருணாசலப் பிரதேசத்தில் அரசியல் சித்து விளையாட்டைத் தொடங்கிவிட்டார்கள்.**

ஆளுநர்கள் ஆளும் கட்சிகளின் பிரதிநிதிகளாகவே செயல்படுவது ‘சுதந்திரம்’ பெற்ற காலத்திலேயே தொடங்கிவிட்டது. அப்போது மத்தியிலும் மாநிலங்களிலும் காங்கிரஸ் கட்சிகளின் ஆட்சிகளே நடந்ததால் முரண்பாடுகளுக்கு வாய்ப்புகள் இல்லை; எனவே பிரச்சினைகள் எழவில்லை; அவ்வளவுதான்.

1970களிலும் 1980களிலும் இந்திராவுக்கு எதிராக செயல்பட்ட மாநில அரசுகளை ஆளுநர் அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்திராகாந்தி கலைத்தார். மொரார்ஜி தலைமையில் ஜனதா அமைச்சரவை பதவி ஏற்ற 1977ஆம் ஆண்டிலும் காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்த மாநிலங்களை ஆளுநர் அதிகாரத்தைப் பயன்படுத்திக் கலைத்து, அதே தவறைச் செய்தார்கள்.

உலகத்திலேயே மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட முதல் கம்யூனிஸ்ட் அமைச்சரவை கேரளாவில் ஈ.எம்.எஸ். நம்பூதிபாத் தலைமையில் 1957இல் ஏப்.5ஆம் தேதி அமைந்தது. போதிய மெஜாரிட்டி எண்ணிக்கை இல்லாத நிலையில் அய்ந்து சுயேச்சை உறுப்பினர் ஆதரவுடன் அமைக்கப்பட்ட அமைச்சரவையை இரண்டே ஆண்டுகளில் 1959, ஜூன் 31இல் அன்றைய நேரு ஆட்சி டிஸ்மிஸ் செய்தது. அந்த அமைச்சரவை கொண்டு வந்த நில சீர்திருத்தம் மற்றும் கல்வி மசோதாவுக்கு மதவாதிகளிடையே எழுந்த எதிர்ப்பு இதற்குக் காரணமாகக் காட்டப் பட்டது. இந்தியாவில் ‘356’ ஆவது விதியைப் பயன்படுத்தி நடத்தப்பட்ட இந்த ஜனநாயகப் படுகொலையைத் தொடங்கி வைத்தது நேருதான். அவருக்கு இந்த விபரீத ஆலோ சனையைக் கூறியவர் அன்றைய காங்கிரஸ் தலைவராக இருந்த அவரது மகள் இந்திரா காந்தி.

இந்தியாவில் ஒரே கட்சி ஆட்சி என்ற

**ஆளுநர்கள் ஆளும் கட்சிகளின் பிரதிநிதிகளாகவே செயல்படுவது 'சுதந்திரம்' பெற்ற காலத்திலேயே தொடங்கிவிட்டது.**

நிலை மாறி, மாநிலங்களில் காங்கிரஸ் அல்லாத கட்சிகள் ஆட்சிக்கு வரத் தொடங்கின. அடுத்தக்கட்டமாக கூட்டணி ஆட்சிகளின் 'யுகம்' மத்தியிலும் மாநிலங்களிலும் தொடங்கியது. இப்போது ஆளுநர் பதவியும் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் முக்கியத்துவமும் அதிகரித்து விட்டன.

ஆளுநர் பதவி குறித்து அரசியல் நிர்ணய சபையிலேயே கடும் விவாதங்கள் நடந்தன. அந்த விவாதங்களைப் படித்தால், மாநிலங்களைக் கண்காணிக்கக்கூடிய மத்திய அரசின் ஒற்றர்களாக செயல்படுவதற்கே ஆளுநர் பதவி உருவாக்கப்பட்டது என்ற முடிவுக்கு வந்து விடலாம். அரசியல் சட்ட உருவாக்கத்திற்கான நகல் வரைவுக் குழு ஆளுநர்கள் மாநில சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று தனது வரைவில் குறிப்பிட்டிருந்தது. இது குறித்து நடந்த விவாதத்தில் இந்த நடைமுறை இரண்டு முதலமைச்சர்களை உருவாக்குவதாகிவிடும் என்று கூறி இந்த முடிவு புறந்தள்ளப்பட்டது. கவர்னர் பதவிக்கான வேட்பாளர்கள் பட்டியல் ஒன்றைத் தயாரித்து சட்டமன்றத்தின் ஒப்புதலைப் பெற்று பட்டியலிலிருந்து ஒருவரை தேர்வு செய்ய குடியரசுத் தலைவருக்கு அனுப்பலாம் என்பது இரண்டாவது ஆலோசனையாக முன் வைக்கப்பட்டது. இந்த முறையினால் மாநிலத்தில் ஆளும் கட்சியின் ஆதரவு பெற்றவர்தான் ஆளுநராக வர முடியும். பிறகு மாநில அரசும் ஆளுநரும் கைகோர்த்து செயல்படுவார்கள் என்பதால் இந்த ஆலோசனையும் புறந்தள்ளப்பட்டது. ஒன்றை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் பிரிந்து செல்லும் வாய்ப்புகள் உருவாகிவிடலாம் என்ற அச்சமும் அதைத் தடுப்பதற்கான வலிமையான சட்டப் பிரிவுகளை உருவாக்கிட வேண்டும் என்ற துடிப்புமே அரசியல் நிர்ணய சபையில் காங்கிரஸ் தலைவர்களின் உளவியலாக இருந்தது. அந்த உணர்வுகளே அரசியல் சட்ட உருவாக்கத்துக்கு அடிநாதமாக இருந்தன. மாநிலத்து மக்களுக்கு நெருக்கமான ஒருவரை ஆளுநராக வரவிடக் கூடாது என்பதில் நேரு மிகவும் உறுதியாக இருந்தார். ஆளுநர் அந்த மாநிலத்துக்கு தொடர்பில்லாதவர்களாக வேறு மாநிலங்களிலிருந்து நியமிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை நேரு வலியுறுத்தினார். 1949 மே 31 அன்று நிர்ணய சபையில் நேரு இவ்வாறு கூறினார்.

"ஆளுநர்கள் மாநில மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்களாக இருந்தால் மாகாணப் பிரிவினை உணர்ச்சிகளையும், குறுகிய மாகாண உணர்வுகளையும் (Narrow provincial way of thinking) ஊக்கப்படுத்திவிடும்" என்றார்.

மற்றொரு உறுப்பினரான பி.எஸ். தேஷ்முக் வெளிப்படையாகவே கேட்டார்:

"முதல்வரும், ஆளுநரும் எல்லா பிரச்சினையிலும் ஒன்றுபட்டு நின்று, மத்திய அரசை எதிர்ப்பதிலும் அவர்கள் ஒன்றுபட்டு நின்றால், பிறகு என்ன செய்ய முடியும்? மத்திய அரசின் ஆணைகளையும் கட்டளைகளையும் மாநில அரசு செயல்படுத்த மறுத்தால் என்ன செய்வது? மத்திய அரசு மாநில அரசு மீது படை எடுத்துச் செல்லுமா?" என்று கேட்டார். இறுதியாக ஆளுநர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுபவராகவே இருப்பார் என்ற முடிவு எடுக்கப்பட்டது. இதற்கான திருத்தத்தை இறுதியாகக் கொண்டு வந்தவர் பிரஜேஸ்வர் பிரசாத். "மத்திய அரசின் அதிகாரம் அனைத்து மாகாணங்களிலும் நிலை நாட்டப்பட்டாக வேண்டும். இது அவசியமானது" என்பது தீர்மானத்துக்கு அவர் கூறிய காரணம்.

பிரிட்டிஷ் இந்தியாவில் 1935ஆம் ஆண்டு இந்தியர்களுக்காக உருவாக்கப்பட்ட சட்டத்தின் கீழ் 'மாகாண ஆட்சி'களைக் கண்காணிக்க ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்களுக்கு தங்கு தடையற்ற அதிகாரங்கள் வழங்கப்பட்டன. இந்தியாவின் 'சுதந்திரத்துக்கு'ப் பிறகும் அறுக்க முடியாத அடிமைச் சங்கிலியாக ஆளுநர் பதவி தொடருகிறது. ஆளுநருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைக் குறைத்து அமைச்சரவையின் ஆலோசனைப்படி செயல்பட வேண்டும் என்று

சட்டம் அவர்களுக்கான அதிகாரங்களைக் கட்டுப்படுத்தினாலும் ஆளுநர்கள் தங்கள் 'உசிதம்போல்' செயல்படக் கூடிய அதிகாரங்களை (Discretionary Powers) சட்டம் வழங்கியிருக்கிறது. அந்த அதிகாரங்கள் எவை என்ற வரையறைகளும் சட்டத்தில் தெளி வாக்கப்படவில்லை. இப்போது 'உசிதம்போல்' என்பது தான் சார்ந்துள்ள கட்சித் தலைமையின் 'உசிதம்போல்' செயல்படுதல் என்ற நிலைக்கு வந்து விட்டது.

ஆளுநர் மாளிகை ஆடம்பரங்களில் வீண் செலவுகளில் கொழுத்துப் போய் கிடக்கின்றன. நேருவின் சகோதரியாகிய விஜயலட்சுமி பண்டிட், மகாராஷ்டிர மாநிலத்தின் ஆளுநராக சிறிது காலம் பணியாற்றி, பிறகு பதவியைத் துறந்தார். "ஆளுநர் பதவிக்குக் கிடைக்கிற அதிக ஊதியமும், வசதிகளுமே ஒருவரை அப்பதவிக்குத் தூண்டுகின்றன. ஆளுநர் பதவி பயனற்றது. அரசமைப்புச் சட்டத்திலிருந்தே ஆளுநர் பதவியை அகற்றி விடவேண்டும்" என்று பதவி விலகியதற்குப் பிறகு அவர் துணிந்து கூறினார்.

'ஆட்டுக்குத் தாடி தேவை இல்லை; அதுபோல் ஆளுநர் பதவியும் நாட்டுக்குத் தேவை இல்லை' என்பதே தொடக்கக்கால தி.மு.க.வின் கொள்கையாகவும் இருந்தது.

மத்திய மாநில அரசுகளின் உரிமைகள் மறுபரிசீலனைக்குள்ளாக்கப்பட வேண்டிய சூழல் இப்போது உருவாகிவிட்டது. இது குறித்து ஆராய ஏற்கனவே பல ஆணையங்கள் நியமிக்கப்பட்டன. ஆந்திராவில் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியிலிருந்த முதல்வர் என்.டி.ராமாராவ் வெளிநாடு சிகிச்சைக்குச் சென்ற காலத்தில் அவரது கட்சியிலிருந்து சில துரோகிகளைப் பிடித்து அன்றைய பிரதமர் இந்திரா, 'தெலுங்கு தேச'க் கட்சி ஆட்சியைக் கவிழ்த்து, 'பாஸ்கர் ராவ்' என்ற துரோகியை ஆளுநரைப் பயன்படுத்தி முதல்வராக்கினார். ஆந்திராவே கொந்தளித்தது. மக்கள் எழுச்சிக்கு அடி பணிய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட இந்திரா காந்தி மீண்டும் என்.டி. ராமராவை முதல்வராக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார். இது மக்கள் சக்தி நிகழ்த்திய வரலாற்றுச் சாதனையாகும். மக்கள் எதிர்ப்பை திசை திருப்ப சர்க்காரியா ஆணையத்தையும்

**"ஆளுநர்கள் மாநில மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்களாக இருந்தால் மாகாணப் பிரிவினை உணர்ச்சிகளையும், குறுகிய மாகாண உணர்வுகளையும்** (Narrow provincial way of thinking) **ஊக்கப்படுத்திவிடும்" என்றார் நேரு.**

உடனே இந்திரா நியமித்தார். மாநில உரிமைகளை வலியுறுத்திய அந்த ஆணையத்தின் பரிந்துரை அப்படியே கிடப்பில் போடப்பட்டது.

மாநிலக் கட்சிகள் மக்கள் செல்வாக்கைப் பெற்று வளர்ந்து வருகின்றன தேசியக் கட்சிகள். 'இந்தியாவின் தேசிய முரண்பாடுகளில்' தங்களை நிலைப்படுத்திக் கொள்ள முடியாமல் சிதறிக் கொண்டிருக்கின்றன. அரசியல் சட்டம் உருவாக்கப்பட்ட சூழலில் இருந்த இந்திய தேசியத்தின் அடையாளம், இப்போது மாநிலங்களின் தன்னாட்சி அடையாளமாக உருத்திரட்சிப் பெற்று வருகிறது. சர்க்காரியா ஆணையம் மட்டுமல்ல; மத்திய மாநில உறவுகளை மறு பரிசீலனைக்கு உட்படுத்த நிர்வாக சீர்திருத்த ஆணையம் (1966), அரசியல் சட்ட செயல்பாடுகளை மறு ஆய்வுக் குள்ளாக்கும் தேசிய ஆணையம் (2000), புஞ்சி ஆணையம் (2007) என்று பல்வேறு ஆணை யங்கள் நியமிக்கப்பட்டு மாநிலங்களின் உரிமை களுக்கான பரிந்துரைகளை வழங்கியிருக் கின்றன.

மாநில சுயாட்சி முழக்கத்தை முன் வைத்த தி.மு.க. ஆட்சியிலிருந்தபோது மத்திய மாநில உறவுகள் குறித்து ஆராய டாக்டர் பி.வி. இராசமன்னார் தலைமையில் ஒரு குழுவை நியமித்தது. அக்குழுவின் பரிந்துரையை தமிழக அரசு ஏற்றது. அதனடிப்படையில் 1974ஆம் ஆண்டு ஏப்ரல் 16ஆம் நாள் தமிழ்நாடு சட்டசபையில் மாநில சுயாட்சித் தீர்மானத்தை முன்மொழிந்து பேசினார், அன்றைய முதல்வர் கலைஞர் கருணாநிதி.

"இராஜமன்னார் குழு பரிந்துரைகள் மீது தமிழ்நாடு அரசு அளித்திருக்கும் கருத் துரைகளை ஏற்று மத்திய அரசு ஏற்று, மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி கொண்ட உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்கும் அடிப்படையில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உடனடியாக திருத்தப்பட வேண்டும் என்று இப்பேரவை முடிவு செய்கிறது" என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானம் தமிழக சட்டமன்றத்தில் நிறை வேற்றப்பட்டது.

1974இல் கூட்டாட்சிக்கும் சுயாட்சிக்கும் குரல் கொடுத்த அதே தமிழக சட்டப் பேரவை இப்போது ஒற்றையாட்சிக்கு வாழ்த்துப் பா பாடிக் கொண்டிருப்பது நகை முரண்!

மாநிலங்களின் தனித்துவங்கள் அழிக்கப்பட்டும் பறிக்கப்பட்டும் ஒற்றை ஆட்சி என்ற பார்ப்பனிய இந்துத்துவ படுகுழிக்குள் தமிழினம் புதைக்கப்பட்டும் வருகிறது.

மத்தியில் ஏற்படும் ஆட்சி மாற்றங்களில் இதற்கான தீர்வுகள் நிச்சயமாக இல்லை. அன்னிய இந்திய பார்ப்பனிய எதிர்ப்புக் களங்களை நோக்கி மக்களைத் திரட்டுவதே இதற்கான விடியலை உருவாக்கும்.

**ஆதாரங்கள் :**

- Front Line
- Economic and Political Weekly
- *மாநில சுயாட்சி - முரசொலி மாறன்*
- *மலர்க மாநில சுயாட்சி - கு.ச. ஆனந்தன்*
- *'புரட்சிப் பெரியார் முழக்கம்'*
- *'இந்துஸ்தான் டைம்ஸ்'*

'மக்கள் முன்னணி' இதழுக்கு எழுதப்பட்டக் கட்டுரை

## நெஞ்சத்தைத் தொட்டுச் சொல்லுங்கள்!

திருப்பூர் மாவட்டம் திருமலைக் கவுண்டன்பாளையம் – தீண்டாமை ஒழிப்புச் சட்டத்துக்கு சவால் விட்டிருக்கிறது. தமிழகம் முழுதும் இதுபோல் எத்தனையோ 'பாளையங்களில்' நடக்கும் ஜாதி வெறித் தீண்டாமை இன்னும் வெளிச்சத்துக்கு வராமலே இருக்கிறது என்பதே உண்மை. ஜாதி வெறி இல்லை என்று நிச்சயமாக சொல்ல முடியாது.

அருந்ததியர் சமூகத்தைச் சார்ந்த தோழர் பாப்பாள் அரசுப் பள்ளியில் மாணவர்களுக்கு சமைத்த உணவு தீட்டாகி விட்டதாகக் கூறி அவரைப் பணி இடமாற்றம் செய்வதற்குத் தூண்டி அரசு அதிகாரிகளையும் பணிய வைத்திருக்கிறார்கள் அங்கே உள்ள கவுண்டர் சமூகத்தின் ஒரு பகுதியினர். இத்தனைக்கும் பாப்பாள் சொந்த ஊர் அது. 15 ஆண்டுகளுக்கு முன்பு இதே பள்ளியில் சத்துணவு சமையராக அவர் பணியாற்றத் தொடங்கியபோது இதே ஜாதி வெறி எதிர்ப்புக் காரணமாக இடமாற்றம் செய்யப்பட்டவர்தான் அவர்.

இடையில் ஒரு தலைமுறை மாற்றம் வந்த பிறகும் 'ஜாதி வெறி' மனநிலை மட்டும் 15 ஆண்டுகளாக மாறாத நிலையில் இருக்கிறது என்பதுதான் இதில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கிய அம்சம்.

கிராமங்களின் வாழ்வாதாரம் புறக்கணிப்புக்கு உள்ளாகிறது என்பது நியாயந்தான். விவசாயமும் கிராம மக்களின் நிலங்களும், வளங்களும் பெரும் தொழில் நிறுவனங்கள் சுரண்டுவதையும் சூறையாடுவதையும் கண்டிக்கிறோம்; தடுக்க வேண்டும்; என்கிறோம். களத்தில் இறங்கிப் போராடுகிறோம். அத்தனையும் நியாயம்தான். ஆனால் அதே கிராமங்களில் ஜாதி வெறியும் தீண்டாமையும் தலை விரித்தாடுகிறதே; ஊரும் சேரியும் பிரிந்து கிடக்கிறதே; அரசு செலவில் போடப்படும் இலவச உணவை சாப்பிட்டாலும் அதை 'தீண்டத்தகாத' ஒருவர் சமைக்கக் கூடாது என்று கொக்கரிக்கும் அளவுக்கு ஜாதி வெறி தலைதூக்கி நிற்கிறதே!

கிராமங்களையும் விவசாயிகளையும் சூறையாடும் பெரும் தொழில் நிறுவனங்களை எதிர்ப்பதில் உள்ள நியாயம் அதே கிராமத்தில் சேரி மக்களாக ஊரிலிருந்து பிரித்து வைக்கப்பட்டு அன்றாடம் அவமானத்தைச் சுமக்க வைக்கும் ஜாதி வெறியை எதிர்ப்பதற்கும் அதே நியாயம் பொருந்தாதா?

ஜாதியமைப்பின் கொடூர வடிவங்களைத்தாங்கி நிற்கும் கிராம அமைப்புகளை அப்படியே பாதுகாத்துக் கொண்டே விவசாயிகளின் உரிமைகளையும், நிலம் நஞ்சாவதையும், சுற்றுச் சூழலையும் மட்டும் தனிமைப்படுத்தி எதிர்ப்பது நியாயந்தானா?

நெஞ்சைத் தொட்டு பதில் சொல்லுங்கள்!

## ‘ஸ்ரீரங்கம் சொர்க்கவாசல்’ கதை

நாகப்பட்டினத்தில் இருந்து ஜைனக் கோவிலின் பொன் விக்கிரகத்தைத் திருடி வந்து, அதை உருக்கி எடுத்துப் பணமாக்கி, திருமங்கை ஆழ்வார் என்ற நாமக்காரன் சிறீரங்கம் கோவிலின் மதில்களைக் கட்டினான். ஆனால், அக்கோவிலின் மதில்களையும், கட்டடங்களையும் கட்டிய தொழிலாளிகளுக்கோ அந்தக் கோவிலின் சின்னத்தையே அதாவது ‘நாமத்’தையே சாத்திவிட்டான். கூலி கேட்ட தொழிலாளர்களை ஓடத்தில் ஏற்றி, கூலி தருகிறேன் என்று கூறி, காவிரி நடு ஆற்றில் கொண்டு போய்க் கவிழ்த்துக் கொன்று விட்டான் ஓடக்காரன் துணையோடு.

ஆழ்வாரும் ஓடக்காரனும் கோயில் வந்து சேர்ந்தவுடன் அந்தத் தொழிலாளிகளுடைய பிள்ளைகள் இருவரையும் சூழ்ந்துகொண்டு, “எங்கள் பெற்றோர் எங்கே?” என்று கேட்டனர். “ஒரு தீவிலே பொன்னையும் பொருளையும் காட்டிவிட்டோம்; அவர்கள் அதை மூட்டைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்” என்று ஆழ்வார் அவர்களுக்கு சமாதானம் சொன்னார்.

அதை நம்பாத அந்தப் பிள்ளைகள், “எங்கள் தகப்பன், பாட்டன்மாரை ஆற்றில் தள்ளிக் கொன்று விட்டீர்கள். அவர்களை உயிருடன் கொண்டு வந்து எங்கள் முன் நிறுத்தினாலொழிய, உங்களைப் போகவிட மாட்டோம்” என்று ஆழ்வாரை மறித்துக் கொண்டனர். ஆழ்வார் செய்வதறியாமல் விழித்து நின்றார்.

பிறகு ஆழ்வாரின் அரங்கன் கனவில் தோன்றி சொன்னதாக, அந்தத் தொழிலாளர்களின் பிள்ளைகளை அழைத்து காவிரியில் நீராடச் சொல்லி, அனைவரின் நெற்றியிலும் நாமத்தைச் சார்த்தி என் சந்நிதியில் கொண்டு வந்து நிறுத்து, பிறகு அவரவரின் அப்பன், பாட்டன்மாரின் பெயர் சொல்லி அழையுங்கள் என்றான்.

பின்பு “ஆழ்வாரின் திருவருளால் அவர்கள் அரங்கனின் திருவடிகளை சேர்ந்துவிட்டார்கள். நீங்கள் ஆழ்வாருக்கு எதிராகக் கலகம் செய்யாமல், அவருக்கு சேவை செய்யுங்கள்” என்று கூறினார்கள். அவர்களை ஆற்று வெள்ளத்தில் தள்ளி, படுகொலை செய்த இடத்திற்குக் ‘கொள்ளிடம்‘ என்றும், அந்தத் துறைக்குப் ‘பார்வானத்துறை’ என்றும் இன்றும் உள்ளது.

சிறீரங்கம் வைகுண்ட ஏகாதசியின்போது திறக்கப்படு கின்றதே ‘சொர்க்கவாசல்’ - அது எங்கே செல்லுவது தெரியுமா? திருமங்கை ஆழ்வார் கொள்ளிடக்கரையில் தொழிலாளர்களைப் படுகொலை செய்த அந்தப் பார்வனத் துறைக்குத் தான் செல்லுகிறது. இதுதான் ஸ்ரீரங்கம் சொர்க்கவாசல் ரகசியம்.

(ஆதாரம் - திருமங்கை ஆழ்வார் வைபவம்‘ என்ற நூல் )

## மோடி பிற்படுத்தப்பட்டவரா?

காங்கிரசு கட்சி யின் செய்தித் தொடர்பாளர் சக்திசிங் கோஹில் கூறியுள்ள கருத்து முக்கியமானது (9.5.2014).

மோத் கன்சாஸ் என்ற உயர்ஜாதி வகுப்பில் பிறந்த நரேந்திர மோடி 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் குஜராத் மாநில முதல்வராகப்பதவியேற்றார்.

அதன்பிறகு 3 மாதங்கள் கழித்து தனது ஜாதியை இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் இணைத்துக் கொண்டார். இதனால் உண்மையான பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகள் பறிக்கப்பட்டுள்ளன. எனவே, அந்த வகுப்பினரிடம் மோடி மன்னிப்புக் கேட்கவேண்டும். காங்கிரசு ஆட்சிக் காலத்தில் மோத் கன்சீஸ் என்ற ஜாதிப்பிரிவு உள்ளிட்ட 40 ஜாதிப் பட்டியலை பிற்படுத்தப்பட்ட பிரிவில் இணைத்தது. இதில் எதுவுமே மோடியின் ஜாதி அல்ல; மோடி மோத் கன்சாஸ் என்ற உயர்ஜாதிப் பிரிவைச் சேர்ந்தவர். வேறுபாடு கண்டு பிடிக்க முடியாத பெயர் ஒற்றுமை காரணமாக தனது ஜாதிப் பிரிவையும் பிற்படுத்தப்பட்ட வகுப்பிற்குள் இரகசியமாக சேர்த்து அரசாணையை வெளியிட்டார். இந்த மாற்றம் அவரது அமைச்சரவையில் இருந்த சிலருக்கு மட்டுமே தெரிந்ததாகும். ஊடகத்திலும் இந்த அரசாணை குறித்து எந்த ஒரு தகவலும் கூறாமல் மறைத்து விட்டனர். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவல் இது.

### மோடி தேநீர் விற்றாரா?

மோடி தேநீர் விற்றதாகக் கூறுவதும் கேள்விக்குறியே! ஒருகாலத்தில் தான் தேநீர் விற்றதாக மோடி கூறிவருவதும் பொய். அவரது உறவினர் நடத்திய உணவகத்தில் பொழுதுபோக்காக சில காலம் வேலை பார்த்ததையே அவர் அப்படி திரித்துக் கூறுகிறார் என்று சக்தி சிங் கூறினார்.

## *வாசகர்களிடமிருந்து...*




'நிமிர்வோம்' ஜூன் 2018 இதழ் வி.பி.சிங் சிறப்பிதழாகவே வெளி வந்திருப்பது மிகச் சிறப்பு. உ.பி.யில் வடநாட்டில் பிறந்தவராக இருந்தாலும், வட நாட்டவருக்கே உரிய வழமையான இந்து வெறி மதவாதம், பழமைவாதம் என்ற சிந்தனையிலிருந்து தன்னை முற்றாக விடுவித்துக் கொண்டு, சமூக நீதி – சமத்துவம் என்று சிந்தித்த வி.பி.சிங், உண்மையிலேயே ஒரு அதிசய மனிதர் தான். தனது பிரதமர் பதவியையே தூக்கி எறிந்து, அவர் பாதுகாத்துத் தந்த 27 சதவீத இட ஒதுக்கீட்டில்தான் ஒவ்வொரு பிற்படுத்தப்பட்ட அரசு ஊழியரும் பயன் பெற்று வருகிறார்கள். அந்த நன்றி உணர்ச்சி இல்லாத சமூகத்தில் 'நிமிர்வோம்' நன்றி உணர்வுடன் அவருக்கு சிறப்பிதழை வெளியிட்டிருப்பதைப் பாராட்ட வேண்டும். சொல்லப் போனால் தமிழ்நாட்டிலிருந்து தி.மு.க.வுக்கு ஒரு நாடாளுமன்ற உறுப்பினர்கூட இல்லாத நிலையில் முரசொலி மாறனுக்கு அமைச்சர் பதவி வழங்கியவர் அவர். தி.மு.க.கூட அவரை மறந்து விட்டது என்பது ஒரு சோகம் தான்.

– **நா. கண்மணி**, திருச்சி

ஏ.ஜி.நூராணி எழுதிய 'மசூதி இடிப்பை' காந்தி ஆதரித்தார் என்ற கட்டுரை, ஆர்.எஸ்.எஸ்.சின் பொய்ப் பிரச்சாரங்களை ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தியது. 'சங் பரிவார்' எப்போதுமே பொய்களைப் பேசுவதற்கு வெட்கப்படாதவர்கள், காங்கிரஸ் ஆட்சியில் இந்திரா கொண்டு வந்த அவசர நிலை காலத்தில் அதை எதிர்த்துப் போராடிய வீரர்களாக இப்போது வீரம் பேசுகிறார்கள். உண்மையில் அன்று சிறையிலடைக்கப்பட்ட ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் பலரும் தங்கள் விடுதலைக்காக இந்திராவுக்கு மன்னிப்புக் கடிதம் எழுதியவர்கள். இதற்கு சாட்சி வேறு யாருமல்ல. இப்போதும் ஆர்.எஸ்.எஸ். தீவிர ஆதரவாளராக பேசிக் கொண்டிருக்கும் சுப்ரமணியசாமியே ஜூன் 13, 2000 அன்று வெளி வந்த 'இந்து' ஆங்கில நாளேட்டில் அவசர நிலையில் சங் பரிவாரங்களின் துரோகத்தை விளக்கி விரிவான கட்டுரை எழுதினார். அதில் அவசர நிலை காலத்தில் துரோகம் செய்த பா.ஜ.க.வும், ஆர்.எஸ்.எஸ்.சும் 'அவசர நிலை எதிர்ப்பு நாள்' கடைபிடிப்பது கேலிக்குரியது. அப்போதைய ஆர்.எஸ்.எஸ். தலைவர் தேவரஸ், இந்திராவிடம் மன்னிப்புக் கேட்டு பல கடிதங்களை எழுதினார். இந்திரா பதிலளிக்கவே இல்லை. மகாராஷ்டிரா சட்டசபை பதிவேடுகளிலேயே இதற்கான ஆதாரங்கள் இப்போதும் இருக்கின்றன. இந்திராவின் 20 அம்சத் திட்டத்தையும் ஆதரிக்கத் தயாராக இருப்பதாக இந்திராவுக்கு கடிதம் எழுதியவர்கள் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள்'' என்று சுப்பிரமணியசாமி சங். பரிவார் பா.ஜ.க. துரோகங்களை அக்கட்டுரையில் விரிவாகவே பட்டியலிட்டுள்ளார். சங்பரிவார் பொய்யர்களின் கூடாரம்.

– **சு. அரங்கராசன்**, சென்னை–5

'அடையாளங்களை அழிக்கும் வடமொழி' என்ற கார்கியின் கட்டுரையில், ''மேற்குலக நாடுகளை ஒப்பிடும்போது இந்தியாவில் தங்கள் சுய சிந்தனையால் அறிவியல் உலகுக்கு பங்களிப்பு செய்தவர்கள் மிகக் குறைவுதான்'' என்ற கருத்து, கசப்பாகத் தோன்றினாலும் அதுதான் உண்மை. ''இந்திய விஞ்ஞானிகள் பெரும்பாலோர் கடவுள் நம்பிக்கை, ஆன்மிக சக்தி, சாமியார்களின் அற்புதங்களை நம்புகிறவர்களாகவே இருக்கிறார்கள் என்று அமெரிக்காவின் சமூக–கலாச்சார மதச் சார்பின்மை பற்றிய ஆய்வு நிறுவனம் (அய்.எஸ்.எஸ்.சி) வெளியிட்ட கருத்தை கட்டுரையாளர் மிகச் சரியாகவே எடுத்துக் காட்டியிருக்கிறார்.

– **ப. தமிழ்ச்செல்வன்**, காஞ்சிபுரம்

'அடிப்படையான பத்து கேள்விகளுக்கு அறிவியல் விளக்கம்' என்ற அறிவியல் கட்டுரை – மிகச் சிறப்பு. நவீன மூடநம்பிக்கைகள் போலி அறிவியலை அம்பலப்படுத்தும் கட்டுரைகளை 'நிமிர்வோம்' இதழ் தொடர்ந்து வெளியிட வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

– **க. திலகவதி**, குடந்தை

# உனது நா... எங்களது வாள்!



நீயின்றி இயங்காது எம் உலகு!
பேசுவதை நிறுத்திக்கொண்டாய்.
"உங்களிடம் பேசி என்ன ஆகப்போகிறது"
என்று நினைத்துவிட்டாயா?
பேசிப் பேசி அலுத்து விட்டதா?
சொல்வதற்கு இருந்ததை எல்லாம்
சொல்லிவிட்டேன் என்றா?
உன் வார்த்தைகளின் எசமானர்கள்
நாங்கள் என்று உனக்குத் தெரியாதா?
மௌனம் கனத்துக்கிடக்கிறது
எங்கள் பாதையை அடைத்துக்குக்கிடக்கும்
அசைக்க முடியாத பாறையாய்
வெடித்துக் கிடக்கும் வறண்ட வயலின்
வரப்பில், செய்வது அறியாது
நிலைகுலைந்து நிற்கும் குடியானவனைப் போல
நாங்களும் காத்துக்கிடக்கிறோம்
கார்முகிலாய் திரளும் சொற்களுக்காக.
கடல் பிளந்து மறுகரை சேர்க்கிறேன்
என்ற கிழவனை, பறித்துச் சென்றது யார்?
உன் சக்கர நாற்காலி உருளும் சத்தம்
வண்டியில் இருந்து இறங்கி, நீ
வீசும் சினேகப் புன்னகை
அதற்குப் பின்னால், எப்போதும்
ததும்பும் நகைச்சுவை
மேடையில் இருந்து, "உடன் பிறப்பே" என்று
அழைக்கும்போது, ஒரு கோடி
இதயங்கள் ஒரு வினாடி உறைந்து
துடிக்குமே அந்தக் கணம்
இதற்கு மாற்றாய் எதைத் தருவாய்,
நாளை முதல் சூரியன் உதிக்காது
என்றால், இந்தப் பூமி எப்படி சுழலும்..
எங்களது கேள்வியாய், தேடும் பதிலாய்,
சிந்தனையாய், சிந்தனை ஊற்றாய்,
மொழியாய், மொழியின் பொருளாய்,
செவிகளை நிறைத்த ஒலியாய்,
குரலாய் இருந்தது நீ.
எங்களோடுதானே எப்போதும்
இருப்பாய் இருந்தாய்,
திடீர் என்று எழுந்துபோய்க் கதவடைத்துக்
கொண்டால் எப்படி?
உனது நாவை எங்களுக்கு வாளாக
வடித்துக் கொடுத்தாய். அதைப்
புதுப்பொலிவு மாறாமல்
பாதுகாத்து வைத்திருக்கிறோம்.
இருண்மையும் எதிரிகளும் சூழ்ந்த
நேரத்தில், எங்கள் தோள்களின் மீது
ஏறிப் படை நடத்திடக் காத்திருக்கிறோம்
நீயோ, போதி மரத்து புத்தனைப் போல்
அமைதி காக்கிறாய்.
உன் ஆளுமையைத் துவேசித்தவர்கள்,
வசை பாடியவர்கள்,
தமிழ் வாழ்வின் தாழ்வுகளுக்கெல்லாம்
நீயே காரணம் என்றவர்கள்
எல்லோரும் இன்று
காத்துக்கிடக்கிறார்கள் எங்களோடு.
புழுதிக் காற்று வீசும் திசையறியா காட்டில்,
தெளிந்து தடம் காட்டும் உனது
சில வாக்கியங்களுக்காக..
நீ பேசுவதில்லை.
ஆனால், நாங்கள்
உன்னைப் பற்றியேதான்
பேசிக்கொண்டிருக்கிறோம்
வா.
வழியெங்கும் பூத்துக் கிடக்கிறது,
நீ வருவாய் என்ற நம்பிக்கை
நீயின்றி இயங்காது எம் உலகு."

**– கனிமொழி**




Printed by K.RAJENDRAN. Published and Owned by K.RAJENDRAN and Printed at
BEAUTIFUL PRINTER, 27/65, Devaraj Street, Royapettah,Chennai-600014 and Published at Old No.29,
New No.16, Ist Street, Journalists Colony, Srinivasapuram, Thiruvanmiyur, Chennai-600041. Editor:K.RAJENDRAN